www.tamilarangam.net


தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# வெளிச்சம்

சித்திரை–வைகாசி
2003

விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டுக் கழகம்

விலை 40/=














தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போரும் போராட்டமுமாகிய ஈழத்தமிழர் வாழ்வின் பதிவுகளாக எமது வெளியீடுகள்

### வெளிச்சம் சிறுகதைகள்

ஈழத்தின் 15 படைப்பாளிகளின்
வெளிச்சத்தில் பிரசுரமாகிய
தேர்ந்த சிறுகதைகள்
விலை ரூபா 100.00

### வாசல் ஒவ்வொன்றும்

போராட்ட வாழ்வின்
மெய்ப்பகுதிகளாகவும் போர்
வாழ்வின் அனுபவ வெளிப்பாடுகளாகவும்
அமைந்த 19 படைப்பாளிகளின் சிறுகதைகள்
விலை ரூபா 175.00

### வெளிச்சம் பவள இதழ்

போரும் போராட்ட வாழ்வுமாக
அமைந்த தமிழீழத்திலிருந்து பன்னிரண்டு
வருடங்களாக வெளிவந்துகொண்டிருக்கும்
வெளிச்சம் சஞ்சிகையின் 75 ஆவது
சிறப்பிதழ் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள்
முதல். தமிழினத்தினதும் தமிழகத்தினதும் பல
படைப்பாளிகள் பலரும் எழுதியுள்ள
படைப்புக்களை தாங்கி 300 பக்கங்களில்
விரிந்த சிறப்பிதழ்
விலை ரூபா 300.00

### முத்தமிழ் விழா மலர் 1991

விடுதலைப்புலிகள்
கலைபண்பாட்டுக்கழகம் நடாத்திய
முத்தமிழ் விழாவையொட்டி
வெளியிடப்பட்ட சிறப்பு மலர். ஈழத்தின்
அறிஞர்கள், படைப்பாளிகள்
பலரும் தம் படைப்புக்களை
இம் மலரில் முன்வைத்துள்ளனர்.
விலை ரூபா 200.00

### வெளிச்சம் கவிதைகள்

மூத்த கவிஞர்கள் முதல்
புதிய இளைய தலைமுறைக் கவிஞர்கள்
வரையான 55 பேரின் கவிதைகள்
விலை ரூபா 100.00

### ஆனையிறவு

தமிழீழ விடுதலைப்
போராட்டத்தின்
ஒரு முக்கிய நிகழ்வாகவும்
விடுலைப்புலிகளின் வீரம் செறிந்த
போராட்டத்தின் வெற்றிச்சின்னமாகவும்
அமைந்த ஆனையிறவு வெற்றியைப்பேசும்
கவிதைகள்
விலை ரூபா 125. 00

### வாசல் ஒவ்வொன்றும்

தமிழகத்தில்
வெளியிடப்பட்டிருக்கும்
இரண்டாம் பதிப்பு இந்தியா
விலை ரூபா 60. 00

### செம்மணி

செம்மணி புதைகுழிகள்
தமிழரின் வாழ்விலும் வரலாற்றிலும்
ஏற்படுத்திய உணர்வுகளை
வெளிப்படுத்தும் 24 பேரின் கவிதைகள்.
விலை ரூபா 50.00

### முத்தமிழ் விழா மலர் 1992

அழகிய ஓவியங்களுடன்
ஈழத்தமிழர் வாழ்வினதும்
போராட்டத்தினதும் வெளிப்பாடுகளைப்
பேசும் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள்
போர்க்காலப் பதிவுகள் எனப் பலவற்றையும்
ஒருங்கிணைத்து உருவாக்கிய மலர்
விலை ரூபா 300. 00

விடுதலைப்புலிகள்
கலை, பண்பாட்டுக்கழகம்
நடுவப்பணியகம்
நாலாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு,
தமிழீழம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### சிறுகதைகள்

செம்பியன் செல்வன் 08
முத்து இராதாகிருஷ்ணன் 18
விழிசிட்டி க.சிவராஜா 32
உடுவில் அரவிந்தன் 52

### கட்டுரைகள்

கலாநிதி ப.புஸ்பரட்ணம் 13
க.சட்டநாதன் 28

### களவெளிப்பாடு

தூயவன் 46

### நேர்காணல்

நர்த்தனன் 36

### மொழிபெயர்ப்புகள்

மூலம்: மார்கறெற் உவாக்கர்
தமிழில்: சோ. பத்மநாதன். 55

### மானுடத்தின் தமிழ்க்கூடல் 2003

[illegible]
[illegible] 21

### கவிதைகள்

மாலிகா 03
அலையிசை 05
புதுவை இரத்தினதுரை 06
தபின் 10
பத்தனையூர் வே.தினகரன் 17
அநாமிகன் 20
த.ஜெயசீலன் 29
எஸ்.பி. பாலமுருகன் 31
கோளாவில் கி.சுரேந்திரன் 34
தரும வதனன் 45
த.அகிலன் 49
த.மலர்ச்செல்வன் 50
மாணிக்கன் இளங்கோ 54



www.tamilarangam.net



தொகுப்பும் அமைப்பும்
ஆசிரியர் குழு

ஓவியங்கள்
முல்லைக்கோணேஸ்

அச்சுப் பதிப்பு
நிலா பதிப்பகம்
கிளிநொச்சி

வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை,பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்.

தொடர்புகளுக்கு
*வெளிச்சம்*
புதுக்குடியிருப்பு-04
முல்லைத்தீவு

*வெளிச்சம்*
விடுதலைப்புலிகள்
கலை,பண்பாட்டுக்கழகம்
மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி
கோண்டாவில்
யாழ்ப்பாணம்.

# தலைவாசல்

இதழ் 82 சித்திரை - வைகாசி 2003

## ஞானம் பெறவேண்டிய வேளையிது

தமிழ்மக்கள் மீண்டும் தங்கள் அனுபவங்களை மீட்டுப்பார்க்க வேண்டிய கட்டம் தோன்றியுள்ளது. கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாகப் பெற்றுவந்த வரலாற்றுண்மைகள் எத்தகைய பாடங்களைத் தந்தன என்பது மீண்டும் இப்பொழுது ஞாபகப்பரப்பில் வந்துநிற்கிறது.

பேச்சுவார்த்தைகள் மிகுந்த நம்பிக்கையளிப்பனவாகத் தொடங்கிப் பிறகு, நம்பிக்கையீனங்களிலேயே முடிவடைந்திருக்கின்றன. பேச்சுவார்த்தையைத் தொடங்கும்போது எப்பொழுதும் சிங்களத் தரப்பினர் தமிழ் மக்களுடைய கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து எல்லாவற்றையும் தருவதாகவே சொல்வார்கள். எல்லாவற்றையும் தருவதாகச் சொல்லித் தொடங்கும் பேச்சுவார்த்தைகள் எவற்றையுமே தரமுடியாதென்ற பதிலாகமாறி மெல்ல மெல்ல முறிவுக்கு வந்துவிடும்.

இந்தத் தடவை மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின்போதும் இத்தகைய வாக்குறுதிகளின் குவியல் தமிழ்மக்களின் முன் வைக்கப்பட்டன. பேச்சுவார்த்தை நகர்வுகளின் போது அவர்களுடைய வாக்குறுதிகளுக்கான பெறுமானங்களை அவர்களே நிறுவமுடியாமல் தடுமாறுவதை அவதானிக்கலாம். வெறும் வாக்குறுதிகளின் மறைவில் தொடர்ந்து எந்தத் தந்திரோபாயங்களையும், காய்நகர்த்தல்களையும் நடத்தமுடியாதென்ற அவர்களுடைய அனுபவத்தையே அவர்கள் மறந்திருப்பதுதான் இதில் மிகுந்த வேடிக்கையானது.

எப்போதும் தமக்குப் பாதுகாப்பளிப்பதாகச் சிங்களத்தரப்பினர் நம்பிக்கை கொள்ளுமளவுக்கு அவர்களிடம் ஒரு அரசியல் சட்டமூலம் இருக்கிறது. தமிழ்மக்களுடைய உரிமையை வழங்கமுடியாமற் தடுப்பதிலும் தமிழர்களை ஒடுக்குவதற்கும் அந்தச் சட்டமூலம், அந்த அரசியற் சாசனம் அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது. சிங்களத்தரப்பின் மூத்த அரசியலாளர்கள் வகுத்த தந்திரோபாயம் இது.

ஆனால் அவர்கள் பெருமைப்பட்டுக்கொள்ளும் இந்தத் தந்திரோபாய அரசியற் சாசனம்தான் இன்றைக்கு வெளியாரின் தலையீடுகளை அதிகளவிற்கு முழுஇலங்கைக்கும் கொண்டுவந்திருக்கிறது. தமிழர்களுடைய உரிமையைத் தடுக்கும்போது அவர்களுக்குத் தெரிவதில்லை தங்களுடைய உரிமையையும் சேர்த்து வெளியுலகத்திற்குத் தாரைவார்க்கிறோம் என்று.

வெளியுலகம் வகுத்து வைத்திருக்கும் தந்திரோபாயமான உரிமைகளுக்கான சட்டங்கள் உள்நாட்டு உரிமைமறுப்பாளர்களைச் சிறைப்பிடிக்கும் அளவுக்கு இன்று அவை வலுப்பெற்றிருக்கின்றன. இந்த யதார்த்தத்தை ஒடுக்குமுறை செய்யும் தரப்புப் புரிந்துகொள்ள வேண்டும். இதைப்புரியாததால்தான் இன்றைய வெளியார் தலைமீட்டின் நெருக்குவாரம் அதிகரித்திருக்கிறது.

இதைப்புரிந்து கொள்ளக்கூடிய மனவிரிவும் அரசியல் அறிவும் இல்லாத ஒரு யதார்த்தம் தொடர்ந்து பெருகி வந்தால் சிங்களவர் முழு இலங்கையையும் தாரைவார்த்து யார் யாரோவுக்கெல்லாம் கொடுத்துவிட வேண்டியே வரும்.

தமிழருக்குரிய உரிமையையே வழங்க அஞ்சுபவர்கள், தமிழீழம் என்ற சொல்லைக் கண்டே திகிலடைவோர் முழு இலங்கையையும் வேறு யாருக்கோ கொடுக்கத் துணிந்திருப்பதுதான் வேடிக்கையானது. இந்த இடத்தில் கூடுதலாகச் சிந்திக்கும் பொறுப்புச் சிங்களத் தரப்பிற்கேயிருக்கிறது.

தமிழர் தரப்பு மெய்யாகவே சமாதானத்திற்கும், இந்தத் தேசத்திற்கும், சுயமரியாதைக்குமாகச் சிந்தித்தும், செயற்பட்டும் வருகிறது. அதனாலேயே இடையீடுகளுக்கப்பாலான மெய்யான புரிந்துணர்வுகளுக்கும், மேலான சமாதானத்திற்குமாகவே அது பேச்சுவார்த்தை மேசைக்கு வந்தது. ❑

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முகிலிறங்கித் தவழும் முலையென
கிடக்கிறது மலை.
பனி விழுந்த பச்சை இலைகளின் மேல்
வெளிச்சம் தூவுறான் வெய்யோன்.
காலுக்கடியில் கலகலத்தவாறு
ஓடுறது நீரோடை.
குமரியழகோடு கிடக்கும் மரங்கள் தழுவி
போகும் வழியில்
ஈர இதழ் கொண்டு என்னையும் உரசி
மன்மத தேசம் போகிறது மலைக்காற்று.
என்னூருக்கில்லாத எழில் கொண்டு
இலங்கிறது இவ்வூர்.
"கோடிக்கண் வேண்டும் காணக் கோடிவிழி காணாது" என
இங்கொருநாள் வாழ்ந்தவனே எழுதியிருப்பான்.
இத்தனை அழகும் எனக்குமுரியதென
எத்தனை கவிதை எழுதியிருப்பேன்.
பொய்யாகி
பொசுக்கெனத் தீயெரித்துப் போனது
அக்கவிதையை.
வாழ்வின் இறுதியிலாயினும்
இங்கு வாழ்ந்திறக்க அவாவுற்றேன்.
என் கனவில் கல்லெறிந்து கலைத்தனர்
பாவியர்.

மீண்டுமொருமுறை பார்க்கக் கிடைத்ததே
போதுமெனக்கு.
இனி என்னூரின் நாயுருவிப் பற்றையிடையே
இலந்தை மரத்தின் சிறுநிழலின் கீழே
படுத்தபடி உயிர் நீக்கும் பாக்கியம் தா.
நேற்றென் பூட்டனையும்,
பாட்டனையும்,
நாளை எந்தையையும் எரிக்கும் சுடலையில்
நானும் எரியும் வரம்வேண்டும்.
தருவாயா இறைவா?

மாலிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**“நாம் ஒன்றுபட்ட மக்களாக ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு நிற்கவேண்டும்”**

*“நாம் ஒன்றுபட்ட மக்களாக ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும் மலைபோல உறுதியுடன் நாம் ஒன்று குவிந்து நின்றால் எம்மை எத்தகைய சக்தியாலும் அழித்துவிட முடியாது.*

*இந்த தேசிய ஒற்றுமையையும் இன ஒருமைப்பாட்டையும் ஒரு வலுவான அத்திவாரத்தில் கட்டி எழுப்புவதென்றால் எம் மத்தியில் நிலவும் ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். சமூக முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டும். சமூக அநீதிகள் அழிக்கப்பட வேண்டும். ஆண்-பெண் என்ற பாலியல் அடிப்படையில் தோற்றம் கொண்ட பாரபட்சங்கள் அகற்றப்பட வேண்டும்.*

*அனைத்து தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால் எமது விடுதலை இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம்.”*

*தமிழீழத் தேசியத்தலைவர்* **திரு.வே.பிரபாகரன்** *அவர்கள்*

www.tamilarangam.net



# புன்னகைக்கான நாள்

கடந்த காலங்களில்
தீ ளிந்தது.
ஊர் முகங்கள்
தீயினுள் குளித்தது.
குடியிருப்புகளில்
பாசிகள் படர்ந்தன.
சிவந்த விழிகள்
ஓயாத அலைகளாகி
கரை புரண்டோடினர்
கருகிய வீதிகளில்.....
புலர்ந்த புதிய நாளில்
வடக்கும் தெற்கும்
இணைந்த பொழுதில்
எரிந்த முகங்களில் சாம்பல்கள் படிந்தது.
கருவிகள் சுமந்தோர்
நம்பிக்கைகளோடு காவலரண் களில்
விழித்திருக்கின்றனர் இன்னும்.
என்றோ ஒரு நாள்
முட்கம்பிகளும், பொறி வெடிகளும்
இல்லாதழியும்.
பாசி படர்ந்த முகங்களில்
புன்னகைகள் நிறையும்.
வீரம் மீண்டுமொருமுறை
வரலாறாய் விரியும்.

அலையிசை



மறந்து போக முற்படும்
நினைவுகளைப் போல
உனது தரிசிப்பு நிகழ்கிறது.
எனது வாழ்வினைப் பறித்த
உனது பார்வைகளை
மனதுள் பதித்து விடவோ
அல்லது
ஞாபகச் சின்னங்களாய்
சேகரித்து வைக்கவோ
விரும்பவில்லை.

[illegible]

நீ வதைகளின் குறியீடாய் நிற்கிறாய்
புலர் பொழுதிற்காக
காத்திருக்கும் எனது விழிகளில்
உனது தீய நோக்கை
வீசுகிறாய்.
நிட்சயமாய் உன் அழிவு
பற்றி
நீ உணராதிருக்கிறாய்.

www.tamilarangam.net



# சாவுக்குப் பின்னான என் வாழ்வு

தி. தவபாலன்

நேற்றந்த ஊரின் நெல்வயல்கள் மீதுலவும்
காற்றளைந்தேன்.
மாலைக் கருக்கலிலே
வரம்பின் மேல்
வீற்றிருந்தேன்
என்னே விந்தையடா.
வானமதில்
சித்திரங்கள் தீட்டியதாய்
சிலதை அழித்தழித்து
விட்டதுவாய்
அந்த விரித்த பெருந்திரையில்
தூரிகையால் வர்ணம் தெளித்தவன் யார்?
ஓவியங்கள்
கிறீயதார்?
என்ற கேள்வியினைக் கேட்டபடி
கிடந்தேன்
பதிலெனக்குக் கிட்டவில்லை.
அவன் வரைந்த
படங்கள் தெரிந்ததன்றி
படைத்தவனைக் காணவில்லை.
கட்புலனுக்கெட்டாக் கலைஞனது
கைவண்ண
வித்தையினைக் கண்டு வியந்தேன்.
பக்கத்தில்
நாற்றெழுந்து காற்றில் நடனமிட
வளை நண்டு
சேற்றினுக்குள் ஏதோ செய்திருக்க
நீர்த்திவலை
எத்திக் கரை நனைத்து ஏகியது
வாய்க்கால்நீர்.
கத்தித் தொலைத்தெந்தன்
காதுகளைக் கிழித்தபடி
சென்றதொரு ஆட்காட்டி.
சீ.. சனியன் என்றபடி
நின்றேன்.
அருகிருந்த நெடுமரத்தின் மீதிருந்து
சின்னக் குருவியதின் சிறுவாய் பாடிற்று.
பொன்வண்டும் சுருதி போட்ட
அழகிருக்கே அற்புதம்தான்
கேட்டு அதிசயித்தேன்.




ஒற்றையடிப்
பாதையெங்கும் வாசம் பரப்பி
வண்டினத்தை
ஊத அழைத்தனவாம் உயிர்ப்புற்ற பூங்கொடிகள்.
சித்திரைக்குச் சேலை சுற்றி விட்டு
வயற்காரன்
நித்திரைக்குப் போனானா
நின்றழகைத் தின்னாமல்?
வெட்டுவதும் பின்னர் விதைப்பதுவும்
அவன் வேலை.
சுற்றுவதும் அழகைச் சுகிப்பதுவும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





விடுதலைப்புலிகளின் புகைப்படப்பிரிவு

என் வேலை.
ஏருழவன் வேர்வை இறைக்கின்றான்.
நான் கவிதைத்
தேரினிலேயேறித் திரிகின்றேன்.
நாளையிந்தப்
பச்சைப் பயிர் முற்றிப் படுத்தவுடன்
அவன் வந்து
கச்சையுடன் நின்று கதிரறுத்துப் போய்விடுவான்.
அச்சமில்லை

சோற்றுக்கு அவன்கையில் நெல்லிருக்கும்
பிச்சையில்லை.
வயலில் போய்நின்று வாய்பார்த்து
மெய்மறந்த எந்தனுக்கு மிஞ்சுவது ஏதுமில்லை.
பொய்யழகைப் பார்த்துப் பூரித்து
நிஜவுலகில்
வாழாமற் போனால் வறுமைக்கு இரையாகி
பாழாகி
வாழ்வு பட்டுச் சரிந்து விழும்.
பட்டுச் சரிந்து பாழாகிப் போனாலும்
தொட்ட மனம் ஏனோ துடிக்கிறது
தொடர்ந்தெழுது
விட்டு விட்டு வேறு வேலையினைத் தேடுவதால்
பட்டினிதான் போகும்
பசித்த மனம் ஆறாதே.
என்றலறும் நெஞ்சை எதைச் சொல்லித் தேற்றிடலாம்?
அன்றன்று வாழ்ந்து அழிந்தவுடன் அழிவதற்கா
வந்தவன் நீ என்றோர்
வலியகுரல் கேட்கிறது.
பொந்திருக்கும் சின்னப்பூச்சியதாய்
மற்றவர்போல்
சந்தையிலே நீயும் சரக்குவிற்க வந்தவனா?
என்றெனக்குள் யாரோ இரைகின்ற குரல் கேட்டு
வென்றெழுந்தோர் கவிதை
விளைச்சலுக்கு விதையெறிந்தேன்.
நெல்விதைக்கக் கொஞ்சம் நிலம் போதும்.
கவிதையெனும்
வில்வளைக்க நெஞ்சில் வீரியத்தின் வேர்வேண்டும்.
சொல்லடுக்கிச் சும்மா செய்வதெல்லாம்
கவிதையல்ல.............
கல்லென்று இறுகி களியென்று தானுருகி
வெல்லுவதே கவிதை வீச்சதுவாம்
என் வாழ்வும்
குந்த மனையென்றறோர் குடில் வாழ்வு ஆனாலும்
சந்தோஷம்.
நானெந்தன்
சாவுக்குப் பின் வாழ்வேன்.

புதுவை இரத்தினதுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உடும்பும். ஒரு வயதானவரும். மற்றும் சில இளைஞர்களும்

செம்பியன் செல்வன்



'ஹோ!.. ஹோ!.. ஹோய்.... சூ!.. பிடி.. விடாத பிடி... சூய்... அடி.. அடிடா.. மண்டையில போடு... ஓட.. தப்ப விட்டிடாத... வளைச்சு மடக்கிப் பிடி..' தூரத்தே மெல்ல மெல்லக் கேட்டுக் கொண்டிருந்த குரல்கள்.. மிக நெருங்கியதென பேரிரைச்சலுடன் எழலாயின. வேட்கை, குதூகலம், ஆர்ப்பாட்டம், வெறி கொண்டதான ஒலிக்கதம்பம் அப்பிரதேசத்தில் ஏற்கெனவே நிலவிக் கொண்டிருந்த சந்தடிகளையும் மீறி எழுந்து, அனைவரையும் அத்திக்கையே நோக்க வைத்தது.

கடந்த சில வாரங்களாக, வடக்கு நோக்கி மக்கள் புலம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். வடக்கு நோக்கிச் சென்ற வீதியின் திடீர் திருப்பமென எழுந்த கிளை வீதிகளிலும் மக்களின் போக்குவரத்துக் காணப்பட்டது. கிளை வீதிகளினால் திசைமயக்கம் ஏற்படுகிறது. மக்களின் பயணமோ சூரியப் பிரகாசத்தை நோக்கி மூட்டை முடிச்சுக்களுடன் மார்பிலும், தோளிலும், இடுப்பிலும் குழந்தை குட்டிகளை இறுக அணைத்துக்கொண்டு ஆடு, மாடு, கோழி, நாய், பூனை எனப் பின்தொடர நேர்ந்த மானிட நகர்வு ஒப்பற்ற அற்புத ஓவியம் உயிர் கொண்டதென சோகங்களை மீறி எழுந்து நின்றது. சமத்துவம், சகோதரத்துவம் என்பன சுதந்திரத்தை நோக்கி நகர்வதுபோல் மானிடத்தின் குரல்கள் கலவையிட்டுக் கொண்டிருந்தன.

அப்பிரதேசத்தை ஊடறுத்துக் கொண்டு நீண்டிருந்த மக்கிப்பாதை. இரு புறத்தும் பனை, தென்னை..கலட்டி நிலமென... பற்றைப் புதர்களும்.. கட்டையான பாலை மரங்களும் ஆங்காங்கு சிதறி வளர்ந்திருந்தன. கண்ணெறி தூரத்தில் கடலின் நீலம் நிறம் காட்டிக் கொண்டிருக்க.. ஆங்காங்கே கலட்டித்தறை பிளந்து காய்கறித் தோட்டம்... சாமை, தினை வயல்களாகத் தெரிந்தன. அவற்றிடையே எங்கெங்கு காணிலும் கோயில்கள் என்பது போல் கோயிற் கோபுரங்களும், கிணற்றடிகளும் காலைச் சூரியனில் உயிர்த்துவம் கொண்டிருந்தன.

மக்களின் வருகை ஓயாத அலைகள் எனப் பிரவகித்துக் கொண்டிருக்க, வெற்றிடமாகத் தெரிந்த கலட்டித்தறைகள் அவசரம் அவசரமாக புல் பூண்டு, பற்றைகள், கற்கள் அகற்றி, அல்லது கற்களால் சுவரமைத்து குடில்கள் அமைக்கப்பட்டு குடியிருப்புகளாக மாறிக் கொண்டிருந்தன. கைவிரல் தடிப்புள்ள தடிகள் கூட குடில்களின் கூரையின் 'கைமரங்களாக' மாறிக் கொண்டிருக்கும் விந்தையும் நடந்து கொண்டிருந்தது. கூரைகளாகப் பாய்,'றபர்சீட்', பழைய சீலைகள், 'போஸ்டர்' தட்டிகள், சாக்குகள் என அபேதமின்றிக் கலந்திருந்தன. கிடுகுகளுக்கோ பெரும் பஞ்சம். கிட்டினாலும் பெருவிலை. வீட்டைவிட்டு சொத்து சுகமனைத்தையும் விட்டு கையில் கொண்டுவர முடிந்த பொருட்களுடன் வந்தவர்களுக்கு கையில் காசேது. கையில் காசிருப்போருக்கு அவற்றைச் சில்லறையாக மாற்றிப் புழக்கத்தில் விட எங்கும் சில்லறைப் பஞ்சம். வங்கிகள் கூட ஆளுக்குச் சொற்பரூபாய்களையே வாடிக்கைக்காரர்கள் பெற உதவினாலும், அவையும் ரூபாய் நோட்டுக்களாக இருந்தமையால் வெறும் காகிதத்தாள்களாகவே பல்லிளித்துக் கொண்டிருக்க, சில்லறை நாணயங்களே வியாபாரப் பொருட்களாக அமோக விற்பனையிலிருந்தன.

வயல் பகுதிகளில் குடி கொண்டதென அந்த அம்மன்கர்ப்பக் கிருக தூண்டாமணி விளக்கொளியில் ஒளியையே பிரசாதமாகக் கொண்டு நாலிலையும் இரு பூக்களுமாகத்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பங்களிப்பு இவ்விடத்தில் இல்லாமல் போவது சிலரின் உயிரிழப்பிற்கு வழிவகுக்கும். லாபநட்டக் கணக்குப் பார்த்தால் ஒரு உயிரைக்காக்க போகிறவர்களும் திரும்பிவர முடியாது போகலாம்." ஆகியவற்றையும் சேர்த்துத்தான் பொறுப்பாளரின் இம்முடிவு அவரின் ஆத்மார்த்த உணர்வையே வெளிப்படுத்துகின்றது.

களமருத்துவர் ஒருவரும் இவர்களுடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் இரண்டாம் வருட மருத்துவபீட மாணவனுமாக இருவரும் புறப்பட ஆயத்தமாகின்றார்கள். தேவையானவை எனக் கருதிய மருந்துகளையும் உபகரணங்களையும் பெட்டியொன்றினுள் அடுக்குகின்றார்கள். இருவரையும் பயம் பற்றிக் கொள்கின்றது. சிகிச்சை செய்ய முயற்சித்து உயிரைப் பறித்து விடுவோமோ! எனும் அச்சம் அவர்களின் பேச்சையே அடைத்து விட்டது. எந்தப் பாரிய குண்டு வெடிப்புச் சத்தங்களும் அவர்களின் மூளையில் உறைக்கவில்லை. குறித்த இடம் வந்து சேர்ந்தவர்களுக்கு துர்நாற்றம் முகமன் கூறுகின்றது. ஆட்டுக்கொட்டகையொன்றின் அருகில் அப்பதுங்குகுழி அமைந்துள்ளது. ஒன்றரையடி அகலமும், ஐந்தடி நீளமும் குறைந்த ஆழமும் உடையதாகவே அது காணப்படுகின்றது. அதனுள் அப்பெண் சோர்ந்து கிடக்கின்றாள். மகப்பேறு நடந்து பலமணிகள் கடந்து விட்டிருந்தது. குருதியிழப்பு முகத்தை வெளிறடித்து விட்டுள்ளது. போர்ச்சூழலில் பிரசவித்த பசுந்தளிரை பரிதவிக்க விட்டு இறந்துவிடுவோமோ என்னும் ஏக்கம் அவள் பார்வையில் வெளிப்படையாகவே தெரிகின்றது. திரவஊடகம் ஏற்றி அவளின் குருதியிழப்பைத் தற்காலிகமாக ஈடுசெய்தவர்கள் சிறிது யோசிக்கின்றார்கள். தாங்கள் சிகிச்சை செய்வதிலும் பார்க்க, அனுபவம் வாய்ந்த மேற்படி மருத்துவமாதோ அல்லது மருத்துவரோ செய்வதே சாலச்சிறந்தது எனும் முடிவிற்கு வருகின்றார்கள். அவர்களை நாடிச் செல்கின்றார்கள்.

மேற்படி இருவரிடமும் குறித்த பெண்ணின் உடல்நிலையை விளக்கிக் கூறுகின்றார்கள். சிகிச்சையளித்து உதவும்படி கேட்கிறார்கள். அவர்கள் மறுத்துவிடுகிறார்கள், நீங்கள் வராவிட்டாலும் பரவாயில்லை நாங்கள் அப்பெண்ணை இங்கு கொண்டுவருகின்றோம் எனவும் கேட்டுப்பார்த்தார்கள். அதற்கும் அவர்கள் நாகரீகமாக மன்னிப்புக் கேட்டு மறுத்துவிட்டார்கள். இதற்குமேல் ஒன்றும் செய்யமுடியாது. நடப்பது நடக்கட்டும். நாங்களே முயற்சிப்போம் எனும் முடிவிற்கு வருகிறார்கள்.

மீண்டும் திரும்பியவர் முகங்களை உறவினர்கள் உற்று நோக்குகின்றனர். அதனூடு எதையோ வினாவ முயற்சிக்கின்றனர். எதுவும் கதைக்காமல் இருவரும் பதுங்குகுழியினுள் இறங்குகின்றனர். ஒருவன் நோறிவாரணி ஊசிமருந்தை தாயின் தோள்மூட்டுத் தசையில் ஏற்றுகின்றான். மற்றவன் கையுறைகளை அணிந்து கொள்கின்றான். தனது இடக்கையால் வயிற்றறையைத் தொட்டுணர்ந்தவண்ணம், வலக்கையை மெதுவாக மிகமெதுவாக கருப்பை வாசலுக்கு கொண்டு செல்கின்றான். சூழ்விந்தகம் வெளிவரவில்லை. தொப்பிழ்கொடி மட்டும் தட்டுப்படுகின்றது. தொப்பிழ் கொடியை அதிகவிசை கொடுத்து இழுத்தால் கருப்பை புறவளமாக வெளித்தள்ளப்படலாம். பார்த்திருக்க இரத்தம் பெருகி உயிரிழப்பு ஏற்படும். அதனைத் தவிர்ப்பதற்காக மிக நிதானமாக தனது கரத்தினை உட்செலுத்துகின்றான். அடிப்பானைத் தயிர் வழிக்கும் உணர்வுடன் சூழ்விந்தகத்தை கருப்பைச் சுவரிலிருந்து பிரித்தெடுக்கின்றான்.

அதிகூடிய நிதானம் ஏற்படுத்திய மன அழுத்தம் இருவர் உடல்களையும் வியர்வையில் தெப்பமாக்கிவிட்டது. அநுபவமே சிறந்த ஆசான் ஆகமுடியும் என்பதை அநுபவவாயிலாக உணர்ந்து கொள்கின்றனர். பல நிமிடபிராயத்தனத்திற்குப் பின்னர் சூழ்விந்தகத்தையும் தொப்பிழ் கொடியையும் வெளியில் எடுக்கின்றனர். மீதிகள் எதுவும் உள்விடப்படவில்லை என்பதை உறுதி செய்ய அவற்றின் முழுமையை ஆராய்கின்றனர். மகப் பேற்றிற்குப்பின்னான குருதிப்பெருக்கு ஏற்படுகின்றதா என்பதனையும் சிறிது நேரம் அவதானிக்கின்றனர். ஆபத்தான கட்டம் தாண்டப்பட்டுவிட்டது. இனி எப்பகுதிக்குள் செல்ல வேண்டும். எனும் முடிவை அவர்கள்தான் எடுக்க வேண்டும் இடையில் கவனம் கலைக்கப்படக் கூடாது என்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தொலைத் தொடர்புக் கருவியை இயக்குகின்றனர். அது இவர்களை அழைத்த வண்ணம் உள்ளது. உடனேயே வருகின்றோம் என்றவர்கள் தங்கள் உந்துருளியை நோக்கி விரைகின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கனவுகள் பற்றியதான கனவு

விழித்திரை ஒளி விளங்கும்
போதெல்லாம்
எனது கார்சட்டைக்கால
கனவுகளின் நினைவு வரும்.
அவை பெரிய ஒளிவட்டம்
பற்றியதாகவோ
இருள் தின்பதைப் பற்றியதாகவோ

தி. தவபாலன்



நெருப்புப் பற்றியதாகவோதான் இருந்திருக்கின்றன.
அவைகள் எல்லா நிறங்களிலும்
மஞ்சள் சிவப்பு பச்சை ஏன்
கறுப்பு நிறத்திற்கூட
விரிந்திருக்கின்றன.
ஆனாலும் எனக்கே தெரியாமல்
கனவு காணும் என்னுடைய கண்கள் திடீரென்று
செத்துப் போயின.
நிறமிழந்து நிழலாய்
வந்த கனவுகள் கூட
கொஞ்சநாளில் காணாமல் போயின
என்ன முயன்றும் பின்னர் அந்தக்
கனவுகள் வரவேயில்லை!
இப்போதெல்லாம் எனது இயக்கம் முழுதும்
பழையதை இரை மீட்டலும்
கனவு காண்பது பற்றியதான
கனவும் தான்.

தபின்

இருந்து வாற கோயில் இந்த இவங்கள் வந்து இப்படி நாசம் செய்யிறாங்களே... இதைக் கேட்பார் ஒருவருமில்லையா?..'

அப்போதுதான் அந்தக் கூச்சல் அவர்காதிலும் விழுந்தது. வயதில் காரணமாக கண்பார்வையும், செவிப்புலனும் குறைந்து கொண்டு வருவதை உணராமலோ, அல்லது ஏற்றுக்கொள்ளாமலோ வாழ்ந்து கொண்டிருக்கும் வீம்பு பரவணிச்சொத்து.

எங்கிருந்து எத்திசையிலிருந்து எதனிலிருந்து இந்த இரைச்சல் எழுகின்றது? என்ற நிதானம் பிடிபடாமல், இரு இமை வரிசைகளையும் எல்லைக் கோடாக்கி, இடதுகைப் பெருவிரலையும் ஆட்காட்டி விரலையும் விரித்து மற்ற மூன்று விரல்களாலும் ஒளித்திரை மறைப்புக்கட்டி விழிகளின் பார்வையைக் கூர்மையாக்கி நெடுந்தொலைவில் எறிந்தார்.

தற்போது அவரையே நோக்கிச் சப்தங்கள் நெருங்கி வந்து கொண்டிருந்தன. காட்சியும் நெருங்கி நெருங்கி வருவதென தெளியத்தொடங்கின.

நாலைந்து இளைஞர்கள் எதனையோ துரத்திக்கொண்டு வருகிறார்கள். ஆளுக்காள் கைகளில் தண்டும், தடியும் பொல்லும், கற்களுமாக.. அவர்களுக்கு முன்னால் எதுவோ வேகமாக ஓடிவந்துகொண்டிருக்கிறது. அது என்னது என்று அவருக்கு முதலில் பிடிபடவேயில்லை...

'விடாத... எறி... கொல்லு... புத்துக்குள்ள போகவிட்டிராத...' இளைஞர்களின் துடிப்பு.. ஆவல்... ஆவேசம்.. செயற்கரியதைச் செய்து முடிக்க வேண்டும் என்ற பரவசம் அவர்களிடையே தொற்றியிருந்தது.

அவரைத் தாண்டி அது ஓடியபோதுதான் அவருக்கு அது என்னதென்று புரிந்தது.

ஆ! எவ்வளவு பெரிய உடும்பு..
சாப்பிட்டு எவ்வளவு நாளாயிற்று?

முந்தி இளமையில உடும்பு வேட்டைதான் பெரிய வேட்டை.. அந்த இறைச்சி.. சிலசமயம் அதிலிருந்து வாற முட்டை.. கலந்து சமைத்த கறியும் அரிசிப்புட்டும் வாசனை இப்போதும் மூக்கு நுனியில் அமர்ந்து கொண்டு.. நாவில் வீணியாகச் சுரக்கச் செய்கிறதே..

இளைஞர்கள் அவரைக்கடந்து ஓடினார்கள். வேடிக்கை பார்க்கும் நோக்கத்துடன் ஒரு கூட்டம் இளைஞர்களைப் பின்தொடர்ந்தது.

'அதைப் போக விடாத.. நீ முன்னால போய்வளை.. நீ அந்தப்பக்கமாகப் போ... நான் இந்தப் பக்கமாக வாறன்.. ஆளைத்தப்பவிடாத.. எப்ப இருந்து துரத்திக் கொண்டு வாறம்.. அவர் எங்களுக்கு

www.tamilarangam.net



விளையாட்டுக் காட்டுறார்'

இளைஞர்களின் பேச்சிலும், உடல் இளைப்பிலும் உழைப்புத் தெரிந்தது.

உடும்பு வளமாக மாட்டிக் கொண்டது. எப்பக்கம் சென்றாலும் ஆபத்து. வட்டம் போட்டு ஓடத்தொடங்கியது. இளைஞர்கள் மெது மெதுவாக நெருங்கி வரத் தொடங்கினார்கள். அவர்களின் போராட்டம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. உடும்பு இனி அவர்கள் கையில்.. மிகுந்த நம்பிக்கையுடன்.. உடும்பிற்கும் அவர்களுக்குமிடையிலுள்ள இடைவெளி குறுகத் தொடங்கியது... உடும்பும் களைத்துப்போய்விட்டது... அது குறுகிய இடைவெளியில் அலைபாயத் தொடங்கியது... அரசமரத்தைச் சுற்றிச்சுற்றி ஓடத்தொடங்கியது... அவர்கள் அரசமரத்தைச் சுற்றி நிலை எடுத்துக் கொண்டார்கள். உடும்பு ஓடியோடிக் களைத்துப் போனபோதுதான் அதற்கு புற்றுக்கள் கண்ணில் பட்டிருக்கவேண்டும்...

ஆ!.. என்ன மாயம்...
உடும்பு எங்கு போயிற்று? இளைஞர்கள் விக்கித்து நின்றார்கள்.

கிழவருக்கு பெரு மகிழ்ச்சி உள்ளூரப் பெருக்கெடுத்தது.

உடும்பு எந்தப் புற்றுக்குள் புகுந்தது என்பது அவருக்கு புரிந்திருந்தது. இளைஞர்கள் தோற்று வெறும் கையுடன் சிறிது நேரத்தில் போய்விடுவார்கள். பின்பு நானே ஆறுதலாக உடும்பைப் பிடித்து விடுவேன்.

"பாவம் அவங்கள் எங்கையிருந்து துரத்திக்கொண்டு வந்தவங்கள்... நல்லாக் களைச்சுப் போனாங்கள்... இனிப்பேசாமல் போய்விடுவான்கள்.. எனக்கு நல்ல வேட்டைதான்." கிழவர் ஏதேதோ எதிர்பார்ப்புகளுடன், அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றார்.

" உடும்பு எதால போனது?.. ஆராவது பாத்தனியளே?.."

" அதோ!.. அந்தப்புத்துக்கைதான் போனது.. " வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் ஒருவன் கத்தினான். தானே வலியச் சென்று இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டு அவர்களில் ஒருவனாக உற்சாகம் கொண்டான்.

கிழவரின் கனவு கலைய, சிறுவனை உறுத்துப் பார்த்தார்.

வைரவகுலம் இருந்த பகுதியையும், ஆலமரத்தையும் பிணைத்திருந்த புற்றுக்குள் அது நுழைந்திருந்தது.

" மச்சான்! இப்ப என்ன செய்வம்?.. " ஒருவன் கவலையுடன் கேட்டான்.

" புத்தைக் கொஞ்சம் இடிச்சுப் பாப்பமா?.. அதுக்கு அலவாங்குக்கு எங்க போறது..?"

" நான் கொண்டு வாறன்..? " சிறுவன் ஓடி, எங்கிருந்தோ ஒரு அலவாங்குடன் வந்தான்.

கிழவருக்கு பற்றிக் கொண்டு வந்தது.

" தம்பிமார் என்ன விசர் வேலை செய்யப் போறியள்?..

'ஏன்' என்பது போல் அவரை முதன் முதலாகப் பார்ப்பவர்கள் போல் ஏறிட்டார்கள்..

'என்ன புத்தை இடிக்கவோ போறியள்..?'

' இடிச்சா என்ன?..'

' தம்பிமார் கொஞ்சம் யோசியுங்க.. இது தெய்வ சந்நிதி.. இதையே இடிக்கப்போறியள்... சாமியையே உடைக்கப் போறியள்..?' அவரின் வார்த்தைகள் அருகே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களின் இதயத்தை அசைத்தது போலிருந்தது. அவர் அருகே நகர்ந்தார்கள்.

' நாங்கள் சாமியை உடைக்கேல.. புத்தைத்தான் இடிக்கப் போறம்... வைரவ சூலம் எவ்வளவு எட்ட இருக்கு.. நீங்கள் வீணா புரளியைக் கிளப்பி விடுறியள்..'
அவருள் விஷம் ஏறத் தொடங்கியது.

'நானோ.. நானோ புரளியைக் கிளப்பி விடுறன்.. தம்பி நீங்கள் நல்லா வார்த்தையை அளந்து கதைக்கவேணும் கண்டியளோ.. என்ன பிழை செய்யிறியள் எண்டு தெரியுதே?..'

'அவர்கள் திகைத்தார்கள்.'

' நீங்கள் புத்தை இடிக்கப்போய் உள்ள ஏதும் பாம்பு கீம்பு இருந்தால்.. இருந்தால் என்ன இருந்தால்.. கட்டாயம் இருக்கும்.. நானே பலமுறை கண்டிருக்கிறன்... எட்டடி நீளம்.. அது கோயில் பாம்பு... எவ்வளவு காலமாச் சீவிக்குது... அதுக்கு ஏதும் தீங்கு வந்தா.. நாங்கள் இப்ப படுற துன்பத்தைவிட எவ்வளவோ துன்பப்பட நேரும்..'

சூழவிருந்தமக்கள் பயந்தார்கள். புதியவர்கள்..

'கோயில் பாம்போ..'

கிழவருக்கு தன் உபாயம் வென்று வரும் களிப்பு...

' இப்பதான் கொஞ்சக் காலமாக மக்கள் வரத் தொடங்கின பிறகு பாம்பு வாறது குறைஞ்சு போட்டுது.. முந்தி ஐயர் வந்து அம்மனுக்கும் வைரவருக்கும் பூசைபண்ணேக்க அம்மன்ர கர்ப்பக்கிரகத்துக்குள்ள நுழைந்து, தூண்டாமணி விளக்குச் சங்கிலியில சுற்றிக்கொண்டு அம்மன் முன்னால படமெடுத்தபடி ஆடும்..'

அவர் சொல்லி முடியவில்லை மக்கள் கூட்டம் அவரைச்சுற்றிக்கொண்டு நின்று 'ஆஹாரம்' போட்டது. மெய்சிலிர்த்தது.

'தம்பியவை அவர் சொல்லறதைக் கேளுங்க. தெய்வ குற்றம் கூடாது.. அதோட அவையின்ர பரம்பரைக் கோயில்... அவரிட்டயும் கேக்க வேணாமே...'

'அப்ப என்ன செய்யச் சொல்லுறியள்... எவ்வளவு தூரத்திலிருந்து துரத்திக்கொண்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாறம்.. எங்கட உழைப்பு எல்லாம் வீணாப் போயிடும்..'

கிழவர் கதை திரிக்கத் தொடங்கினார்.

'தம்பிமாரே!.. எங்கட பேச்சுக்கள் உங்கட காதில ஏறாதுதான்.. நாங்க தெய்வமா வழிபடுற பாம்பு.. அதின்ர வீட்டை நீங்க இடிச்சா அதின்ர சாபம் எங்களை எல்லாம் வீட்டைவிட்டு எழுப்பிப் போடும்.. இப்ப இவையெல்லாரையும் பாருங்க.. எல்லாரும் நகரவாசிகள்.. கோயில் இல்ல குளமில்ல எண்டு அங்க கனக்க ஆட்கள் வாழுகினம்.. அதுதான் இப்படி வீடுவாசல் இழந்து வந்திருக்கினம்..' கிழவர் பேச்சை முடிக்கவில்லை.

வந்த மக்கள் மனதில் ஏதேதோ எண்ணங்கள் புரள்வது முகத்தில் தெரிந்தது. தெய்வ சாந்நித்தயம் பெற்ற பாம்பு!

" தம்பிமார் பெரியவர் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்க... நாங்க இவ்வளவு கஷ்டப்படக் காரணம் கடவுளை மறந்ததாலதான்.. இனி நீங்கள் இதில கை வைக்க விடமாட்டம்.. உங்களால பாம்புக்கு கெடுதல் வந்தாலும் பாதிக்கப்படப்போவது நாங்கதான்.. பாம்பு சில வேளை வெளிய வந்து இந்த மக்கட் கூட்டத்துக்க வந்திட்டா.. நாங்கள் புள்ளை குட்டிகளோட வந்திருக்கிறம்.. தெய்வப் பாம்பை அடிக்கச் சொல்லுறதும் பாவம்... ஆனா அது இந்தச் சனக்கூட்டத்துக்க நடமாடுறதும் நல்லது இல்ல.. இதுகளை நன்றாக யோசியுங்க தம்பியளே!..'

'அதுமட்டுமில்ல.. இது அரசமரம் கண்டியளோ.. எத்தனை நூற்றாண்டுகளாக நிக்குதோ தெரியாது... எனக்கு விபரம் தெரிந்த நாளிலேயே இந்தத் தோற்றத்தில தானிருக்கு.. நீங்கள் ஏதும் செய்யப்போய் அரசமரம் பட்டுப் போனா...'

' நீர் அரசைப்பற்றித்தான் இப்ப கவலைப்படுறீர், என்ன?..'

' நான் கவலைப்படாமல் வேற ஆர் கவலைப்படுகிறது. இந்தவளவு... கோயில்... தலமரமான ஆலமரம் இதுகளின்ர புனிதத்தையும், பெருமையையும் காப்பாத்துற பொறுப்பு வழிவழியாக எங்களுக்கு இருக்கு... இவற்றைக் காப்பாற்றி மக்களுக்கு வழங்குற பொறுப்பும் எனக்கு இருக்கு கண்டியளோ.... தம்பிமார் என்ர வீட்ட வாங்க எழுத்துறுதியைக் காட்டிறன்.. இன்னும் சொல்லப்போனா நீங்க துரத்திவந்த உடும்பு கூட கோயிலுக்குத்தான் சொந்தம்.. உதைப்போல எத்தனை உடும்பு.. பன்றி வந்திருக்கும் போயிருக்கும்... இந்த எல்லைக்குள் வந்துவிட்டால் அதுகளும் புனிதமாகிவிடும்..' கிழவரின் பேச்சுக்கு கூட்டத்தில் இருந்து 'ஆஹாரம்' எழுந்தது.

இளைஞர்கள் முகத்தில் உறுதி தெரிந்தது...

'வாங்கடா.. மச்சான்.. உவர் என்ன செய்யபோறார் எண்டு எனக்கு நல்லா விளங்குது... எப்படியும் உந்த உடும்பை பெரியவர் அடிச்சுக்கொண்டு போகப் பார்க்கிறார்.. மக்களை தன் பக்கம் இழுக்கப் பேசிற பேச்சு இது... வாங்கடா போவம்' இளைஞர்கள் நகர்கிறார்கள் 'பெரியவர் துண்டை விரித்துப் போட்டுக் குந்துகிறார்.

இருள் கவிந்த வேளை.

மக்கள் நடமாட்டம் கண்களுக்குத் தெரியும் நிழலாட்டம்.

கோயில் முற்றத்து கண்ணாடிப் பெட்டி மண்ணெய் தெருவிளக்கு எரிகிறது. சமீபகாலமாக மீண்டும் பழைய நிலைக்குச் சென்றுவிட்ட விளக்கேற்றல். பக்கத்து வளவில் பற்றைகளுக்கிடையில், அரசமரப்புற்றோடு தொடர்பு கொண்டதென வரிசையில், நேர்கோடாக அந்தப்புற்று அமைந்திருந்தது. அந்தப்புற்றினைச் சார்ந்து காலையில் உடும்பை விரட்டிச் சென்ற இளைஞர்கள் மெல்லிய ஒளியில் நிழலோடு நிழலாக நிற்கின்றனர்.

'மச்சான் பெரிசு விசயகாரன்.. எங்களைக் காய் வெட்டிப்போட்டு என்ன செய்யிறார் எண்டுபார்!..' என்றான் ஒரு இளைஞன்.

கிழவர் தன்னை ஒருவரும் பார்க்கவில்லை என்ற துணிவில், கையில் கந்தல்



துணியுடனும், சிறு மண்ணெய் போத்திலுடனும் அக்கம் பக்கம் பார்த்தவாறு அரசமரப் பின்புறமாக புற்றுக்களை நோக்கிச் சென்றார்.

அந்தப் புற்று வாயை துணியால் அடைத்து சிறிது மண்ணெய் ஊற்றி மூட்டினார். முதலில் எரிந்ததுணி பின்னர் காற்றிலலைந்து புகையத் தொடங்கியது. கிழவர் ஊதத் தொடங்கினார். பின்னர் தன் தோள் சால்வையால் விசிறத் தொடங்கினார். புகை எங்கும் எழலாயிற்று.

' மச்சான் நான் சொன்னபடிதான் எல்லாம் நடக்குது புகையடிச்சு உடும்பைப் பிடிக்கப் பாக்கிறார். அதுவும் ஒருவழிதான் அயலில வேறு புத்துக்களில்லாவிட்டால் விசயம் சரிவரும்.. ஆனால் இந்தப்புத்தைப் பாத்தியே.. அந்தப் புத்துக்கு நேராக இருக்கு.. காலமையே கவனிச்சனான்.. இரண்டிற்குமொரு ஒற்றுமையிருக்கு.. அந்தப்புத்து வழிக்கு இது போறவாற வாசலாத்தானிருக்கும்.. அங்க புகையடிச்சா உடும்பு கட்டாயம் இந்த வழியாத்தான் வரும்.. புகை வாற வழியால வரமாட்டுது கண்டியோ.. எங்கட ஊரில உடும்பு பிடிக்கப் போறவை காட்டித்தந்த பாடம் இது... பாப்பம் கிழவன் எங்களை ஏமாத்தப்போறானா நாங்கள் வெல்லப் போறமா எண்டு..'

இளைஞர்களின் மனதில் உற்சாகம் மிகுந்தது. துடிக்கும் நெஞ்சங்களுடன் தங்களருகே காணப்படும் புற்றைக்காவல் செய்யத்தொடங்கினார்கள்.

கிழவர் பெரும் உற்சாகத்துடன் கந்தைச் சாக்குகள், காய்ந்த புற்கள் எனத்திணித்து புகைமூட்டம் போட்டுக்கொண்டிருந்தார்.

நட்சத்திரப் பொட்டுக்கள் இந்தப்போராட்ட விளையாட்டைக் கண்சிமிட்டிப் பார்த்துக் கொண்டிருக்க, இளைஞர்கள் கவர் எடுத்து, வேட்டைக்காகக் காத்திருக்கத் தொடங்கினார்கள். ஒருவன் புற்றுமேடையில் காதை வைத்து காத்திருந்தான் அவன் கண்கள் ஆனந்தத்தாலும் ஆச்சரியத்தாலும் இருளில் ஒளிரத் தொடங்கின.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழரின் பூர்வீகத்தை உறுதிப்படுத்தும்

# உடுத்துறையில் கிடைத்த நாணயம்

(80ஆவது இதழின் தொடர்ச்சி)



கலாநிதி
ப. புஸ்பரட்ணம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரிவின் வட எல்லையில் உள்ள கடற்கரைக் கிராமங்களில் உடுத்துறையும் ஒன்றாகும். இக்கிராம மக்கள் 1994ஆம் ஆண்டு கிணறொன்றை வெட்டும்போது எதிர்பாராத விதமாக கிணற்றின் ஆழமான மையப் பகுதியில் மிகப் பழமையான நந்தி விக்கிரகத்துடன், புராதன குடியிருப்புக்கள் இருந்ததை உறுதிப்படுத்தும் மட்பாண்டங்கள், சங்கு, சிற்பி, கூரை ஓடுகள் மற்றும் செங்கற்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்தனர். படம் –3.





பின்னர் இதுபற்றிய செய்தி எமக்குத் தெரியப்படுத்தியதன் பேரில் நாம் அவ்வூர் மக்களது ஒத்துழைப்போடு அவ்விடத்தையும், அதன் சுற்றாடல்களையும் ஆராய்ந்து பார்த்தோம். அப்போது சில இடங்களில் மிகப் பழமையான குடியிருப்புக்கள் இருந்ததை அடையாளம் காட்டும் பெருங்கற் காலப் பண்பாட்டிற்குரிய மட்பாண்ட ஓடுகள், கல்மணிகள் மற்றும் பண்டைய காலப்பகுதியில் புழக்கத்திலிருந்த பலதரப்பட்ட நாணயங்கள் போன்றனவற்றைக் கண்டுபிடிக்க முடிந்தது. இருப்பினும் 1995இல் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் தொடர்ந்தும் அவ்விடங்களில் தொல்லியல் ஆய்வினை மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் அந்த ஆய்வின்போது கண்டுபிடித்த தொல்பொருட்களைக் குறிப்பாக நாணயங்களை மிக அண்மைக் காலத்தில் மீண்டும் சுத்தம் செய்து ஆராய்ந்து பார்த்தபோது அவற்றுள் சில நாணயங்கள் இதுவரை வரலாற்று வெளிச்சத்திற்கு வராத புதிய வரலாற்று உண்மைகளைத் தருவனவாக இருக்கின்றன. அவற்றுள் "நாக" என்ற பெயர் குறித்து நிற்கும் நாணயத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை இவ்விடத்தில் எடுத்து நோக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மிகச் சிறிய இச்செப்பு நாணயம் 0.7 சென்ரி மீற்றர் விட்டமும், 1.5 கிராம் நிறையும் உடையது. இதன் முன்புறத்தில் விளிம்பை ஒட்டி சுவஷ்திகா சின்னமும், இதற்கு கீழே வலப்புறமாக குத்துவிளக்கும், இடப்புறமாக பிறைச்சந்திரனும், சூரியனும் இச்சின்னங்களுக்கு மத்தியில் பக்கவாட்டாக இரு மீன் சின்னமும் காணப்படுகின்றன. இவ்விரு மீன் சின்னங்களுக்கு கீழே நாணயத்தின் விளிம்பை ஒட்டியவாறு நான்கு பிராமி எழுத்துக்கள் சிறிதும், பெரிதுமாக பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் எழுத்தமைதி கொண்டு இந் நாணயம் கி.பி.1 – 2 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம் எனக் கூறமுடியும். இதில் "நாக" என எழுதப்பட்டுள்ள முதலிரு பிராமி எழுத்தும் தெளிவாக உள்ளன. ஏனைய இரு எழுத்துக்களும் சற்று தேய்வடைந்து இருப்பதால் அதன் வாசகத்தை நிச்சயப்படுத்திக் கூறமுடியவில்லை. அவற்றை இரு எழுத்தாக எடுத்தால் "பூமி" எனவும், ஒரு எழுத்தாக எடுத்தால் "ஹ" எனவும் வாசித்து நாணயத்தில் உள்ள வாசகத்தை நாகபூமி அல்லது நாகஹ(1) அதாவது நாகனுடைய நாணயம் எனப் பொருள்



கொள்ளமுடியும். ஆனால் தமிழகத் தொல்லியற் பேராசிரியர் சுப்பராயலுவும், இந்திய தொல்லியல் அளவீட்டுத் திணைக்கள முதுநிலைக் கல்வெட்டாய்வாளர் இராசவேலுவும் அதிலுள்ள மூன்றாவது எழுத்தை "வ" என எடுப்பதே பொருத்தம் எனக் கூறியுள்ளனர்(2). அப்படியானால் நாணயத்தில் உள்ள வாசகத்தை நாகவம்(சம்) எனப் பொருள் கொள்ளமுடியும்.

நாணயத்தின் பின்புறத்தில் வலப்புறமாக விளிம்பை ஒட்டி சுவஷ்திகா சின்னமும், மத்தியில் கிடையான அமைப்பில் ஒரு மீன் சின்னமும், இச்சின்னங்களுக்கு கீழே பிராமி எழுத்தில் பொலம் என்ற தமிழ்ச் சொல்லும் காணப்படுகின்றன. இதில் பொறிக்கப்பட்டுள்ள "பொலம்" என்ற சொல்லுக்கு பொன், பொன்னிறமான காசு, அழகு, சிறந்தது எனப்பல கருத்துக்கள் உண்டு. இச் சொல் சங்க காலம் தொட்டு நாணயத்தோடு தொடர்புடைய பெயராகப் பயன்படுத்தப்பட்டதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதற்கு ஐங்குறுநூற்றில் (310:01) பொலம்பசு பாண்டிற்காசு என்றும், குறுந்தொகையில் (66:4, 148:3) பொலங்கல ஒரு காசு எனவும், பொலஞ்செய் கிண்கிணி காசு எனவும் அகநானூற்றில் (293:7, 315:12) பொலஞ்செய்காசு எனவும்வரும் குறிப்புக்களைச் சான்றாகச் சுட்டிக்காட்டலாம். ஆயினும் இச்சொல் சமகாலத்தில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுக்களில் அல்லது சங்க கால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் பயன்படுத்தப்பட்டதற்கு சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சமகால இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் இச்சொல் உயர்ந்த என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் தமிழில் "பொலம்" என எழுதப்படவேண்டிய இச்சொல் அக்கல் வெட்டுக்களில் அதன் பிராகிருத மொழிக்கு ஏற்ப "பொல" என்றே எழுதப்பட்டுள்ளது. இலங்கையில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் வழக்கிலிருந்த பல தமிழ்ப் பெயர்கள் சமகாலப் பிராமிக் கல்வெட்டுக்களில் அதன் கல்வெட்டு மொழிக்கு ஏற்ப பிராகிருத மயப்படுத்தப்பட்டிருந்தாலும் அப்பெயர்கள் சமகால



நாணயங்களில் தமிழில் எழுதப்பட்டதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. அதை மேலும் உறுதிப்படுத்துவதாக மேற்குறித்த உடுத்துறை நாணயத்தில் வரும் "பொலம்" என்ற சொல்லை எடுத்துக் கொள்ளலாம்.

நாணயத்தின் முன்புறத்தில் பொறிக்கப்பட்டுள்ள "நாக" என்ற பெயர் இவ்விடத்தில் சிறப்பாக ஆராய்ந்து பார்க்கப்படவேண்டிய ஒன்றாகும். கி.பி.5ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தென்னாசியாவில் புழக்கத்தில் இருந்த பிராமிக் கல்வெட்டுக்களில் இப்பெயர் பிராகிருத மொழியில் "நாஹ" என்றே எழுதப்பட்டுள்ளன. ஆனால் விதிவிலக்காக தமிழகத்தில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்களிலும், இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட சில பிராமிக் கல்வெட்டுக்களிலும் இப்பெயர் தமிழில் "நாக" என்றும் "ணகா" என்றும் எழுதப்பட்டுள்ளதைக் காணலாம். அதேபோல் தென்னிலங்கையில் கிடைத்த சில நாணயங்களிலும் இப்பெயர் தமிழில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இந்த வேறுபாடு இப்பெயருக்கு உரியவர்கள் தமிழர்கள் அல்லது இப்பெயரை எழுதியவர்கள் தமிழைத் தாய்மொழியாகக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டிருந்தவர்கள் எனக் கூறலாம். இவற்றின் அடிப்படையில் உடுத்துறையில் கிடைத்த நாணயத்தை தமிழ் மன்னன் அல்லது தமிழ்ச் சிற்றரசனே வெளியிட்டான் என எடுத்துக் கொள்வதில் எந்த தவறும் இல்லை.

இந்நாணயத்தை தமிழ் மன்னன் வெளியிட்டதாகக் கொள்ளும்போது அவன் எந்த நாட்டைச் சேர்ந்த தமிழ் மன்னன் என்பது முக்கிய கேள்வியாக எழுகின்றது. தமிழகத்தில் அதிலும் குறிப்பாக சங்க காலத் தமிழகத்தைப் பொறுத்தவரை "நாக" என்ற பெயர் கொண்ட மன்னன் அல்லது வம்சம் நாணயங்களை வெளியிட்டதற்கோ அல்லது நாணயங்களை வெளியிடும் அளவுக்கு அப்பெயர் கொண்ட மன்னர்களது ஆட்சி அங்கு இருந்ததற்கோ இதுவரை எந்தச் சான்றுகளும் கிடைத்ததாகத் தெரியவில்லை. சங்க காலப் பாண்டிய மன்னர்கள் தமது அரச இலட்சனையான மீனைத் தமது நாணயங்களில் பொறித்ததற்கு தமிழகத்திலும், இலங்கையிலும் (கந்தரோடை, பூநகரி, அநுராதபுரம், அக்குறுகொட) கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் சான்றாக உள்ளன. ஆயினும் அந்த நாணயங்கள் சதுரவடிவில் வடிவமைக்கப் பட்டுள்ளதுடன், நாணயத்தின் பின்புறத்தில் மட்டும் ஒரேயொரு மீன் சின்னம் அதுவும் கோட்டுருவமாகவே பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் உடுத்துறையில் கிடைத்த நாணயம் வட்டவடிவில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் அதன் இரு புறத்திலும் மூன்று மீன்கள் கோட்டுருவத்திற்கு பதிலாக முழு உருவமாக வடிவமைக்கப் பட்டுள்ளதைக் காணலாம். அதேவேளை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் காணப்படும் சின்னங்களை ஒத்த வடிவமைப்பில் தமிழகத்தில் அதிலும் குறிப்பாகச் சங்க காலத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையில் இதே வடிவமைப்பில் பல நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதற்கு அவற்றை வடிவமைப்பதற்குப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்களே சான்றாகக் கிடைத்துள்ளன. இவை உடுத்துறை நாணயம் இன்னொரு நாட்டிலிருந்து கொண்டுவரப்படாது இலங்கையிலேயே வடிவமைக்கப்பட்ட தென்பதற்கு சிறந்த சான்றாக உள்ளது. இவற்றின் அடிப்படையில் இந்நாணயத்தை இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னனே வெளியிட்டான் எனக் கூறமுடியும்.

இந்நாணயத்தை இலங்கைத் தமிழ் மன்னனே வெளியிட்டான் எனக் கொள்ளும்போது அந்நாணயத்தில் பொறிக்கப்பட்டுள்ள "நாக" என்ற பெயரின் வரலாற்று முக்கியத்துவம் என்ன என்ற கேள்வியும் எழுகின்றது. புராதன இலங்கையில் நாக வம்சத்து மன்னர்கள் ஆட்சி புரிந்ததற்கும், இன்று தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வரும் பிராந்தியம் பண்டுதொட்டு நாகதீப(ம்) அல்லது நாகநாடு என அழைக்கப்பட்டு வந்ததற்கும் பல சான்றுகள் காணப்படுகின்றன. இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் கி.மு.6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்தபோது அநுராதபுரத்திற்கு வடக்கிலமைந்த பிராந்தியத்தை நாகதீப(ம்) எனவும், அங்கு ஆட்சியில் இருந்த இரு நாகவம்சத்து மன்னர்களுக்கிடையிலான சிம்மாசனப் போராட்டத்தை அவர் தீர்த்து வைத்ததாகவும் கூறுகிறது. அதில் புத்தர் இலங்கை வந்ததாக மகாவம்சத்தில் கூறப்படுவது ஐதீகமாக இருப்பினும், அந்நூல் எழுதப்பட்ட கி.பி.6ஆம் நூற்றாண்டில் வட இலங்கை நாகதீபம் என அழைக்கப்பட்டதையும், அங்கு நாகவம்சத்து மன்னர்களே ஆட்சி செய்தனர் என்பதையும் இச்செய்தி எடுத்துக் காட்டுவதாகக் கூறலாம். இதற்குச் சார்பாக வடஇலங்கையில் பெரியபுளியங்குளம் என்ற இடத்தில் கண்டுபடிக்கப்பட்ட கி[illegible]ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட நான்கு பிராமிக் [illegible]வட்டுக்கள் இங்கு நாகச் சிற்றரசர்களது ஆட்சியிருந்ததாகக் கூறும் செய்திகளை ஆதாரமாகக் காட்டலாம். அதேவேளை இக்காலப்பகுதிக்குரிய இன்னொரு பிராமிக் கல்வெட்டு இலங்கையில் "நாகநகர்" என்ற பெயரில் தலைநகர் ஒன்று இருந்ததாகக் கூறுகிறது. பேராசிரியர் இரகுபதி இத்தலைநகர் கந்தரோடையாக இருக்கலாம் எனக் கூறுகிறார். ஆனால் நிக்லஸ் என்ற ஆய்வாளர் இது பதவியாவுக்கு அண்மையில் இருந்த தலைநகர் என்பதற்கு கி.பி.10ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் வரும் இதையொத்த இன்னொரு பெயரை ஆதாரம் காட்டுகிறார். கி.பி1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டவரான தொலமியின் குறிப்பில் " நாகதீபோய்" என்ற இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பாளி நூல்களில் குறிப்பிடப்படும் நாகதீபம் என முதலியார் இராசநாயகம் கருதுகிறார். இக்கூற்றுக்கு மேலும் சான்றாக யாழ்ப்பாண மாவட்டத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் 1936ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட கி.பி3ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனத்தில் வரும் "நாகதீப(ம்)" என்ற பெயரைக் குறிப்பிடலாம்.

சற்றுப்பிற்பட்ட காலத்தில் எழுந்த

**உடுத்துறையில் கிடைத்த நாணயம் வட்டவடிவில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன் அதன் இரு புறத்திலும் மூன்று மீன்கள் கோட்டுருவத்திற்கு பதிலாக முழு உருவமாக வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். அதேவேளை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் காணப்படும் சின்னங்களை ஒத்த வடிவமைப்பில் தமிழகத்தில் அதிலும் குறிப்பாகச் சங்க காலத்தில் நாணயங்கள் வெளியிடப்பட்டதற்குச் சான்றுகள் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இலங்கையில் இதே வடிவமைப்பில் பல நாணயங்கள் வெளியிடப்பட்டிருக்கலாம் என்பதற்கு அவற்றை வடிவமைப்பதற்குப் பயன்படுத்திய சுடுமண் அச்சுக்களே சான்றாகக் கிடைத்துள்ளன. இவை உடுத்துறை நாணயம் இன்னொரு நாட்டிலிருந்து கொண்டுவரப்படாது இலங்கையிலேயே வடிவமைக்கப்பட்டதென்பதற்கு சிறந்த சான்றாக உள்ளது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படையெடுத்த வரலாற்றைச் சுட்டிக்காட்டுகிறது. இதே பாளி நூலில் கி.பி.10ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் ஒருவன் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தியும் காணப்படுகிறது. இப்படையெடுப்பை மேற்கொண்ட தென்னிந்திய மன்னன் முதலாம் பராந்தக சோழனாக இருக்கலாம் என்பதை அவனது 37 ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வரும் "ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பர கேசரிவர்மன்" என்ற சொற்தொடர் உறுதிப்படுத்துகிறது. இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள ஈழத்து வெற்றி என்பது நாக நாட்டு வெற்றியை குறிப்பதாகக் கொள்வதற்குப் பல ஆதாரங்களைக் காட்டலாம். இந்த நாகநாட்டு வெற்றியைக் குறிக்கும் வகையில் அவன் "உரக" என்ற பெயரில் (உரக என்ற வடமொழிச் சொல்லுக்கு நாகம், நாக இன மக்கள் என்ற கருத்துண்டு) நாணயங்களை வெளியிட்டான் எனக் கூறலாம். ஏனெனில் இவன் காலத்தில் "நாகதீப" என்ற பெயர் "உரக" எனவும் அழைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் நிலாவெளி என்னும் இடத்தில் கிடைத்த இவன் காலத்தைச் சேர்ந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று திருகோணமலை நாகநாட்டிற்குரிய இடம் என்பதையும், அங்கிருந்த கிராமம் ("உலாகிரிகம" தமிழில் இதன் பொருள் நாக மலையில் உள்ள கிராமம் என்பதாகும்) சிவன் ஆலயத்திற்கு மானியமாக வழங்கப்பட்டதையும் கூறுகிறது. இந்த ஈழத்து (நாகநாட்டு) வெற்றியை தொடர்ந்தே அவனால் வெளியிடப்பட்ட 15க்கு மேற்பட்ட கல்வெட்டுக்களில் "ஈழக்காசு", "ஈழக்கருங்காசு" என்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் இவ்விடத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமாகும்.

வடமொழியில் "நாகதீப" அல்லது "உரக" என அழைக்கப்பட்ட இப்பெயர் தமிழில் "நாகநாடு" என அழைக்கப்பட்டு வந்துள்ளதையும் காணலாம். பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களில் நாகநாடு பற்றிய செய்திகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இந்த நாகநாடு இலங்கையில் இருந்த நாட்டையே குறித்திருக்கலாம் என்பதற்கு அவ்விலக்கியங்களில் நாகநாட்டோடு தொடர்புபட்டு வரும் வரலாற்றுச் சம்பவங்கள் சான்றாக உள்ளன. கி.பி.8ஆம் நூற்றாண்டில் பல்லவ இளவரசன் ஒருவன் "நாகநாடு" சென்று அங்குள்ள இளவரசியை மணந்ததாக பல்லவச் செப்பேடு ஒன்று கூறுகிறது. தமிழ் நாட்டில் குடுமியாமலை என்ற இடத்தில் கண்டுபிடித்த கி.பி.1262ஆம் ஆண்டுக்குரிய பாண்டியக் கல்வெட்டு ஒன்று சிங்கள அமைச்சன் ஒருவன் பாண்டிய மன்னனிடம் சென்று உதவி கேட்டதன் பேரில் வீரபாண்டியன் என்ற மன்னன் தனது படைகளை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும், அப்படை சிங்கள மன்னனுக்குச் சார்பாக நாகநாட்டின் மீது படையெடுத்து அங்கு ஆட்சி செய்து கொண்டிருந்த சாகவ மன்னனைக் கொன்று அவன் மகனை ஆட்சியில் அமர்த்தியதாகவும் கூறுகிறது. **(Puthukkoddai Inscriptions no.366)** இக்கல்வெட்டில் நாகநாட்டு அரசினது முக்கிய தலைநகரங்களான திரிகூடகிரியிலும், கோணாமலையிலும் நாகநாட்டு அரச கொடி பறந்து கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளதைக் கொண்டு நாக நாட்டின் எல்லை கிழக்கிலங்கை வரை பரந்திருந்தமை மேலும் உறுதியாகிறது.

மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த பிராந்தியம் நாகதீபம், நாக நாடு, உரக என வேறுபட்ட மொழிகளால் அழைக்கப்பட்டு வந்துள்ளதையும், அங்கு வாழ்ந்த மக்கள் நாக இனத்தவருடன் தொடர்புடையவர்கள் என்பதையும் வரலாற்று ரீதியாக அடையாளம் காணமுடிகிறது. அதில் "நாக" என்ற சொல்லை பயன்படுத்திய அனைவரும் அக்காலத்தில் தமிழர்களாகத்தான் இருந்தார்கள் எனக் கூறமுடியாது. ஏனெனில் மிகப்புராதனகாலத்தில் இப்பெயரை தமிழர்கள் மட்டுமன்றி ஏனைய இன மக்களும் பயன்படுத்தியதற்கு இலங்கையிலும், பிறநாடுகளிலும் உறுதியான பல சான்றுகள் உள்ளன. ஆயினும் இலங்கையைப் பொறுத்தவரை காலப் போக்கில் இங்கு வாழ்ந்த சிங்கள மொழி பேசிய மக்களிடமிருந்து அப்பெயர் படிப்படியாக மறைந்து போக அது தமிழர்களிடம் மட்டுமே நிலைத்திருந்ததைக் காணமுடிகிறது. அந்தப் பாரம்பரிய வரலாற்றுத் தொடர்ச்சி தற்காலத்திலும் நிலைத்திருப்பதை அவர்கள் பயன்படுத்தி வரும் ஆட் பெயர்களும் (நாகன், நாகி, நாகம்பாள், நாகம்மா, நாகமுத்து, நாகராஜா, நாகப்பா, நாகவண்ணன், நாகதேவன், நாகரூபி, நாகரூபன், நாகராணி, நாகமணி, நாகவள்ளி, நாகசீலன்), இடப்பெயர்களும் (நாகர்கோயில், நாகபடுவான், நாகதேவன்துறை, நாகஞ்சோலை, நாகதாழ்வு, நாகமுனை, நாகமலை, நாகர்குளம்) உறுதிப்படுத்துகின்றன. இதனால் உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் வரும் பெயருக்கு "நாகபூமி" அல்லது "நாகவம்சம்" அல்லது "நாகனுடையது" (நாகஹ) என வேறுபட்ட பொருள் கொடுக்கப்பட்டாலும் அப்பெயர் "நாக" இன மக்களையும், அம்மக்களை ஆட்சி செய்த "நாக" வம்சத்தையும், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட "நாக" நாட்டையும் குறிப்பதாகக் கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது.

இதற்கு சங்ககாலத் தமிழகத்தில் ஆட்சி புரிந்த மன்னர்கள் சேரர், சோழர், பாண்டியர் என்ற அரச வம்சப் பெயர்களால் அழைக்கப்பட்டிருந்தாலும் கூட அப்பெயர்கள் அரச வம்சங்களை மட்டும் குறிக்காது, அவர்கள் ஆட்சி செய்த நாடுகளையும், அந்த நாடுகளில் வாழ்ந்த மக்களையும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதை இவ்விடத்தில் உதாரணத்திற்கு குறிப்பிடலாம். இந்த வரலாற்று உண்மை உடுத்துறையில் கிடைத்த நாணயத்தில் வரும் "நாக" என்ற பெயருக்கும் பொருத்தமாக இருக்கலாம். ஏனெனில் இந்நாணயம் கண்டெடுக்கப்பட்ட உடுத்துறை என்னும் புராதன கிராமம் பண்டைய காலத்தில் நாக இனமக்கள் வாழ்ந்த இடமாகவும், நாகநாட்டிற்கு உட்பட்ட ஒரு இடமாகவும், நாகவம்சத்தவர் ஆட்சி செய்த நாடாகவும் இருந்து வந்துள்ளதை வரலாற்று மூலங்கள் காலரீதியாக எடுத்துக் கூறுகின்றன. இதனால் அந்த நாக நாட்டை ஆண்ட மன்னன் தானும், தனது ஆட்சிக்கு உட்பட்ட மக்களும், அந்த மக்கள் வாழ்ந்த நாடும் "நாக" இனத்து வழி வந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டும் நோக்கில் தான் வெளியிட்ட நாணயத்தில் "நாக" எனத் தொடங்கு முன்னொட்டுப் பெயரைப் பொறித்தான் என்ற முடிவுக்கு வருவது பொருத்தமாகத் தெரிகிறது.

புதிய வெளியீடுகள், நூல்முகங்கள் அடுத்த இதழில்

www.tamilarangam.net



வே. தினகரன்
பத்தனையூர்

மிகப் பெரிய
வியர்வைக் கடலை
குடித்து, களித்து, விடுவித்த
ஏப்பத்தின் அடர்த்தியை
அசைபோட்டபடி
நீண்டதாய் உள் இழுத்து
பெருமூச்சு கக்கும்
நிலவுடமை ஒட்டகங்கள்

சம்பள வாசல்களில்
அரிவாள் முனை பலிக்கடாவின்
திகைப்பில்,
கைக்கு வரும் நெய் பற்றிய
அளவீட்டுச் சிந்தனையில்
உழைத்துக் களைத்த
எருதுகளின் வரிசை நீளும்...........

வியர்த்த நாணயங்களைப்
பிராண்டி பிராண்டி சேகரித்த
சேதாரப் பெறுதிகளில் ஊறும்
சாராயக் கனவில் போதையுற்று
அ(லு) வல(க)ம் இயங்கும்...........

முப்பது தினங்களில் ஒற்றை நாளிலாவது
மாற்றுணவில் மகிழத்துடிக்கும்
மழலைகளைப் பார்த்தழும்
வரண்ட கரத் தாய்பசுக்கள்


வரம் வராத அன்றும்
வெற்று எச்சிலை விழுங்கிவிட்டு
ஒட்டிய மடி நாடும்
பாற் பற்களில் திடமான கறைகளாய்
ஒட்டிக் கொள்ளும் ஏமாற்றங்கள்...........

இந்த வறுமை காட்சிகளுக்கு
எப்போதும் நிரம்பி வழியும் காட்சியரங்கு
அடுப்பில் காணாத புகையை
கொடுத்தவைகளையே கரைத்துவிழுங்கி
கால கழிப்பிற்கு காலாட்டி ரசிக்கும்
மேட்டுக் குடிகளின் இதழ்களில் கண்டு
இன்புறுதல் எங்கனமியலும்..?

" மலைய விட்டு எறங்குடி
பட்டினி நாய்க்கும்
பஞ்சாமிர்தம் கேக்குதோ "
" எங்க போய் படுத்திருந்த? "
வேட்டைச் சிம்மங்களுக்கு உடன்பிறந்த
வால் பிடிக்கும் மத்திம எருதுகளின்
அதிகார பொன்மொழிகளுதிர,
கண்ணீர் உதிர்த்து,
கருவறையை இறுகப் பற்றி,
காளைகளின் பலத்தை
உள்மூச்சில் இழுத்து, அடர்கிளை விலக்கி
மலையேறும்
நிறை மாத சினைப்பசுக்கள்

இம்மந்தைகளுக்கு
எதிர்க்க மட்டும் தெரிந்திருந்தால்
எப்போதோ எரிந்து போயிருக்கும்
அனுமனிடம் தப்பிய
இந்த அசோக வனம்

சுமை இழுக்கும் கறவைகளின்
கண்ணீரால் ஈரம் கனக்கும்
இந்த மண் ("இந்திரை"களின்)
பாட்டப் பசுக்கள் ஜனித்த மண்
பேரக் கன்றுகள் மரிக்கும் மண்
கண்ணீரோடு ஒரு மெய்யுரைக்கிறேன்
இது எங்கள் மண்




# இது எங்கள் மண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கடகட வென்று ஜன்னல் சட்டங்கள் ஆக்ரோஷமாக சத்தமிட்டன. பழைய பஸ். சட்டங்களின் ஆணிகள் விடுபட்டு றப்பர் செருகல்கள் கழன்று கண்ணாடிகள் விரிசல் கண்டிருந்தன. பஸ் குதித்து குதித்து விரைந்து கொண்டிருந்தது. அந்த நீண்ட நேர பஸ் பயணத்தையும் அதனால் ஏற்பட்ட சலிப்பையும் அந்தச் சிறு குழந்தையை அவதானிப்பதில் தான் சற்று மறந்திருந்தான். அது மிகச்சிறு பெண்குழந்தை. மூன்று அல்லது நான்கு வயதுதான் இருக்கும். துடுக்குத்தனமானவளாக இருக்கலாம். அழகான கண்கள். அழகான குழந்தை.

அவன் ஒரு அரசாங்க உத்தியோகத்தன். அவனது அலுவலக நிமித்தமான எண்ணிலடங்காத பயணங்களில் இதுவும் ஒன்று. அந்த பஸ்ஸில் அவனுக்கு பின்புதான் அந்தக் குழந்தையும் அதன் தாயும் ஏறினர். ஆனால் ஏறியது முதல் ஒரு நட்புரிமையுடன் ஏற்கெனவே அறிமுகமானவர்கள் போன்று உந்தப்பட்டு பார்வையால் பரிச்சயமாயினர். அவனுடன் குழந்தைகள் சேருவது அதிகம். தாயின் தோளைப் பற்றியபடி பின்னால் பார்த்த குழந்தையை அவன் ஈர்த்தான். அவன் புன்னகைத்த போது முதலில் அக்குழந்தை தனது தாயாரைப் பார்த்தது. பின்னர் திரும்ப அவனைப்பார்த்து இப்படி இரண்டு மூன்று ஒளிவு விளையாட்டின் பின்னர் பரிச்சயமான ஒரு சிரிப்பை தவளவிட்டது.

அவன் இருந்த இருக்கைக்கும் அக்குழந்தைக்கும்

# மனவெளி

**முத்து இராதாகிருஷ்ணன்**

இடையில் இரண்டு இருக்கைகள் இருந்தன. எனவே அக்குழந்தையுடன் அளவளாவ முடியவில்லை. குழந்தையின் கவனத்தைக் கண்ட தாய் திரும்பிப் பார்த்துவிட்டு விபரம் விளங்காமல் திரும்பினாள். அவர்கள் சிங்கள இனத்தவர்கள். அவனுக்கு சிங்களம் சுத்தமாகத் தெரியாது... ஆனால் பார்வைக்கு ஏது மொழி....

பஸ்ஸின் வேகம் குறைந்தது. ஒரு வேகத் தடுப்பில் ஏறி இறங்கி நின்றது. ஆரகன் வெளியில் நோக்கினான். வீதியின் இரு பக்கமும் பனங்குற்றிகள் அடுக்கப்பட்டு முட்கம்பி வேலி தெரிந்தது. இராணுவத்தினர் உலாவிக்கொண்டு நின்றனர். இன்னும் ஒரு தடைமுகாம் அல்லது சோதனைச் சாவடி. இரும்புத் தொப்பிகளுக்கு கீழ் பஞ்சடைந்த கண்கள் சுரத்தில்லாமல் இறுகிக் கிடந்தன. அவன் சலிப்படைந்தான். ஒவ்வொரு தடைமுகாமிலும் இறங்கி அடையாள அட்டை காட்டி தன்னை நிரூபித்து உடல் பரிசோதனைக்கு உட்பட்டு வெளியில் வருவது... போதுமென்றாகி விட்டது. இந்தச் செக்கிங்கினாலேயே வீட்டை விட்டு வெளிக்கிடாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடக்கும் பலரை அவனுக்குத் தெரியும்......... யுத்தகாலத்தில் இது எல்லாம் வழமையானது தானே என்று தேற்றிக் கொள்பவர்களே பலர்... என்ன செய்வது... பெருமூச்செறிந்தான்.

இறங்கி செக்கிங்குக்கு நடந்து போங்கோ.... பஸ் சாரதி சிங்களத்தில் குரல் கொடுத்தான். பயணப்பை, சாமான்கள் எல்லாத்தையும் எடுத்துக்கொண்டு போங்கோ... நடத்துனர் தன் பங்கிற்கு சத்தமிட்டான். அதுவும் சிங்களம் தான்...

www.tamilarangam.net



ஒருவரும் பஸ்ஸைவிட்டு இறங்கவில்லை. ஆரகன் சுற்று முற்றும் பார்த்தான்... ஓ.. எல்லோருமே சிங்களமக்கள் தான்......... அதுதான்.... எவரும் இறங்கவில்லை....

ஒரு இராணுவ வீரன் பஸ்ஸில் ஏறி.. " ஒக்கம பஹின்ட ஒன " என்றான். ஓ... எல்லோரையும் கீழே இறங்க சொல்லுகிறான் போலும்... ஆரகன் மெல்ல விளங்க முயன்றான். நடத்துனர் இராணுவவீரனை அணுகி ஏதோ கூறினான். பஸ்ஸில் இருப்பவர்கள் எல்லோருமே சிங்களச் சனம் என்று கூறியிருப்பான். இராணுவவீரன் ஒருமுறை எல்லோரையும் நோக்கினான். ஆரகனைப் பார்த்தவுடன் பார்வை நிதானித்தது.... ஆரகன் மெல்ல தலையை தாழ்த்தினான்.... தமிழ கட்டியா?.. நீ தமிழனா என்ற வினாவுக்கு ஆரகன் தலையசைத்தான். "இயன்ட தேருன்னத்த வஹாம பஹிலா யன்டகோ செக்கிங் வலட" சொல்லுறது விளங்கேல்லயா உடன இறங்கி செக்கிங்குக்கு போ... என்பதை அவன் புரிந்து கொண்டான்.

அந்த இராணுவவீரன் சொல்வது அவனுக்கு புரிந்தது... சிங்கள மொழியை பேசுகின்ற அளவில் அவனுக்கு தெரியாது. ஆனாலும் யாரும் பேசினால் புரிந்துகொள்ள முடியும்... அவன் இறங்கி செக்கிங்குக்கு போகச் சொல்கின்றான். அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது. அந்த பஸ்வண்டியில் அவனுக்கு ஆதரவாகக் கதைக்க எவரும் இல்லை. அங்கு இருக்கைகளை நிறைத்திருந்த அனைவருமே சிங்கள மக்கள். அவர்கள் எல்லோரும் அவனையே பார்த்தனர்... அவன் இறங்கிச் செல்லாமல் இருப்பது அவர்களுடைய பயணத்தைச் சுணக்குகின்றது என்பது அவர்களின் முகங்களில் புலப்பட்டது. பஸ்ஸின் கோடி வரை சென்று வந்த இராணுவத்தினன் மீண்டும் ஆரகனிடம் வந்து கீழே இறங்கி செக்கிங்குக்கு போகுமாறு கூறிவிட்டு இறங்கிச் சென்றுவிட்டான்.

...இது ஒரு வழமையான நடவடிக்கைதான். அந்த நீண்ட வீதியில் ஐந்து தடைமுகாம்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தடைமுகாமிலும் பஸ் நிறுத்தப்பட்டு அனைவரும் இறங்கி இராணுவ சோதனைக்கு உட்பட வேண்டும்... பின்னர் தடைமுகாமை தாண்டிய பகுதிக்கு நடந்து செல்லுதல் வேண்டும். பஸ் வண்டிக்குள்ளும் ஏறி சோதனை செய்யும் இராணுவத்தினர் சோதனை முடிந்தவுடன் பஸ்ஸை போக அனுமதிப்பர். பஸ் புறப்பட்டு தடைமுகாமுக்கு அப்பால் நிற்கும் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணத்தை தொடரும்..... இதுதான் நடைமுறை... ஆனால் பஸ்ஸில் இருக்கும் சிங்கள மக்கள் ஒரு போதும் பஸ்ஸைவிட்டு இறங்குவதில்லை. சிங்கள இராணுவத்தினர் அவர்களை இறங்க அனுமதிப்பதில்லை. ஆனால் தமிழர்கள் அனைவரும் அது குழந்தையாக இருந்தாலும் இறங்கிச் செல்லுதல் கட்டாயமான ஒன்று. பாதுகாப்பு நடவடிக்கை என்று கூறப்பட்டாலும் ஒவ்வொரு தமிழனும் தீவிரவாதியாகவே கணிக்கப்பட்டான். அதற்கும் மேலாக இனத்துவேஷம் ஊறியிருப்பது வெளிப்படுவதும் இத்தகைய பஸ் பயணங்களை மேற்கொள்ளும்போதுதான்.

ஆரகன் ஏலவே நான்கு தடைமுகாமிலும் நான்கு முறை இறங்கி நடந்து நன்றாகவே பரிசோதிக்கப்பட்டு விட்டான். இது ஐந்தாவது தடைமுகாம். அந்த பஸ்ஸில் வேறு தமிழர் எவரும் இல்லை. தன்னந்தனியனாக இறங்கி நடந்து அந்த இராணுவக் கூட்டத்தினரின் பரிசோதனைக்கு உட்படுவது என்பது அவனைப் பொறுத்தவரை துணியில்லாமல் நடுவீதியில் நிற்பதைப் போல இருந்தது. முந்தைய தடைமுகாமிலேயே தீர்மானித்து விட்டான். இனி இறங்குவது இல்லை என்று.

"நான் ஒரு அரசாங்க அலுவலர். எனது ஒரேயொரு காரியாலய பையை பஸ்ஸில் வைத்தே சோதனை செய்ய இயலும். காரியாலய அடையாள அட்டையும் உள்ளது.... இன்று இறங்குவதில்லை. என்ன நடந்தாலும் நடக்கட்டும்." ஆரகன் தீர்மானமாக இருந்தான். இவ்வளவு பேரும் இருக்க நான் மட்டும் ஏன் இறங்கவேண்டும். நான் மட்டும் ஏன் பரிசோதிக்கப்பட வேண்டும்... மனம் இறுகிப்போனது.... நேரம் நகர்ந்தது. பஸ் சாரதி ஆரகனைப்பார்த்து கையைக்காட்டி ஏதோ கூறினான். அவன் இறங்கிப் போகும்படி சத்தமிடுகின்றான் என்பது அவனுக்குப் புரிந்தது. பின்னால் இருந்து இன்னும் இரு குரல்கள் இறங்கிப்போ இறங்கிப்போ என குரல் கொடுத்தன. பஸ்ஸில் இருக்கும் அனைவரும் அவனைப் பார்வையால் குத்துவது போல் இருந்தது.

தான் இறங்கினால்தான் பஸ்ஸை தடைமுகாமுக்கு அப்பால் போக அனுமதிப்பார்கள் என்பது அவனுக்குப் புரிந்தது. அவனது தீர்மானம் உடையத்தொடங்கியது. பஸ் சாரதி பஸ் இயந்திரத்தை முடுக்கி சத்தம் வரச்செய்தான். பஸ் கதறிப் புகைந்தது. எல்லோருக்குமே நேரம் போகுது என ஒருவர் பொரிந்தார்..... அவனது வைராக்கியம் உடைந்தது.

பற்களை இறுகக் கடித்தபடி மெல்ல எழுந்து பஸ்சை விட்டு இறங்கினான். பரிசோதனை சாவடியை நோக்கி நடந்தான்.... அந்தக் குழந்தை சலனமில்லாத கண்களோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தது.

பரிசோதனைச் சாவடியில் அந்த இராணுவ வீரன் இன்னும் ஒரு இராணுவ வீராங்கனையுடன் அளவளாவிக்கொண்டு நின்றான். அவனை யாரும் சட்டை செய்யவில்லை. சிறிது நேரம் தரித்து நின்ற ஆரகன் சற்று செருமி தான் நிற்பதை உணர்த்த முயன்றான். பஸ் புழுதி எழக் கிழம்பி தடைமுகாமின் மறுபக்கம் நோக்கிச் சென்றது. ஆரகன் தனது அலுவலக பையை திறந்து தயாராக வைத்தபடி நின்றான். நின்று வேலையில்லை இன்னும் அருகில் செல்வதுதான் சரி... மெல்ல இராணுவவீரனை நெருங்கினான். அவன் அவளுடன் சுவாரசியமாக சிரித்து கதைத்துக் கொண்டிருந்தான். இவனது வருகை அவனுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. விறுவிறுவென்று வந்து பையில் கையைவிட்டு தடவினான். எல்லாம் ஒரு சடங்காகவே இருந்தது... சரி சரி போ.... விட்ட கதையை தொடரச் சென்றான்.

பையை மூடி சாவடியை விலத்தி தடைமுகாமின் மறு பக்கம் நடந்த ஆரகன்... தொலைவில் அவன் வந்த பஸ் புறப்பட்டுச் செல்வதைக் கண்டான். அவனை மீண்டும் ஏற்றாமலேயே பஸ் புறப்பட்டு சென்று கொண்டிருந்தது..... அவனுக்கு உதடுகள் துடித்தன. கண்கள் கலங்கிவிடுவது போல் இருந்தது..... சுற்றிலும் இராணுவக் கூட்டம். சனநடமாட்டம் குறைந்த நெடுவழி. நகரத்துக்குச் செல்ல எப்படியும் 8,9 கிலோ மீற்றர் தூரம் போகவேண்டும். 2மணி நேரமாவது காத்திருந்தால்தான் அடுத்த பஸ் கிடைக்கும்.... தலைசுற்றியது.... உள்ளங்கைகள் குளிர்ந்தன. விறுக்கென்று அந்த தடைமுகாமின் பொறுப்பாளர் (கப்டன்) இருக்கும் இடம் நோக்கி நடந்தான்... வாயிலில் தடுத்த இராணு வீரனிடம் கப்டனைக் காணவேண்டும் என ஆங்கிலத்தில் சத்தமிட்டான். வாயில் இருந்து பிரளயம் போல் வார்த்தைகள் பறந்தன. எது வந்தாலும் வரட்டும்.. என மனம் குமுறியது..... வாசலில் கேட்ட சத்தத்தை தொடர்ந்து என்ன ஆரவாரம் என அறிய கப்டன் வெளியில் வந்தான். அழகான இளம் இராணுவ அதிகாரி...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போர்முனை அனுபவம் இருக்கவில்லை என்பது முகத்தில் தெரிந்தது...... என்ன பிரச்சினை..? என வினவினான். ஆரகன் படபடவென வார்த்தைகளைக் கொட்டினான். தான் இறங்க, தான் மட்டும் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டதை கூறினான்.... தன்னை ஏற்றாமல் பஸ் சென்று விட்டதைக் கூறினான்.

அவனது தேகம் ஆத்திரத்தில் நடுங்கியது.... அந்த இராணுவ பொறுப்பாளன் ஆரகனின் காரியாலய அடையாள அட்டையினை பார்த்தான். அமைதியாக இருக்கும்படி கையைக்காட்டினான். மெல்ல அப்பால் சென்று இடுப்பில் இருந்த தொலைக்கருவியில் (வயர்லஸ்) ஏதோ கதைத்தான்.... மௌனமாக அவனது முகபாவங்களைப் பார்த்தபடி நின்ற ஆரகனைப் பார்த்து கைகாட்டிவிட்டு உள்ளே சென்றான். அந்த அதிகாரி ஒருவார்த்தைகூட பேசாமல் சென்றது அவனுக்கு என்னவோபோல் இருந்தது... எனது ஆங்கிலம் அவனுக்கு விளங்கவில்லையா... அல்லது அவனிடம் நான் என்ன எதிர்பார்க்கின்றேன் என்பது எனக்குத்தான் விளங்கவில்லையா... " நிற்கச் சொன்னான் " என்பது மட்டும் புரிந்தது.... நிற்போம்.. என நின்றான்.

நேரம் வேகமாகக் கடந்தது. தொலைவில் இரைச்சல் கேட்டது. பஸ் ஒன்று எதிர்ப்புறத்தில் வருவது தெரிந்தது... அது...அது... அவன் வந்த பஸ்தான் மீண்டும் திரும்பி வருகின்றது.... பஸ் வந்து அந்த இடைஞ்சலான பாதையில் இருந்த ஒழுங்கையில் நிவர்சாகி வந்து நின்றது.. இராணுவ அதிகாரி பஸ்ஸை நோக்கி சைகை காட்டினான். பஸ் ஓட்டுனரும், நடத்துனரும் தட தட என இறங்கி இராணுவ அதிகாரியிடம் சென்றனர். அவர்களின் ஆத்திரம் பஸ்ஸில் இருந்து இறங்கிய விதத்தில் புலப்பட்டது. பஸ்ஸில் இருந்த அனைவரும். ஜன்னல்களூடாக அவனை எட்டிப்பார்த்தனர். எல்லோருடைய முகங்களிலும் எரிச்சல் மண்டிக் கிடந்தது. ஆரகன் அவர்களைப் பொருட்படுத்தவில்லை. பஸ்ஸை நோக்கி நடந்தான். அதுவரையில் பட்ட ஆதங்கம், அவமானம் எல்லாம் மறந்து ஒரு பெருமிதம் அவனுள் தோன்றியது. ஒவ்வொரு படியிலும் கால்வைத்து மெல்ல ராஜநடையில் ஏறினான். எல்லோரும் அவனையே நோக்கினர். எவருடைய முகங்களிலும் நட்புரிமை இருக்கவில்லை. ஆரகன் தான் இருந்த இருக்கையில் போய் அமர்ந்தான். இராணுவ அதிகாரியின் கடுமையான எச்சுக்களைப் பெற்றபின் மௌனமாக ஓட்டுனரும், நடத்துனரும் வந்து கொண்டிருந்தனர். அவர்களது முகங்களில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. தட தட என பஸ்ஸில் ஏறி அதே மூச்சில் பஸ்ஸை ஸ்ராட் செய்தனர். அவனிடம் எதுவும் எவரும் பேசவில்லை. அவர்களது ஆத்திரம் பஸ் ஓடத்தொடங்கிய வேகத்தில் தெரிந்தது. அவன் எதையும் சட்டை செய்யவில்லை. நான்காவது சீற்றை மெல்ல நிமிர்ந்து பார்த்தான்.

அந்த இருக்கையின் பின் சட்டத்தில் கையை வைத்து அதன்மேல் நாடியை வைத்து அந்த சிறு குழந்தை அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் பார்த்தவுடன் அவளின் கண்களில் ஒரு மலர்ச்சி தெரிந்தது. கண்களில் தெரிந்த அந்த சிரிப்பையும் ஆதரவையும் நெருக்கத்தையும் அவன் புரிந்து கொண்டான். அவள் மெல்லப் புன்னகைத்தாள்... அந்தப் புன்னகையில், அந்தப் பார்வையில்... அந்த பஸ்ஸில் இருந்தவர்கள் அனைவரையும் மன்னித்து விடுங்களேன் கேட்பதுபோல் அவனுக்கு இருந்தது...

# நினைவுதிராக் கனவுகள்

இன்றைய இரவினில்
தூரம் போன என் கனவுகளை துரத்திப்பிடிக்க
நினைவுகளிற்கு திராணியில்லை
எங்கோ...... காற்றலையில் மிதக்கும்
தொலைதூர சங்கீதமாய்
சிந்தையில் ஸ்பரிசம் செய்கறது
கனவின் எச்சங்கள்.

குடிசையின் சாளரத்தினூடு
விழி யெறிந்து தேடுகிறேன்
நிலவு காய்கிறது
வெண்மணல் முற்றத்தில்
நிலவு வரைந்த இருளோவியமாய்
நிழல் படிந்து கிடக்கிறது.
கனவின் கீற்றுக்கள்
விழிகளை சுற்றி வருகிறது
வாசலில்
விறாண்டிய குழியைச் சுற்றிச் சுற்றி வரும்
நாய் போல.

திண்ணையிலோ அன்றி செத்தையிலோ
எங்கோ... தொலைந்து போயிருக்கும்
அந்த கனவிற்கான உறக்கத்தை
எங்கு தேடுவேன்?

இன்றைய இரவே
இன்றைய உறக்கமே
இன்றைய கனவே
நீ யெனக்கு நூறுமுறை வேண்டும்.

அநாமிகன்

www.tamilarangam.net



யதீந்திரா

மானுடத்தின் தமிழ்க்கூடல் 2003

# இசை, நடன, நாடக விழா 2003

## பட்டுத் தெறித்த சில குறிப்புகள்

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் மானுடவதைக்கு எதிராகவும், மானுட அழிவிற்கு எதிராகவும் வெளிக்கிளம்பிய போராட்டம். மானுட விடுதலையெனும் உன்னதமான இலக்கை அடித்தளமாகக் கொண்ட போராட்டம். இது தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல. உலகளவில் நடைபெற்ற சகல தேசவிடுதலைப் போராட்டங்களும் மானுட விடுதலை என்னும் மகத்தான இலக்கை அடித்தளமாகக் கொண்டு பரிணமித்த போராட்டங்கள்தான். இது உலக உரிமைப் போராட்ட வரலாறுகள் எமக்குச் சொல்லும் செய்தி. எனினும் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மானுட விடுதலை நோக்கிய திசைவழி நகர்வுகள் பற்றி வெளியில் பெரிதாக பேசப்படவில்லை. வெளியில் இருந்தவர்கள் அதனை ஆழமாக புரிந்து கொள்ளத் தவறி விட்டனர் என்று கூறுவது தான் சாலவும் பொருந்தும். எனவே அந்தப்பணியைச் செய்யும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



பொறுப்பையும் போராட்ட அமைப்பே எடுத்துக் கொள்கிறது. இத்தகையதொரு பின்னணியில்தான் யாழ்ப்பாணத்தில் மானுடத்தின் தமிழ் கூடல் -2002 மலர்ந்தது. கலை, இலக்கிய ஊடகங்கள் சார்ந்த ஓர் கருத்தியல் தளத்தை சாட்சியாகக் கொண்டு நடைபெற்ற அந்நிகழ்வு (2002) தமிழர் விடுதலைப் போராட்டத்தின் மானுட விடுதலை நோக்கிய இலக்கை, மானுடத்தின் பாலான பற்றுறுதியை, மானுட நேசிப்பை சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் உரத்துச் சொல்லிய நிகழ்வாக அமைந்திருந்து.


மானுடத்தின் தமிழ்கூடல் - I ஏற்படுத்திய அதிர்வலைகள் இன்னும் ஓய்ந்து விடாத நிலையில்









அது ஏற்படுத்திய தாக்கம் இன்னும் எம் மனங்களைவிட்டு நீங்காத நிலையில் மானுடத்தின் தமிழ் கூடல் II ஆக இன்னுமொரு பெருவிழாவை நாம் தரிசிக்க நேர்ந்திருக்கிறது. அதுவும் ஈழத்தமிழர்கள் இது எங்கள் தலைநகரென நீண்ட காலமாக நம்பி வருகின்ற, இன்றும் உறுதியுடன் நம்பிக் கொண்டிருக்கின்ற திருகோணமலை மண்ணில் விழா நடைபெற்றிருப்பது விழாவின் முக்கியத்துவத்தை இரட்டிப்பாக்கின்றது. இசை, நடன, நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு ஐந்து நாட்களாக நடைபெற்ற இவ்விழாவில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, திருகோணமலை, வவுனியா என ஈழத்தமிழர் தேசத்தின் பல பகுதிக் கலைஞர்களும் ஒன்று திரண்டு தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தியிருந்தனர். இவ்விழாவை தமிழ் தேசத்தின் கலை ஆளுமைகளின் சங்கமமெனவும் கூறலாம்.

இதனை பிறிதொரு வகையில் அரசியல் சார்ந்து சொல்வதானால் மொழியின் மீதான உதாசீனப்படுத்தலிலிருந்து எழுச்சி கொண்ட ஒரு இனத்தின் கலைஞர்கள் தங்கள் தேசத்தின் தலைநகரில் ஒன்று திரண்டு தம் தேச மொழியின் ஆற்றல்களையும், கலைகளின் வீரியத்தையும் சர்வதேசத்திற்கும் பகிரங்கப்படுத்திய நிகழ்வாக இவ்விழாவை சொல்லலாம்.

**(2)**

ஐந்து நாட்களாக இடம் பெற்ற இவ்விழாவில் வாத்திய இசை, தமிழிசைப் பாடல்கள், நடனம், நாடகம் என பல நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. முதல் நாள் நிகழ்வில் வரவேற்பு நிகழ்வாக இசை, நடனம், பாடல் ஆகிய

www.tamilarangam.net



மூன்றினதும் இணைவாக அரங்க செயற்பாட்டுக் குழுவின் சுடரும் தமிழால் ஓர் அரங்கு இடம் பெற்றது. ஈழத்தமிழரின் வாழ்வின் வலியையும், வலிமையையும் பற்றிப் பேசிய இந்நிகழ்வு இப்படியும் ஒரு வரவேற்பை செய்யலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாகவும் திகழ்ந்தது. நடன நிகழ்ச்சிகளாக ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் வழங்கிய காவடி நடனம், மட்டக்களப்பு இசைநடன கல்லூரி மாணவிகள் வழங்கிய செல்வி சர்மிளா கொரேய்யாவின் **எரிமலைகள்**, கிரிஷாந்தி ரவீந்திராவின் **நாட்டியாஞ்சலி** ஆகியவை இடம் பெற்றன. குறிப்பாக விடுதலைக்கலைஞர்கள் வழங்கிய பேபி ஆசிரியையின் **சங்கநாதம்** பார்வையாளர்களை மட்டுமன்றி ஏனைய கலைஞர்களையும் புதியதொரு அனுபவத்தளத்திற்கு கொண்டு செல்லக்கூடியதொரு நிகழ்ச்சியாக





அமைந்திருந்தது. வாத்திய இசை, பாடல் நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரையில் உ.இராதா கிருஷ்ணனின் வயலின் இசை, மட்டக்களப்பு, விபுலானந்தா இசை, நடனக் கல்லூரி மாணவர்களின் வாத்தியபிருந்தா, டொமினிக் குழுவினரின் நாட்டார் இசை ஆகியனவும், எம்.வி.என் நவரெத்தினம், திருமதி.பிரியதர்ஷனி ஜெதீஸ்வரன், பொன்குமாரசுவாமி, தவநாதன் றொபேட், செல்வி ஹம்சத்வனி பாஸ்கரன் ஆகியோரின் தமிழிசைப்பாடல்களும், ஈழத்தமிழர் தேசத்தின் இசைவன்மைக்கும், இசைத் தேடலுக்கும் சான்று பகர்ந்த நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன. விழாவில் இடம்பெற்ற நாடகங்களைப் பொறுத்தவரையில் சிங்கள நாடகங்கள் தவிர்ந்த ஏனைய சகல நாடகங்களும் சமகால ஈழத்து தமிழனின் வாழ்வை அதன் உண்மை நிலையில் நின்று தரிசிப்பனவாக அமைந்திருந்தன. வன்னி மக்களின் வாழ்வின் வலிகளையும், துயரங்களையும் அவற்றை எதிர் கொண்டவாறு மேலெழும் அவர்களின் வலிமையையும் கோடிட்டுக்காட்டுவதாக புதுவை அன்பனின் **கரைதேடும் ஓடங்கள்** நாடகம் அமைந்திருந்தது.

இதேபோன்று எம்.பி.ரவீந்திராவின் **நெருப்புக்குள் வாழ்வு** எஸ்.பாலாவின் **இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா** ஆகியன ஈழத்தமிழர்கள் எதிர் கொண்ட பேரினவாத ஒடுக்கு முறைகளையும், பேரினவாத அநாகரிகங்களையும் வெளிப்படுத்திய ஆற்றுகைகளாக அமைந்திருந்தன. இதேபோன்று




திருமறைக்கலாமன்ற திருமலைக் கலைஞர்கள் வழங்கிய **கூடித்துயர்வெல்** நாடகம் சிறுவர் உணர்வுத் தளத்தினூடாக தேசியப்பிரச்சனையை தொட முற்பட்ட அரங்காற்றுகையாக அமைந்திருந்தது. விழாவில் இடம்பெற்ற சிங்கள நாடகங்களும் விதந்து கூறத்தக்க அற்புதமான ஆற்றுகைகளாகும். பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திராவின் **மனமே** நாடகம் நாட்டுக் கூத்து மரபினையும் நவீன நாடக மரபினையும் இணைத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அற்புதமானதொரு படைப்பாக இருந்தது. அதே போன்று தர்மசிறி பண்டாரநாயக்காவின் **ரோஜனத்துப் பெண்கள்** யுத்த காலத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் வதைகளையும், வலிகளையும் தத்ரூபமாக சித்தரித்த ஆற்றுகையாக திகழ்ந்தது. விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக தமிழக பாடகியான ரி.கே.கலாவின் தமிழிசை நிகழ்ச்சியும், விழாவின் முடிவு நிகழ்வாக தமிழீழ விடுதலை இசைக் குழுவின் தாயக இராகங்களும் இடம்பெற்றன.

என்ற கருத்துக்களை அடியொற்றி திரு.ஜபார் தலைமை உரையை ஆற்றியிருந்தார். இதே போன்று திருமதி ந.ஸ்ரீதேவி, ந.அனந்தராஜ், குறளமுதம் விநாயசோதி ஆகியோர் தங்கள் உரையில் தமிழ் தேசத்திற்கான தனித்துவமான கலைவடிவத்தை உருவாக்கிக் கொள்ளுதல், சமகால நிகழ்வுகளை கலைகளினூடாக பதிவு செய்தல், திருகோணமலையில் கலை, இலக்கியங்களை மேம்படுத்துதல். ஆகியவற்றை முதன்மைக் கருத்தாக முன்நிறுத்தி தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.




விழாவில் இடம்பெற்ற சகல உரைகளும் விழாவின் நோக்கத்தை பல கோணங்களிலும் தெளிவுபடுத்திய பேச்சுக்களாக அமைந்திருந்தன. ஐந்து நாட்களும் முறையே வரவேற்புரையை வ.விக்னேஸ்வரன், கவிஞர் தில்லைமுகிலன், செல்வி.க.சந்திரகுமாரி, யதீந்திரா, முத்து இராதாகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர். ஒடுக்கு முறைகளை தகர்த்து தேசமாக நிமிர்ந்த தமிழ் இனத்தின் பெருவிழா என்ற கருத்தை அடியொற்றியே வரவேற்புரைகள் அமைந்திருந்தன. இதே போன்று தலைமையுரையை முறையே எ.ஜ.எ.ஜபார், வடக்கு கிழக்கு மாகாண கலாச்சாரப் பணிப்பாளர் திருமதி ந.ஸ்ரீதேவி, ந.அனந்தராஜ், குறளமுதம் கா.விநாயகசோதி, சட்டத்தரணி கா.சிவபாலன் ஆகியோர் ஆற்றியிருந்தனர். எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இங்கே இரண்டு அரசுகள் இருப்பது உண்மை. சமாதானத்திற்கான காலம் என்று கருதப்படும் இந்த காலகட்டத்தை சிங்கள தேசம் சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்











சட்டத்தரணி கா.சிவபாலன் அவர்கள் திருகோணமலை மீதான திட்டமிட்ட சிங்கள ஆக்கிரமிப்பினையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் விகாரைகட்டுமானம், விகாரை புனரமைத்தல் என்றபேரில் நில அபகரிப்பு தொடர் வதையும் கண்டிக்கும் வகையில் தனதுரையை வடிவமைத்திருந்தார். திரு.இளையதம்பி தயானந்தா, பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரைகளை அலங்கரித்திருந்தனர்.

ஊடகங்களின் பக்கசார்பினையும், பொறுப்புணர்வின்மையையும், சாடும் வகையில் இளையதம்பி தயானந்தா அவர்களின் பேச்சு அமைந்திருந்தது.

இதேபோன்று பேராசிரியர்களான திருமதி. அம்மன்கிளி முருகதாஸ் அ.சண்முகதாஸ் ஆகியோர் தமிழ்த் தேசத்தின் கலைகளின் வளர்ச்சிப்போக்கு குறித்தும், போராட்ட காலத்தில் அவை ஆற்றிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பங்களிப்புக்கள் குறித்தும் பல கருத்துக்களை தெரிவித்தனர். திரு.இராஜதர்மராஜா இசையின் பன்முகத்தன்மை பற்றியும், காலகட்டத்திற்கு ஏற்ப இசைத்துறையின் வளர்ச்சிப்போக்கு பற்றியும் ஆழமான கருத்துக்களை எடுத்துரைத்தார். முக்கியமாக சிறப்புரைகள் மக்களை பெரிதும் ஆட்கொண்ட உரைகளாக அமைந்திருந்ததை பார்க்க முடிந்தது.

யாழ்ப்பாண மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.எழிலன், திருகோணமலை மாவட்ட மகளிர் அணி அரசியல் பொறுப்பாளர் செல்வி.காருண்யா ஆகியோரது சிறப்புரைகள் போராட்டம் குறித்தும், மாவீரர்களின் தியாகங்கள் குறித்தும், மக்களின் அயராத பங்களிப்பு குறித்தும் ஆழமான பார்வைகளை முன்னிறுத்தின. குறிப்பாக இறுதிநாளன்று சிறப்புரை ஆற்றிய விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் அவர்கள் சமாதானத்திற்கான காலகட்டம் குறித்து பல உண்மைகளை முன்னிறுத்தினார். அறநெறிகளை வலியுறுத்துவதற்கும் வன்முறை தேவைப்படுகின்றது என்ற கருத்தை முன்னிறுத்தி தமிழரின் இராணுவ பலம் குறித்தும், அந்தப்பலத்தின் அவசியப்பாடு குறித்தும் பல கருத்துக்களை எடுத்துரைத்தார்.

இறுதி உரையாக விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் சில நிமிடங்களில் கனதியானதொரு உரையை ஆற்றியிருந்தார்.இப்போது கேட்பதைத் தராவிட்டால் இதுவரை கேட்டுவந்ததை தரவேண்டிவரும் என்ற கருத்தே அவரின் பேச்சின் ஆணிவேராக இருந்தது.

(3)














கலை, பண்பாட்டுக்கழகம் நடாத்திய இந்த இசை, நடன, நாடக விழாவின் அரசியல் முக்கியத்துவத்தை இரண்டு நிலைகளில் பார்க்கலாம்.

1. தமிழ் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் இவ்விழாவின் முக்கியத்துவம்.
2. திருகோணமலை சார்ந்து இவ்விழாவின் முக்கியத்துவம்.

தமிழ் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் இவ்விழா மிகுந்த முக்கியத்துவம் உடைய நிகழ்வாகும். கடந்த காலங்களில் சர்வதேச அளவில் விடுதலைப்புலிகள் குறித்தும் விடுதலைப் போராட்டம் குறித்தும் பல தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளை இராணுவ நிலையோடு மட்டும் மட்டுப்படுத்தி வெறுமனே ஒரு போர் இயந்திரமாகவும், பாசிச அமைப்பாகவும் சித்தரிப்பதற்கான கடும் பிரயத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான போலிப் பிரசாரங்கள், மனித உரிமை மீறல், சனநாயக மறுப்பு போன்ற சொற்பதங்களின் துணை கொண்டே மேற்கொள்ளப்பட்டன. இன்றும் அவ்வாறான போலிப்பிரச்சாரங்கள் முற்றுப் பெற்று விட்டதாக கூறிவிடமுடியாது. விடுதலைப்புலிகளை போரில் வெல்ல முடியாதென்பதை தெளிவாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரிந்து கொண்ட இனவாத சக்திகள் விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்துவதற்கான ஒரு ஆயுதமாகவே இவ்வாறான போலிப்பிரச்சாரங்களை கைக்கொண்டன. இந்நிலமைகளை இவ்விழா கட்டுடைத்திருக்கிறது. போலிப்பிரச்சாரங்களையும், விமர்சனம் என்ற பெயரிலான கொச்சைப்படுத்தல்களையும் இவ்விழா கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. விடுதலைப்புலிகள் தொடர்பாகவும், விடுதலைப்போராட்டம் தொடர்பாகவும் புதிய புரிதலுக்கான வாயில்களை திறந்து விட்டிருக்கிறது. இந்த வகையில் இசை,நடன, நாடக விழா தமிழ் தேசத்தை பொறுத்தவரையில் ஒரு கட்டுடைப்பு அரசியலாக தொழிற்பட்டிருகின்றது எனத் துணிந்து கூறலாம்.


அதே வேளை சிங்கள தேசத்தில் உயர் கலைகளாக மதிக்கப்படும் பேராசிரியர் எதிர்வீர சரத் சந்திராவின் மனமே தர்மசிறி பண்டார நாயக்காவின் ரோஜனத்துப் பெண்கள் போன்ற கலை ஆற்றுகைகள் விழாவில் இடம் பெற்றிருப்பது பிறிதொரு வகையிலும் இவ்விழாவின் முக்கியத்துவத்தை உணரச் செய்கிறது. அதாவது விடுதலைப்புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் கலை, பண்பாட்டம் சங்களை போற்றுவதோடும் பேணிப் பாதுகாப்பதோடும் தங்களை சுருக்கிக் கொண்டவர்களல்ல. மாறாக சக தேசமான சிங்கள தேசத்தின் உயரிய கலைகளை போற்றும், மதிக்கும், உயர் பண்புடையவர்கள் என்ற உண்மை விழாவினூடாக சொல்லப்பட்டிருக்கிறது. இதன் மூலம் விடுதலைப்புலிகள் சிங்கள இனவாதத்திற்கு எதிரானவர்களே அன்றி எப்பொழுதும் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல என்ற உண்மை கலைகளை துணையாகக் கொண்டு தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

இதனடிப் படையில் சிங்கள மக்கள் விடுதலைப்புலிகள் குறித்தும், விடுதலைப் போராட்டம் குறித்தும் வரித்துக் கொண்டிருக்கும் தவறான புரிதல்களை திருத்திக் கொள்வதற்கும் அல்லது மீள் பரிசீலனை செய்வதற்கும் இவ்விழாவினூடாக மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

திருகோணமலையைப் பொறுத்தவரையில் கலை, பண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடக விழா ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு என்பதில் இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. ஏறக்குறைய கால்நூற்றாண்டிற்கு பின்னர் கலையை அடிப்படையாகக் கொண்டு திருமலை வாழ் தமிழர்களில் பெருந்திரளானவர்களை ஒரிடத்தில் திரட்டி தமிழ் தேசியத்தின்பால் உணர்வு நிலையில் ஒன்று படுத்திய ஒரு அம்சமே














தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்விழாவின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிலாகிப்பதற்கு போது மானதாகும். 1956ஆம் ஆண்டு மாசித்திங்கள் 4ம் திகதி நடராசா என்ற இளைஞர் சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்கும் நோக்கில் திருமலை நகரசபை நிர்வாகத்திற குட்பட்ட மணிக்கூட்டு கோபு ரத்தில் எதிர்ப்புணர்வின் வெளிப்பாடாக கறுப்புக் கொடியொன்றை பறக்கவிட முற்பட்டபோது சிங்களத் துப்பாக்கிக்கு பலியாகிப் போனார். நடராசா குருதி சிந்திய அதே மண்ணில் அந்த வரலாற்றை மனங்களில் சேமித்துக் கொண்டு சுதந்திரக் கனவுகளுடன் வாழும்






திருமலை வாழ் தமிழர்கள் முன்னிலையில் ஐந்து நாட்கள் தமிழீழ தேசியக் கொடி காற்றிலே அசைந்து வீர வரலாற்றை பறைசாற்ற

விழா நடைபெற்று முடிந்திருக்கிறது. உண்மையில் இந்நிகழ்வானது இனவாத அரசியல் கட்டமைப்பினாலும், நில அக்கிரமிப்பினாலும் சூழப்பட்டு நிமிர முடியாமல் நிற்கும் திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு புதிய உணர்வு நிலையைப் பாய்ச்சியிருக்கிறது. அதே வேளை நீண்டகாலமாக அசைவற்றிருந்த திருகோணமலை கலை, இலக்கியச் சூழலில் ஒரு புதிய அசைவியக்கத்திற்கான வித்தை பதித்திருக்கிறது.

ஒட்டு மொத்தமாக பார்ப்பின் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் மானுடத்தின் தமிழ் கூடல் II ஆக நடாத்திய இசை, நடன, நாடக விழா ஈழத்தமிழர் தேசிய அரசியல் தொடர்பில் புதிய பார்வைக் கோணங்களுக்கு வித்திட்டிருப்பதுடன் இனவாத அரசியலால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் திருகோணமலை சூழலிலும் ஒரு புதிய அசைவியக்கத்திற்கான வித்தை பதித்திருக்கிறது.



2003





அரை நூற்றாண்டிற்கும் மேலாக சிங்கள பெருந்தேசியவாத ஒடுக்கு முறைகளுக்கு முகம் கொடுத்தவாறு எழுந்து நிற்கும் ஒரு தேசிய இனத்தின் விழா என்ற வகையில் கலை, பண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடகவிழா வரலாற்றில் நீண்டகாலம் பேசும் பொருளாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




சினிமா எனும் சாதனம், நவீன விஞ்ஞானத்தின் பிரவாகத்துடன் வந்து நிலை பெற்றுவிட்ட ஒரு கலைவடிவமாகும். பல கலைக் கூறுகளை உள்ளடக்கிய ஒரு 'Total Art' என இதைக் கூறலாம். மிகைப்படுத்தப்பட்ட உரையாடல்களுக்கோ, அதீத நாடகப்பாங்கான நடிப்புக்கோ, இக்கலையாக்கத்தில் இடமில்லை. நல்ல திரைப்படம் இக்குறைகள் அற்றதாக, கட்புலனுக்கு விருந்து படைக்கும் கலைவடிவமாகச் சாத்தியப்படும்போது, வெற்றி பெற்று விடுகிறது.

சினிமாவின் மொழி, பிற கலைவடிவங்களில் பயிலப்படும் மொழியிலிருந்து வேறானது. வித்தியாசமானது, தேர்ந்த ரசனைமிகுந்த பார்வையாளனுக்கே அதிக புரிதலைத் தரத்தக்கது.

படத்தின் ஒவ்வொரு shot டும், பல காட்சிச் சட்டங்களை அதாவது Frames சைக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்பேதுமின்றி தொடுக்கப்பட்டிருக்கும் ஆனால், அது திரையில் காட்சிப்படுத்தப்படும்போது, பார்வையாளனுக்கு ஏற்கனவே உள்ள புரிதல் காரணமாக, மொழியாக சினிமா மொழியாக வெளிப்படுகிறது. இது சினிமாவுக்கேயான பிரத்தியேக குணமாகும்.

உலகத் திரைப்பட வரலாற்றில் உன்னதங்கள் எனக்கருதப்படும் திரைப்படங்கள் ஒரு சிலதையாவது ஆர அமரப் பார்த்து, ரசித்துப் பெற்ற அனுபவங்களின் பின்னணியில், நமது திரைப்படங்களை மதிப்பீடு செய்வது சற்று ஆயாசம் தருகிற விஷயம்தான்.

வர்த்தக நோக்கினை மட்டுமே முன்நிறுத்தி, முதன்மைப்படுத்திக் கடை விரிக்கும் நமது சினிமா வியாபாரிகளிடம், நுட்பம்சார் கலை மேதைமையும் தற்புதுமையும் மிக்க திரைப்படங்களை எதிர்பார்ப்பது பேதைமைதான். திரையில் நாடகங்களையே - அசல் Theatre ஐ இங்கு நான் குறிப்பிடவில்லை. - பார்த்துப் பழக்கப்பட்ட தமிழ் ரசனைக்கு, சற்று வித்தியாசமான படங்களை பாலுமகேந்திரா, J. மகேந்திரன், G. துரை ஜெயகாந்தன், பரதன் ருத்ரையா, ஹரிஹரன், நாசார்,

க. சட்டநாதன்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தங்கர்பச்சான் நமது ஈழத்து ஞானரதன் போன்றவர்கள் தந்துள்ளார்கள். இவர்களில் ஞானரதன் வீடியோத் திரைப்படங்களை மட்டுமே தந்துள்ளார்.

இந்தப்பின்னணியில் ஈழவிடுதலைப் போராட்டச் சூழலில் உருவான நான் அண்மையில் பார்த்த சில திரைப்படங்கள் பற்றிப் பார்ப்போம் எனது கட்டுரை ஈழத்தில் உருவான அனைத்துத் திரைப்படங்களின் குறிப்பாகவோ, மதிப்பீடாகவோ இருக்காது என்பதை முன்னரே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதலில் ஞானரதனது படங்கள் 1992இல் நடந்த படை நடவடிக்கையால் இடம் பெயர்ந்த ஒரு இளங்குடும்பத்தின் கதையைச் சொல்கிறது அவரது முழுநீளத் திரைப்படமான முகங்கள். அப்படம் பற்றிய எனது மனப்பதிவுகளை இனிப்பார்ப்போம்.

தெல்லிப்பளையில் இருந்து இடம் பெயர்ந்த சந்திரனது குடும்பம் அவனது தந்தையின் நெருங்கிய நண்பரான ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரது குடும்பத்துடன் மல்லாகத்தில் வந்து தங்குகிறது. அவ்விரு குடும்பங்களுக்கும் இடையிலான இணக்கமின்மை, முரண்கள், உரசல்கள் இவையே படத்தின் கதை. கையில் பணமில்லாதபோதும் நண்பர்களது உதவி, மனைவியின் சங்கிலி, கிளாலியால் சென்றுவரும் வன்னி வழி வியாபாரம் என்று அவனது காலம் கழிகிறது. வன்னி வளநாட்டைக் கண்முன் காணும் அவன் குடாநாட்டை விட்டு வன்னிக்குப் போவதற்கு உத்தேசங் கொள்கிறான். ஒருவகையில் அவன் தங்கி இருக்கும் வீட்டுப் பெரியவரின் நச்சரிப்பும், அவரது மனைவியின் தொல்லைகளும், அலட்சியமும் இந்த முடிவுக்கு அவனை விரைவுடுத்துகின்றன. ஒரு சமயம் அவன் வன்னி வழி வியாபாரத்துக்குப் போனபொழுது, கிளாலிப் படகு சேவை ஏதோ அடிபாடு காரணமாக நடைபெறாது போய்விடுகிறது. சிலநாட்களின் பின்னர் அவன் ஊர்திரும்பியபோது தனது ஒரே குழந்தை வயிற்றுப்போக்கால் இறந்துவிட்டதை அறிந்து, துயருறுகின்றான். அந்த அழுத்தமான துயரங்களுடன், மனதைத் தேற்றியபடிக்கு, மனைவியுடன் வன்னிக்குப் புறப்படுவதுடன் படம் முடிகிறது.


இப்படம் மிகவும் இயல்பாக உருவாகியிருப்பது இப்படத்தின் பலமாகும். பலமும், பலவீனமுமான மனிதர்கள் படத்தில் உலாவருவது அழகாய் இருக்கிறது.

நல்லவனாய் மட்டுமல்லாது, நறுக்குத் தெறித்தாற்போன்ற குணஇயல்புடைய சந்திரன், குடும்பநலனில் மிகுந்த அக்கறையுள்ள அவனது இனிய இளம் மனைவி அகிலா, சந்திரனதும் அகிலாவினதும் அன்பான வாழ்க்கையைப் பார்த்துத் தனது இருத்தலின் போதாமையை, பொய்மையை கணவன் வெளிநாட்டில் இருப்பதால் உணர்ந்து தன்னில்தானே கழிவிரக்கம் கொண்டு, தவிக்கும் பெரியவரின் மகள், எப்படியாவது அக்குடும்பத்தை வீட்டைவிட்டு அகற்றுவதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் குடும்பத்தலைவி, அதற்குத் துணைபோகும் எடுப்பார் கைப்பிள்ளையும், கையாலாகாதவருமான வீட்டுப் பெரியவர், உடுக்கை இழந்தவன் கையாக உதவும் நண்பர்கள் என்று பலவேறுபட்ட குணஇயல்புடைய மனிதர்களை இப்படத்தில் தரிசிக்கிறோம்.

மனித மனங்களின் அகவிகசிப்புக்களை, நெருக்கத்தில் காட்டும் Closep Frames சும் வன்னி மண்ணின் மணத்தையும் வளத்தையும் தரத்தவறாத Long Shots சும் இப்படத்தில் அற்புதமாக வந்திருக்கின்றன. படம் பார்த்து முடிந்ததும் நிறைவான படமொன்றைப் பார்த்த அனுபவ உணர்வே எம் நெஞ்சை நிறைக்கிறது.

ஞானரதனது அடுத்தபடம் **காற்றுவெளி.** இப்படம் ஒரு முதியவரைப் பற்றியது. அதே வேளை போராளிகளைப் பற்றியதும்கூட. போராளிகள் மீதான அப்பெரியவரது எரிச்சலும்

# மனவாழ்வு



**என்னுடைய வழியில் இடையிடையே தடைக்கற்கள்**
**நீங்கள் அமைத்திடலாம்.**
**நீச மனத்தோடு**
**எந்தனது காலின் செருப்புகளைக் களவெடுத்தென்**
**பாதங்கள் கொப்பழிக்க**
**என்னை நடத்திடலாம்.**
**எதற்குந் துணிந்தவராய் எழுந்து..என்**
**கால்களையே முறித்து எனைநடக்க விடாதுந் தடுத்திடலாம்**
**கைத்தடியை ஊன்றிநான் கடக்கையில்..அக்**
**கைத்தடியைப்**
**பறித்து நடுத்தெருவில்**
**எனை விழுத்திப் போயிடலாம்.**
**முச்சக்கர வண்டியையும் முடக்கி நொருக்கிடலாம்.**
**ஆனாலும் எந்தன்**
**அகத்தில் மலர்ந்துள்ள**
**எந்தனது பாதையினைப் பற்றிய தெளிவுகளை,**
**எந்தனது பயணம் பற்றிய என் கற்பனையை,**
**நான்தான் பயணிக்க**
**முடியாத போதும்.. என்**
**பயணக் கனவுகளைக் காவுமென் கவிதைகளை**
**உங்களினாற் தடுக்க முடிந்திடுமா?**
**அவற்றையெல்லாம்**
**உங்களினாற் பறித்தெடுக்க முடிந்திடுமா..?**
**கேட்கின்றேன்.**

**த. ஜெயசீலன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சித்திரமாகிறது.

இளம் போராளிகளின் சிறு சிறு தொல்லைகளைத் தாளாத அம்முதியவர் அவர் கறந்துவைத்த பாலைக் காய்ச்சிக் குடிப்பது, கோழிக்கறி சமைப்பதற்கு அவரது பாத்திரங்களைப் பயன்படுத்துவது அவர்களுக்கு பொறுப்பாளர் மூலமாகத் தண்டனை வாங்கிக் கொடுத்து விடுகிறார். பின்னர் அச்சிறு பிள்ளைகள் பெற்றதண்டனைக்காக அவர் கலங்குவதும் அக்கலக்கம் பிரியமாக மாறுவதும் படத்தில் இயல்பாகக் காட்சிப்படுத்தப்படுகிறது.

முதலாவது ஆனையிறவுச் சமரின்போது அவருடன் மல்லுக்கட்டிய போராளிகளில் ஒருவன் வீரச்சாவடைந்து, மாவீரனாய் வித்துடலாய் வரும்போது அவரது பரிவு, கடுந்துயராய் பரிணாமம் கொள்கிறது. படத்தில் இவையாவும் மிக நேர்த்தியாக உயிர்ப்புடன் பதிவு செய்யப்படுகின்றன.

ஞானரதனின் குறும்படங்கள் என்று வரும்போது விஷேசமாகக் குறிப்பிடப்பட வேண்டிய படம் **நேற்று** ஆகும். இப்படம் இந்தியப் படையினரிடம் இருந்து தப்பிவரும் போராளி ஒருவனைக் காத்து உபசரிக்கும் மூதாட்டியைப் பற்றியது. படத்தின் இறுதியில் தேநீர் அடங்கிய பித்தளை மூக்குப் பேணியை, மூதாட்டியும் போராளியும் பற்றி இருப்பது உறை நிலையில் காட்சிப்படுத்தப்படுவது, யாழ் மண்ணுக்கே உரித்தான சகமனிதன் மீதான, இறுக்கமான பிணைப்பை உணர்த்தும் குறியீடாகக் கொள்ளலாம். நல்லபடம். நான் பார்த்த இவரது மற்றொரு குறுந்சிரைப்படம் **நதிமூலம்.** இப்படம் பொய்பேசத் தயங்கும், ஐந்தறிவு ஜீவிகளான கிளியோ, பூனையோ எதுவாயிருந்தாலும் மனம்நெகிழ்ந்து அன்புசெய்யும் சிறுவன் ஒருவன் போராளி ஆனதற்கான ஊற்றுக்கண்ணை, நதிமூலத்தை அலசுகிறது. இப்படம் நேற்று திரைப்படத்தை விட சற்று மாற்றுக் குறைந்தது போல, ஒரு விபரணப் பாங்காக எடுக்கப்பட்டபோதும் காதறுந்த ஒற்றைச் செருப்பு, படையினரின் சப்பாத்துக் காற்தடங்கள், பற்றையில் தொங்கும் சின்னப்பரின் மகளான வசந்தாவின் ஆடைகள், சூழவர எரிந்து சாம்பலாகிப்போன இல்லிடங்கள் மரணங்கள் எனப் போரின் கொடுமைகளை Suggestive ஆக உணர்த்துகிறது. நல்ல உத்தி.

இவரது மற்றொரு படம் **ஒளிபடைத்தகண்** ஆனையிறவுப் போரில் காயமடைந்த போராளி ஒருவனைப்பற்றிய கதை. அவன் காயமடைந்ததால் இருகால்களும் செயலிழந்து போகின்றன. அவனை நீராட்டி, உணவூட்டி மற்றும் சகல பணிவிடைகளையும் மிக மனவிருப்புடன் செய்யும் சக போராளி ஒருவனின் பெருந்தன்மையும் பரிவும் படத்தில் இயல்பாக வருகிறது. கால் செயலற்ற நிலையிலும் அப்போராளி இயங்குகின்றான், செயற்படுகின்றான். இளம் போராளிகளுக்குப் போர்க்கல்வி ஊட்டுவது, போராளிகளின் கலை இலக்கிய நிகழ்ச்சிகளையும் போராட்ட நிகழ்ச்சிகளையும் Video Cassette இல் பதிவு செய்வது என்று அவனது பணி தொடர்கிறது. அவனைப் பார்ப்பதற்கு அவனது பிறந்த நாளன்று வரும் சகோதரி அவனை வீட்டுக்குவரும்படி அழைக்க அவளிடம் தனது இருத்தலின் அர்த்தத்தை இயக்கத்தில் தொடர்ந்து இருந்து செயற்படுவதன் மூலமேபெற முடியும், முடிகிறது என்று கூறுகிறான். வித்தியாசமான அனுபவம்.

ஞானரதன் சினிமா எனும் ஊடகத்தின் அர்த்த பாவங்களை, நுட்பங்களைத் துல்லியமாய் புரிந்து கொண்டு பதிவு செய்யும் ஒரு வாழும் கலைஞர். அவரது பணியின் தொடர்ச்சி நமது சினிமாவின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவக்கூடிய ஒன்றாகும்.

இன்னும் ஒரு சில குறுந்திரைப்படங்கள் பற்றி இனிப்பார்க்கலாம். J.R. ஜெயவர்த்தனா ஒரு உண்மையான பௌத்தனாக இருந்திருப்பின் நான் ஆயுதம் ஏந்தி இருக்க நேர்ந்திருக்காது.. இது தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது கூற்று. இக்கூற்றை அடிச்சரடாக வைத்து எடுக்கப்பட்ட படம் **யாருக்காக?.** இப்படம் பொ. தாசனது குறுந்திரைப்படமாகும்.

ஏழையாக இருந்தபோதும் நல்ல பௌத்த குடும்பத்தில் இருந்து வந்த படைவீரன் ஒருவன் மிக மோசமான படைத்தலைமையின் கீழ் பணியாற்றுகின்றான். தமிழர்களை அழித்தொழி அதாவது 15 வயதுக்கும் 40 வயதுக்குமிடைப்பட்டவர்களை என்ற கட்டளை அதிகாரியின் குரலுக்கு அமைவாகப் பல படையினர் செயல்வடிவம் கொடுத்து நிற்க இவன் மட்டும் வித்தியாசமானவனாய் தான் அனுபவித்த ஏழ்மை நிலையையும் பாச உணர்வையும் ஒத்த அனுபவங்களையும் கொண்ட குடும்பம் ஒன்றினை எதிர் கொள்ளும் வேளையில் மனிதனாக, ஒரு சிறந்த பௌத்தனாக நடந்து கொள்ளுகிறான். குடும்பத்தலைவனை எதுவித இம்சைக்கும் உள்ளாக்காமல், அவனும் மனைவி பிள்ளைகளும் பரிதவித்து நிற்க, அவனைப் பார்த்து, 'போடா.. போ.. வீட்டுக்குள்ள போ..' என்று கூறியபடி, அக்குடும்பத்தைத் திரும்பத்திரும்பப் பார்த்த வண்ணம் தனது முகத்தை அழுத்தமாய்த் துடைத்தபடி, அவ்விடத்தைவிட்டு விலகுவதோடு, படம் முடிவடைகிறது. இப்படம் போர் சூழலின் இக்கட்டை, அவலத்தை வெளிக்கொணர்வதுடன் மனித நேயத்தையும் அழுத்துகிறது.

பொதுவாகத் தாசனின் படைப்புக்களில் ஊடுபாவாக இழைவது, புலிவீரமும் மனித நேயமும்தான்.

என்னைப் பாதித்த இன்னொரு குறும்படம் **'அழியாநிழல்'** இத்திரைப்படத்தை அமலாவும், குயிலினியும் இயக்கி உள்ளனர். குயிலினி படத்தின் ஒளிப்பதிவையும் செய்துள்ளார். இப்படம் விடுதலைப் போராட்டச் சூழலில் வாழ்தல் பற்றிய அக்கறையையும் சக மனிதனின் பாலான பரிவையும் தீவிரமாகப் பரிசீலிக்கிறது. இடம்பெயர்ந்து வாழும் குடும்பத்தின் ஒரு சிலர், விமானக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இறந்துவிட, எஞ்சும் குடும்பத்தலைவனும் இரு பிள்ளைகளும் மீளவும் இடம்பெயர்வதுடன் படம் நிறைவடைகிறது. படத்தின் காட்சிகளும் பிம்பங்களும் படம் பார்த்து முடிந்த பின்னருங்கூட மன அரங்கில் அசைகின்ற அற்புதம் நிகழ்கிறது. உரையாடல் ஏதுமற்ற இப்படத்தில் பின்னணி இசையும் சூழலின் இயற்கை ஒலியுமே கேட்கிறது. இடை இடையே குழந்தைகளின் அழுகுரலும்கூட, இந்த உத்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர்ப்புணர்வும் சூழலின் தாக்கத்தால் அனுதாபம் மிக்கதாகவும், விடுதலைப் போராட்டத்தின் தேவையை உணரும் பரிபக்குவமுடையதாகவும் மாறும் நிலை இப்படத்தில் புதியது. அத்துடன் இது கட்புல வலுவை உச்சத்துக்கு எடுத்துச் செல்ல உதவுகிறது. அழுத்தமான மௌனப்படம் ஒன்றைப் பார்த்த அனுபவக் கிளர்தலை இப்படம் தரத்தவறவில்லை

ந. கேசவராஜன் இயக்கிய **அப்பாவருவார்** எனும் குறுந்திரைப்படமும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒன்றாகும். படப்பிடிப்புக்கு Digital முறை பயன்படுத்தப்பட்டிருப்பதால், நடிப்பு அப்படி இப்படி இருந்தபோதும் ஒளி, ஒலி, உரையாடல், பகைப்புலம் என்பன இப்படத்தில் போதிய தெளிவுடனும் ஒத்திசைவுடனும் வந்துளது.


இடம்பெயர்ந்து வாழும் குடும்பத்தலைவன் பகைவனால் ஆக்கிரமிக்கப்பட்ட தனது தென்னங்காணிக்குப் போய் - எல்லாம் வயிற்றுப்பாட்டுக்குத்தான் - கொடூரமான முறையில் படையினரால் கொலை செய்யப்படுவதும், அப்பா வருவார் என அவனது மகளும், மனைவியும் காத்திருப்பதும் படத்தில் நெஞ்சைத் தொடும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பொதுவாக இத்திரைப்படங்கள் முழுநீளப்படங்களாக இருந்தாலும் குறும் படங்களாக இருந்தாலும் அவை மனித பலவீனங்களுக்கு ஒத்தடங்கொடுக்கும் தென்னிந்திய சினிமாக்களில் இருந்து வேறுபட்டவையாக இருப்பதையே என்னால் அவதானிக்க முடிகிறது. நமது வாழ்வோடு ஒன்றிவிட்ட யுத்தம், அதன் கொடுமைகள், மரணங்கள், இடப்பெயர்வுகள், உயிரும் உடலும் ஒடுங்கி நலிந்த மனிதர்கள், அவர்தம் ஆழ்ந்த துயரம், காயப்பட்ட மனிதனின் பரிதவிப்பு இவற்றுடன் போராளிகளின் வீரம் செறிந்த பெருமிதம் எனப் பல விஷயங்களை இத்திரைப்படங்கள் மெய்மை குன்றாமல் பதிவு செய்கின்றன. அதுவும் சினிமா என்பது கட்புலன் சார்ந்த ஊடகம் என்ற புரிதலுடன்.

சரி இத்திரைப்படங்களில் குறைபாடுகளே இல்லையா? நீங்கள் கேட்கலாம். குறைகள் இருக்கவே செய்கின்றன. திரைப்பிரதிகள் ஓரளவு செம்மையாக இருந்தபோதும், திருத்தமற்ற உரையாடல்கள் இப்படங்களில் விரவிக் கிடக்கின்றன. அவ்வுரையாடல்களை அமுக்கிவிடக்கூடிய தூக்கலான பின்னணி இசையும் சில படங்களில் இடம் பெற்று எரிச்சலூட்டுகிறது. இன்னொரு குறைபாடு பெரும்பாலான நமது படங்கள் போர்ச் சூழலை மையப்படுத்தியே தயாரிக்கப்படுகின்றன. அதற்கு அப்பால் நமது பார்வை விரிவடைவதில்லை. இக்குறைபாட்டையே ஞானரதன் அவர்களும், உதயன் தினசரிக்கு அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில் சுட்டுகிறார்.

போருக்கு வெளியே சமூகம் சார்ந்த கதைக் கருக்களைக் கையாளக் கூடிய இலக்கியத் திறனாய்வுப் பார்வை இவர்களிடையே (போராளிக் கலைஞர்கள்) வளர்க்கப்பட்டால் அதி சிறந்த படங்களை இவர்களால் உருவாக்க முடியும்..

நல்ல சினிமா வார்த்தைகளுக்கும் பிம்பங்களுக்குமிடையே கண்ணுக்குத் தெரியாமல் இமைபோடும் உணர்வில்தான் உள்ளது என்று எங்கோ




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





விழிசிட்டி க. சிவராஜா

# சலனம்

ஏதோ யோசனையில் ஆழ்ந்தவனாக அருணன் திரும்பத் திரும்ப மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகட்டையே அழுத்தித் துடைத்துக் கொண்டிருந்தான். அவனது நண்பன் மதன் காலையில் கேட்டது நினைவில் வந்து சுழன்று கொண்டிருந்தது.

மதன் கேட்டது போல இன்றைக்கு மாவீரர் கலையரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிக்குப் போக அவனிற்கு முழு விருப்பமாக இருந்தாலும் ஏதோ உள்ளூர ஒரு படபடப்பு. போகாமல் விட்டாலென்ன? என்று தடுத்துக் கொண்டிருந்தது.

பின்னால் இருந்து கேட்ட மதனின் குரல் அவனது யோசனையைத் தடை செய்தது.

“ அருணன்! தகட்டில இருந்த இலக்கமெல்லாம் அழிஞ்சு போச்சுது விடு ”

துடைப்பதை நிறுத்திக் கொண்டு, அருணன் மதனைத் திரும்பிப் பார்த்தான்.

''மோட்டைச் சைக்கிளைக் கிளீனாகத் துடைக்கிறாய் அப்ப இரவுக்கு நிகழ்ச்சிக்குப் போறது தானே...'' மீண்டும் கேட்டான்.

''நீ போட்டு வா.. வேணுமெண்டால் மோட்டைச் சைக்கிளைத் தாறன் ”

“ என்ன அருணன்... முகாமில இருக்கிற எல்லாப் போராளிகளும் போயினம், நீ அலுப்படிக்கிறாய் உங்கட ஊரில நடக்குதெண்டோ ”

“ ஏன் நான் ஊருக்குப் போறதில்லையே? போன கிழமை உன்னையும் கூட்டிக்கொண்டு தானே போனனான். ”

“ அதுதான் வா போட்டு வருவம்... இண்டைக்கு தமிழீழ இசைக்குழுவும் வருகுது. ”

“ நீ போய் நல்லாப் பாத்திட்டு வா..”

“ஏன் தமிழீழ இசைக்குழு உனக்கு விருப்பம் இல்லையோ?

“ நல்லாப் பிடிக்கும் ”

“ அப்ப... கலையரங்கு பிடிக்கேல்லையோ ”

www.tamilarangam.net



''நல்லா இருக்கு எனக்கு அந்த இடம் பிடிக்கும். ஏனெண்டால் எட்டு வருஷங் களுக்கு முன்னம், நிகழ்ச்சி பார்க்க வந்த நான் திரும்ப வீட்டுக்குப் போகவில்லை, அப்படியே இயக்கத்துக்கு வந்திட்டன்.. ''

''என்ன.. எனக்குச் சொல்லேலல்ல.. நான் உன்னை பயிற்சியில்தானே கண்டனான். பிறகு நிறையச் சண்டை பிடிச்சு, சாதனைகள் செய்து... இப்ப வீட்டுக்குப் போய் வாறாய்.. அப்ப ஏன் அருணன் கலையரங்கிற்கு வரமாட்ட னென்கிறாய்.. ''
விடாமல் கேட்டான் மதன்.

'' மதன் நீ துருவித் துருவி கேட்கிறதால சொல்லுறன் என்னைத் தவிர இந்த விஷயம் இன்னொருத் தருக்கு இண்டைக்குத்தான் தெரியுது.

'' சொல்லு.. சொல்லு.. ஏதோ விஷயம் இருக்குது '' தூண்டினான் மதன்.

''எங்கட வீட்டுக்குப் பக்கத்தில, மஞ்சு..மஞ்சு என்று ஒரு பிள்ளை.. ''

''படு இன்றெஸ்ரிங்கா இருக்கு சொல்லடா அருணன்..'' கிட்டநெருங்கினான் மதன்

மதனைக் கடந்து.. அந்த முகாமைக் கடந்து, அருணனின் சிந்தனை அகண்டு விரிந்தது.

□□□

பாடசாலை விட்டு, வீட்டிற்குப் போய் சாப்பிட்டு விட்டு அவசரம் அவசரமாக கால்பந்து விளையாட மைதானம் போய்க் கொண்டிருந் தவனை, எதிரில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மஞ்சு இடைமறித்தாள்.

'' ஒரு நிமஷம் நில்லுங்கோ அருணன் ''

'' என்ன ''

'' எனக்கொரு கட்டுரை எழுதித் தரவேணும் ''

எப்ப வேணும்... ''

'' புதன் கிழமை இது தான் தலைப்பு ''

'' சரி தாறன் ''

இந்தக் கட்டுரை எழுதும் வேலையை அடிக்கடி மஞ்சு அவனிற்குக் கொடுத்துக் கொண்டேயிருந்தாள். அவனிலும் பார்க்க இரண்டு ஆண்டுகள் குறைவாகப் படித்தாலும் மஞ்சு, அவனைப் படிக்கச்சொல்லி உற்சாகப் படுத்துவதும், கால்ப்பந்து விளையாட்டில் அவனது திறமையைப் பாராட்டுவதும்... இப்படியாக அவள் அவனோடு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தாள். ஆனால் அருணனின் மனதில் எந்தச் சலனத்தையும் அது ஏற்படுத்தவில்லை.

மஞ்சுவைப் பொறுத்த வரையில் அருணனைக் காணாவிட்டால் பொழுதே புலராத மாதிரி மனதுக்குள் ஒரு வித புழுக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

இந்த வேளையில் இளைஞர்கள் போராட்டத்துடன் இணைந்து கொள்வதின் அவசியம் பற்றி மூலைக்கு மூலை பிரசார வேலைகள் தொடர்ந்து கொண்டிருந்தன. அருணனிற்கும் போராட்டத்தில் மனதளவில் ஈடுபாடு இருந்தது.

அவனது இரண்டு நண்பர்கள் இயக்கத்தில் இணைந்தபோது, அவன் இருப்புக் கொள்ளாமல் தவித்தான். இயக்க ஈடுபாடுகளில் கணிசமான நேரத்தை அவன் ஒதுக்கிக் கொண்டான்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. அவனது வீட்டுக்காறர் எல்லோரும் இனத்தவர்களின் திருமண வீட்டிற்குப் போயிருந் தார்கள்.அவன் மாத்திரம் தனித்திருந்து தாள்களை வைத்து எழுதிக் கொண்டிருந்தான். படலை திறக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

மஞ்சு வந்து கொண்டி ருந்தாள்.

அவள் இப்போதெல்லாம் அவனது அம்மாவையும், தங்கையையும் தேடிக்கொண்டு அடிக்கடி வருவது வழக்கமாகி விட்டது.

'' வாரும் மஞ்சு, அம்மா ஆக்கள் மாமா வீட்டுக் கலியாணத்துக்குப் போட்டினம்''

''அ... பரவாயில்லை... என்ன எழுதிக் கொண்டிருக்கிறியள்?''

''பிரசாரத்துக்கு ஒரு வீதி நாடகம் எழுத முயற்சிக்கிறன் '' சிரித்தபடி சொன்னான்.

''வர வர இயக்க ஈடுபாடு உங்களுக்கு இப்ப கூட''

''ஏன் இருக்கப்படாதோ? எத்தனையோ பேர் இயக்கத்தில சேர்ந்து கொண்டிருக்கினம் ''

'' நீங்களும் சேருகிற யோசனையோ ''

''யோசனை மனதளவில் இருக்கு ''

''அருணன் ''.... அவளின் குரலில் நெகிழ்ச்சி தொனித்தது. அவளே தொடர்ந்தாள்.

'' என்னைப்பற்றி என்ன நினைக்கிறியள்'' அவன் பேசாதிருந்தான்.

''நான் நேரடியாகவே கேட்கிறன் அருண்! என்னில் உங்களுக்கு விருப்பம் இல்லையோ அவள் அழுது விடுவாள் போலிருந்தது. அவளது கேள்வியின் நோக்கம், அவனிற்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. மஞ்சு தன்னை இப்படியான ஒரு நிலைக்கு வளர்த்துக் கொண்டிருக் கிறாளென்று நினைக்கும் போது ஆச்சரியமாக இருந்தது.

'' என்ன அருண் பேசாமல் இருக்கிறியள் என்னைப்

www.tamilarangam.net



பிடிக்கேல்லையோ "
அவன் என்ன சொல்வதென்று தடுமாறிக் கொண்டிருந்தான்.

" அருண்! நீங்கள் நல்லாப் படிக்கக் கூடியனீங்கள், கம்பஸிற்கு இந்த முறை எடுபடுவியளென்டு.. பள்ளிக்கூடத்தில் எல்லோரும் சொல்லுகினம்.. அதைக் கேட்க எவ்வளவு சந்தோஷமாக இருக்கு.. ஆனால்.." அவன் என்ன என்பது போல அவளைப் பார்த்தான்

" மற்ற வேலைகளைக் கொஞ்சம் நிற்பாட்டிக் கொள்ளுங்கோ.."

" புட்போல் அடிக்கிறதைச் சொல்லுறீரோ "

" அது தேவைதானே.. நான் இயக்க வேலைகளைச் சொல்லுறன் " அருணன் வாய்விட்டுச் சிரித்தான்.

" இப்பவும் ஏதோ எழுதிக் கொண்டு தானே இருக்கிறியள்.. உந்த வேலைகளைக் கொஞ்சம் நிற்பாட்டுங்கோவன் " அவள் குரலில் கெஞ்சல் தெரிந்தது. படலைக்கு வெளியே மணிச்சத்தம் கேட்டது.

"நான் பிறகு வாறன் அருண்" சொல்லிவிட்டு அவள் புறப்பட்டாள்.

□□□

"அப்ப அருணன் நீ அவளுக்கு முடிவு ஒண்டும் சொல்லவில்லையோ? " இதுவரை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மதன் கேட்டான்.

"என்ன முடிவைச் சொல்லுறது மதன்.. என்னுடைய மனதில இயக்க ஈடுபாடு இருந்தது.. அவள் கேட்டதை மறுத்துச் சொல்லி அவளின்ர மனதை நோகடிக்க எனக்கு விருப்பமில்லை. "

" அதுக்குப் பிறகு மஞ்சு இதுபற்றிக் கேட்கவில்லையோ? "

□□□

" மஞ்சு வீட்டிற்கு வந்து கேட்ட சம்பவத்திற்குப் பிறகு கூடிய வரையில் அவளைச் சந்திப்பதைத் தவிர்த்து வந்தான். ஆனால் மஞ்சுவோ ஏதாவது ஒரு சம்பவத்தைப் பயன்படுத்தி, அவனோடு பேசிக் கொள்ளத் துடித்துக் கொண்டிருந்தாள்.

அன்று.. மாவீரர் கலையரங்கில் போராளிகளின் நிகழ்வு ஒன்று நடந்து கொண்டிருந்தது. மைதானம் மக்களால் நிறைந்திருந்தது. போராளிகள் நிகழ்த்திய நாடகம் ஒன்று, எல்லோரையும்.. கண் கலங்க வைத்தது.

மைதானத்தின் ஓரத்தில் உணர்வு நரம்புகள் எல்லாம் புடைத்தெழ தன்னை மறந்து நின்றான் அருணன்.

"அருண் " பின்னால் குரல்

# தடைச்சட்டமா? சிறையா?



முற்றத்திலே
கக்கத்தில்
வெட்கமறியாது
உட்காந்திருக்கும் பேரனுடன்
முதுமையின் வெளிச்சம்
வேரோடிய முகத்துடன்
வெறுச்சோடிப் பார்த்தாள்
கையில்
கிண்ணத்தில்
பாற்சோறு

மீண்டும்
மீண்டும்
எட்டிப்பார்த்தாள்
காணவில்லை,
வயிற்றைக் கிள்ளியது
பசியல்ல,

பாவம்!
உறங்கிவிட்டான் பேரன்.

கடிகாரத்தின் கம்பிகளுடன்
ஓடியது
நம்பிக்கையின் கம்பிகளும்தான்
பொறுமை பொசுங்கிவிட்டது
பொக்குவாயைத் திறந்து
புறுபுறுத்தாள்.
ம்.........
அகதி முகாம்களுக்கு வந்துசேரும்
நிவாரணம் போல்தான்
புண்பட்ட முழங்காலில்
தவண்டு வருதாக்கும்

ம்.......
மீண்டும் புறுபுறுத்தாள்
ம்..............ம்.............
பாழாய்ப் போனவர்கள்
போட்டுவிட்டார்களா?
பால் நிலவுக்கும் கூட
பயங்கரவாத தடைச்சட்டம்
அல்லது
சிறை வைத்து விட்டார்களா?

கோளாவில் கி.சுரேந்திரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேட்டுத் திரும்பிப் பார்த்தான். மஞ்சு நின்று கொண்டிருந்தாள்.

" என்ன யோசித்துக் கொண்டு நிக்கிறியள் "

" இன்னும் நாங்கள் இப்படியே இருந்து என்ன செய்யப் போகிறோமெண்டு யோசிக்கிறன். " மெல்லிய வெளிச்சத்திலும் அவள் முகம் சட்டென மாறியதை அருணன் கவனிக்கத் தவறவில்லை.

" நிகழ்ச்சி முடிஞ்சுது தானே... நான் உங்கட அம்மா ஆக்களோட தான் வந்தனான்.. வாருங்கோவன் வீட்டை போவம்.. "

" நான் வீட்டை வரேல்லை"

" அப்ப? "

" நான் இயக்கத்துக்குப் போகப்போறன் "

" என்ன? " அவள் திடுக்கிட்டு நிமிர்வதற்குள் அருணன் போராளிகள் நிற்கும் இடம் நோக்கி நடக்கத் தொடங்கினான்.

" அருண்! நில்லுங்கோ!.. நான் சொல்லுறதைக் கேளுங்கோ.. "

மஞ்சுவின் உடைந்த குரல்.. அவனிற்குப் பின்னால் தூரத்தில் கேட்டது.

□□□

அவன் போராளியாகி, சண்டைக்களங்களில் எத்தனையோ சாதனைகள் சாதித்தபோதெல்லாம் பல தடவைகள் சந்தர்ப்பம் கிடைத்த போதும் அவன் வீட்டிற்குப் போகவில்லை. தாய்தான் பல தடவைகள் முகாமிற்கு தேடிவந்து, சந்தித்துப் போயிருக்கிறாள். அப்போதெல்லாம் கதையோடு கதையாக, மஞ்சு திருமணம் செய்த விஷயத்தையும் அவளது சுக நலம் பற்றியும் சொல்லிச் சென்றிருக்கிறாள்.

இப்போது கலை நிகழ்ச்சிக்கு வரும்படி மதன் வற்புறுத்துகிறான்.

" மதன் வெளிக்கிடு போவம்" மதன் மகிழ்ச்சியுடன் புறப்பட்டான்.

துாரத்தே மாவீரர் கலையரங்க மைதானம் வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருந்தது. அருணனின் மனம் படபடத்தது. எட்டு வருஷங்களுக்கு முன், வாழ்க்கையைத் திசை திருப்பிய இடம்.

எத்தனை சாதனைகளைப் புரிய அடிப்படையாக இருந்த இடம்.

மோட்டார் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு, கச்சான் விற்கும் ஒரு அம்மாவிற்குப் பக்கத்தில் இருந்து கொள்ள ஆயத்தமானார்கள்.

" அருணன்! நான் ஒரு தடவை மேடையடிக்குப் போய் வாறன் இதிலையே இரு.. " மதன் அருணனின் பதிலுக்குக் காத்திராமல் வேகமாக நடந்தான். மேடையில் யாரோ பேசிக்கொண்டிருந்தார்கள்.

' ' அம்மாவும் வந்திருப்பாவோ'' எண்ணியபடி பார்வையை அலைய விட்டான்.

ஒரு இளம் பெண் சிறுமி ஒருத்தியைக் கையைப்பிடித்துக் கூட்டி வருவது தெரிந்தது. அவர்கள் இரண்டுபேரும் கச்சான் விற்கும் அம்மாவிற்கு முன்னால் நின்றார்கள். கச்சான் வாங்கப்போகிறார்கள் போலிருக்கிறது அருணன் எண்ணிக் கொண்டான். கச்சான் அம்மாவின் விளக்கு வெளிச்சத்தில் அந்த இளம் பெண்ணின் முகத்தைப் பார்த்ததும்... அருணனின் நெஞ்சு பட படத்தது. அவள்.. அவள்... மஞ்சு, முகத்தைக் காட்டிக் கொள்ளாமல் மறுபக்கமாகத் திரும்ப முனைந்தான் அருணன்.

அவன் 'வரிச்சீருடை' உடுப்பில் இருந்ததால்.. மஞ்சுவின் பார்வையும் அருணனின் பக்கம் சாதாரணமாகத் திரும்பியது. ஏதோ ஒரு பிரகாசம் அவள் கண்களில். அருணன் முகத்தை முற்றாக வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

பக்கத்தே காலடி ஓசைகள்..

இப்போது மஞ்சு அவனின் முன்னால் வந்து நின்றாள். பேச்சு வராமல் உதடுகள் தடுமாறின.

" என்ன அருண் பேசாமல் இருக்கிறியள் "

" ஓ.. மஞ்சுவே நான் எதிர் பார்க்கேல்லை "

" இவள் என்னுடைய மகள்"

" ஓ.. பெயரென்ன "

" அருளினி "

" வா குட்டி இங்க " சிறுமியும் தயங்காமல் அவனிடம் வந்தாள். அருணன் சிறுமியை மிருதுவாக அணைத்துக் கொண்டான்.

" புலிமாமாக்களை.. இவளுக்கு நல்லாப் பிடிக்கும்.. அருண் அவரும் வந்திருக்கிறார்.. வாருங்கோ அறிமுகப்படுத்தி வைக்கிறன்..

" இன்னுமொரு நாளைக்கு வாறன் "

" நம்பலாமோ "

"அம்மாவைப் பார்க்க வருவன்.. அப்ப நிச்சயம் வருவன் "

" அருண்! அண்டைக்கு நான் தடுக்க நீங்கள் நின்றிருந்தால் இவ்வளவு சாதனைகளை நீங்கள் சாதிச்சிருக்கேலாமற் போயிருக்கும் உங்களைப் பற்றிய செய்திகள் கேட்கிறபோதெல்லாம்.. நான் எவ்வளவு சந்தோஷப்படுவன் தெரியுமோ.... இப்ப கூட இந்த சமாதானமும் அமைதியும் வர, அதில உங்கட பங்களிப்பும் இருக்கெண்டு நினைக்க... அருளினி! மாமாவுக்கு கச்சான் குடு.. என்ன அருணன் பேசாமல் நிற்கிறியள்.. "

" ஓ.. ஒண்டுமில்லை.. வாரும் மஞ்சு உங்கட அவரைச் சந்திப்பம் " அவன் அருளினியின் பிஞ்சு விரல்களைப் பிடித்துக் கொண்டு நடந்தான். அவனது நடையில் என்றுமில்லாத மகிழ்ச்சி தெரிந்தது. எதிரே மதன் வந்து கொண்டிருந்தான். □


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**? தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து தற்போது கனடாவில் வாழும் இசைக்கலைஞரான தங்களின் பூர்வீகம், இளமைக் காலம், குடும்பம், இசையாரம்பம் பற்றி கொஞ்சம் விரிவாகப் பேசுங்கள்.**

நான் தமிழீழத்தில் கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவன். எனது தந்தையார் பெயர் சோதிலிங்கம். தமிழாசிரியராகப் பணியாற்றியவர். தாயார் பெயர் பரிபூரணம்.
நான் எனது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையிலும், பின் உயர்கல்வியை யாழ்.மத்திய கல்லூரியிலும் பயின்றேன். 1983ம் ஆண்டு ஆடி மாதம் 22ம் நாள் நான் தமிழீழத்தை விட்டு வெளியேறி கனடா வந்தேன்.




இசைத்துறையைப் பொறுத்தவரை நான் இசையை முறையாகப் பயிலவில்லை. நான் ஈழத்தில் வசித்த காலத்தில் இலங்கை வானொலியில் ஒலித்துக்கொண்டிருக்கும் இந்திய தென்னகத்து பாடல்கள்தான் எனக்கு இசை புகட்டியது எனலாம். கேள்விஞானத்தை வைத்தே நான் என்னை வளர்த்துக் கொண்டேன்.

தமிழீழத்தில் சிறுவயதில் எனது தந்தையார் பயிற்றுவித்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தான் எனது மேடை அரங்கேற்றம். அந்நிகழ்ச்சி 1975, 76ல் நடைபெற்றது என நம்புகின்றேன்.

எனது குடும்பத்தில் என்னுடன் சேர்த்து 6 பேர்கள். அனைவரும் தற்போது கனடாவில் தான் வாழ்ந்து வருகிறோம். எனக்குத் திருமணமாகி இரு ஆண்குழந்தைகள். மூத்தவருக்கு ஏழு வயது. அவர் எமது இசைக்குழுவில் **'சல்லாரி'** என்னும் இசைக்கருவி வாசிக்கின்றார். எனது அண்ணனின் மகன் சாகரன். அவரும் மிகச் சிறுவயதிலேயே எமது இசைக்குழுவில் இணைந்து எமது தாயகத்து இளம் குயில் **'குட்டிக் கண்ணனின்'** பாடல்களை பாடிவருகிறார். இத்துடன் எமது இசைக்குழுவில் அங்கம் வகிக்கும் பாடகர் கண்ணதாசனது மகன் சக்தியும் பக்கவாத்தியக் கலைஞராகப் பணியாற்றுகின்றார்.

எனது இசையாரம்பம் என்று கூறப்போனால் கனடிய மண்ணிலேதான் என்று கூறுவேன். அதிலும் எம்தாயகத்தின் விடிவிற்காக ஒரு இசைக்குழுவை அமைத்து அதற்குப் பொறுப்பாளனாக இருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**? தாயகத்தில் தாங்கள் வாழ்ந்த காலத்தில் இசைத்துறைக்கு ஆற்றிய பணி பற்றியும், புலம்பெயர்ந்து சென்ற பின் இப்போது ஆற்றும் பணி பற்றியும் கூறுங்கள்.**

*இசைத் துறையைப் பொறுத்தவரை நான் முறைப்படி பயிலவில்லை. ஆனால் இசையை இரசிக்கும் ஒரு இரசிகனாக இருந்தேன். அந்தக் காலங்களில் கோவில் திருவிழாக்கள், மற்றும் பல கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். அப்போது இசைநிகழ்ச்சிகள் கடைசி நிகழ்ச்சிகளாகவே இடம்பெறும். இசைநிகழ்ச்சிகளை முதல் வரிசையில் அமர்ந்திருந்து நிகழ்ச்சி முடியும் வரை பார்ப்பேன். அக்காலகட்டத்தில் தற்போது தமிழீழப் பாடல்களுக்கு இசையமைத்து வரும் தமிழீழத்தின் ஆஸ்தான இசையமைப்பாளராகிய **'கண்ணன்'** அண்ணையின் இசைக்குழுவிற்கு பெரும் வரவேற்பிருந்தது. எல்லோரும் **'கண்ணன் கோஷ்டி'** என்று அழைப்பார்கள். ஒரு வகையில் கண்ணன் அண்ணாவின் இசை நிகழ்ச்சியும் என்னைப் பாடத் தூண்டியது எனலாம். நான் எமது போராட்டம் மக்கள் போராட்டமாகிய கால கட்டத்திற்கு முன்பே எனது தாயக மண்ணை விட்டு வெளியேறிவிட்டேன்.*

*தாயக மண்ணில் நான் வசித்த காலத்தில் இசைத்துறைக்கு எவ்வித பணியும் ஆற்றவில்லை. புலம் பெயர்ந்து கனடா வந்த பின்பு தான் எனது இசைப் பணி ஆரம்பமாகியது. இப்பணி மூலம் **தாயக** விடுதலைக்கு என்னால் பணியாற்ற முடிகிறது.*

**? 'வானம்பாடிகள்' என்றஇசைக் குழுவை வெற்றிகரமாக நடாத்திக் கனடாவிலும், புலம்பெயர்ந்த எம் மக்கள் மத்தியிலும் இன்னும்சொல்வ தாயின் தாயக மக்களிடையேயும் நன்கு அறிமுகமாகியுள்ள தாங்கள் 'வானம்பாடிகள்' உருவாகிய தோற்றுவாயைச் சொல்லுங்கள்.**

*1989ம் ஆண்டு வைகாசி மாதம் என நினைக்கிறேன். இங்கு 'கனடாவில்' இயங்கிக் கொண்டிருக்கும் **'உலகத் தமிழர் இயக்க' கலை,** **பண்பாட்டுக் கழகப்** பொறுப்பாளராக இருந்த திரு.உதயன் **அவர்கள் என்னை** அழைத்து எமது அமைப்பிற்கு ஒரு இசைக்குழு தேவை என்பதனை என்னிடம் **கூறினார்**. அப்போது ஒரு விசைப்பலகை* ***'Keyboard'*** *கலைஞரையும்,* ***Lead Guiter*** *கலைஞரையும், 3தாள வாத்தியக் கலைஞர்களையும், இங்குள்ள சில பாடகர்களையும் ஒன்றிணைத்து இந்த இசைக்குழுவை ஆரம்பித்தோம்.*



"தாயக மண்ணில் நான் வசித்த காலத்தில் இசைத்துறைக்கு எவ்வித பணியும் ஆற்றவில்லை. புலம் பெயர்ந்து கனடா வந்த பின்பு தான் எனது இசைப் பணி ஆரம்பமாகியது. இப்பணி மூலம் தாயக விடுதலைக்கு என்னால் பணியாற்ற முடிகிறது."

*ஆரம்ப காலங்களில் நாம் கூடுதலாக சினிமா புரட்சிப் பாடல்களையும், ஓரிரு தாயகப் பாடல்களையும் பாடினோம். காரணம் அந்த நேரங்களில் இங்கு எமது தாயகப் பாடல்கள் மக்கள் மனங்களில் பதிந்திராத காலம். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் இங்குள்ள மக்கள் மனங்களிலே இந்திய சினிமா மோகம் மேலோங்கி இருந்ததென்றே கூறவேண்டும். பின் நாளடைவில் மூன்று.., நான்கு.., எனத் தாயகப்பாடல்களைப் பாடி புலம் பெயர் தாயக மக்களுக்கு எமது தாய் தேசத்துப்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடல்களின் உன்னதங்களைப் பதிய வைத்தோம்.

2000ம் ஆண்டு என நினைக்கின்றேன். இங்குள்ள ஊர்ச்சங்கம் ஒன்று நடாத்திய கலை நிகழ்வில் **'வானம்பாடிகளின்'** நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துவிட்டு 'கொஞ்சம்' சினிமாப் பாடல்களை கூடுதலாகப் பாடும் படி கேட்டார்கள். நாம் 15 பாடல்களில் 10 சினிமாப் பாடல்களைப் பாடிவிட்டு 5 தமிழீழப் பாடல்களைப் பாடினோம். நிகழ்ச்சி முடிந்தவுடன் சுவைஞர்களில் பலர் எம்மை அணுகி இன்னும் கொஞ்சத் தமிழீழப் பாடல்களைப் பாடியிருக்கலாமே என்று கேட்டனர்.



இதை ஏன் கூறுகிறேன் என்றால் புலம் பெயர்ந்த மக்களிடையே எம் தாயகப் பாடல்கள் எவ்வளவு ஆழமாகப் பதிந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டவே.

எமது முதல் இசை நிகழ்ச்சி 1989 ம[illegible] நாள் நிகழ்வில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சி 5 இசைக் கலைஞர்களுடன் நடைபெற்றது. அன்றையகாலகட்டங்களில் எமது இசை நிகழ்ச்சிக்கு மிகப் பெரிய வரவேற்புக் கிடைத்தது. அப்போது எமது இசைக்குழுவிற்கு ஒரு பெயரும் சூட்டப்படவில்லை. பின்னர் எமது இசைக்குழுவினரோடு கலந்தாலோசித்தபோது எமது நிகழ்ச்சிப் தொகுப்பாளர் திரு.ஞானபண்டிதன் அவர்கள் **'வானம்பாடிகள்'** என்ற பெயர் நன்றாக இருக்கும் என்று கூறினார். அதனை எமது இசைக்குழுவின் அனைவரது விருப்புடனும், **உலகத் தமிழர் இயக்கத்தின்** அனுமதியுடனும் சூடினோம்.

எமது இசைக்குழுவைப் பொறுத்த வரையில் அதன் வளர்ச்சி தனியே என்னால் மட்டுமின்றி **'வானம்பாடிகள்'** இசைக்குழுவில் அங்கம் வசிக்கும் அனைத்துக் கலைஞர்களின் தேசப் பற்றும், விடுதலையுணர்வும் அவர்களது முழுமையான ஒத்துழைப்பும் அவர்களிடையே ஆழமாக வேரூன்றி இருப்பதால்தான் **'வானம்பாடிகள்'** இன்று தாயகம் வரை தனது சிறகுகளை விரித்துப் பறக்கிறது.

**எமது இசைக்குழு ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை வருடம் இருமுறை மொன்றியல் நகரில் எமது இசை நிகழ்ச்சியை நடாத்திவருகிறோம். அங்கு முதன்முறையாக 1989ம் ஆண்டு மாவீரர் நாள் நிகழ்ச்சியுடன் கால் பதித்தோம். அன்றிலிருந்து இன்று வரை மாவீரர் நாளிலும், முத்தமிழ் நாள் நிகழ்விலும் எமது இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.**

வானம்பாடிகளுக்கு இன்று வயது 14. இங்கு 'கனடாவில்' எத்தனையோ இசைக்குழுக்கள் முளைத்தன. அவை மரமாக வளருமுன்னே பல கிளைகளாகப் பிரிந்து இன்று முளைத்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன.

1996ம் ஆண்டு தமிழகத்திலிருந்து வருகை தந்த **'பாசறைப் பாணர்', 'தேனிசைசெல்லப்பா'** அண்ணன் அவர்களின் இசை நிகழ்ச்சிக்கு நாம்தான் பின்னணி இசை வழங்கினோம். அந்த இசைநிகழ்ச்சிக்கு 5,000ற்கு மேற்பட்ட மக்கள் திரண்டு வந்திருந்தனர். அந்நிகழ்ச்சிதான் முதன் முதலாக கனடாவிலே புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் அதிகம் கூடிய நிகழ்வாகும்.

அன்று நான் எமது இசைக்கலைஞர்களுக்கு **'இப்படி ஒரு பாக்கியம் இங்குள்ள எந்த ஒரு இசைக் குழுவிற்கும்கிடைக்காது'** என்று கூறினேன். இப் பாக்கியம் எமது குழுவின் இசைக் கலைஞர்களின் தாயக உணர்வுக்கும், தேசியப் பற்றிற்கும் கிடைத்த **வெற்றி**யாகும். ஐந்து கலைஞர்களுடன் ஆரம்பித்த இந்த **'வானம்பாடிகள்'** இசைக்குழு இன்று இருபதிற்கும் மேற்பட்ட சிறந்த இசைக்கலைஞர்களுடனும், பாடகர்களுடனும் பெரிய ஆலமரமாக வியாபித்து நிற்கின்றது என்றால் அதற்குக் காரணம் எமது மண்ணின் விடிவிற்காய் தம்முயிர்தந்து வித்தாகிய அந்த மாவீர தெய்வங்களின் ஆசியும், தேசம் போற்றும் எம்தேசியத் தலைவரின் கருணை உள்ளமுமே என்று கூறினால் அது மிகையாகாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**? தங்களின் இசைப் பணியூடாகவும், விடுதலைப்பணியூடாகவும் கனடாவில் பெற்றுவரும் அனுபவங்கள் பற்றிச் சொல்லத் துடிப்பதென்ன ?**

*கனடாவைப் பொறுத்தவரை ஒரு இசைக்குழுவை நடாத்துவதென்பது மிகவும் கடினமான ஒரு விடயம். காரணம் இங்கு பல இசைக்குழுக்கள் இயங்கி வந்த போதிலும் அவை அனைத்தும் வியாபார நோக்கம் கொண்டதாகவும், தென்னிந்திய சினிமாவிற்கு விளம்பரதாரராகவும் இயங்குவதோடு, மாறிவரும் நாகரீக மாற்றத்தில் அள்ளுண்டு பிறமொழிப் பாடல்களுக்குள் சிக்கி நிற்கும் இளைஞர், யுவதிகளைத் திருப்தி செய்பவர்களாகவும் இயங்குகிறார்கள். இங்கு எல்லா வசதிகளுடனும் வாழும் தமிழுறவுகளில் பெரும்பாலானவர்கள் கனேடியக் கலாச்சாரத்தில் தம்மைப் புதைத்துக் கொண்டு உள்ளார்கள்.*

***இவர்கள் மத்தியில் வாழும் எமது இசைக்குழுவில் இருக்கும் கூடுதலான கலைஞர்கள் 25 வயதிற்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டும். இவர்கள் எந்தவொரு பிரதிபலனையும் எதிர்பாராது, எம் மண்ணின் விடுதலைக்காய் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றுகின்றார்கள். விடுதலைப் பற்றும் தாயக உணர்வும் இவர்களுக்குள் மேலோங்கி இருக்கின்றது.***

*எமது இசைக்குழு ஆரம்பித்த காலம் முதல் இன்று வரை வருடம் இருமுறை மொன்றியல் நகரில் எமது இசை நிகழ்ச்சியை நடாத்திவருகிறோம். அங்கு முதன்முறையாக 1989ம் ஆண்டு மாவீரர் நாள் நிகழ்ச்சியுடன் கால் பதித்தோம். அன்றிலிருந்து இன்று வரை மாவீரர் நாளிலும், முத்தமிழ் நாள் நிகழ்விலும் எமது இசை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. மொன்றியல் நகரம் நாம் வசிக்கும் ரொரன்ரோ மாநகரிலிருந்து 500 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. **'வானம்பாடிகள்'** இசைக்குழுவினர் முதன்முறையாக ஒரு பாடல் இசைத்தட்டு உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இங்குள்ள பலர் அடிக்கடி எம்மைக் கேட்கும் கேள்வி **'ஏன் வானம்பாடிகள் இசைக்குழுவினர் இது வரை ஒரு பாடல் இசைத் தட்டு வெளியிட முயற்சிக்கவில்லை'** என்பதாகும்.*

*உண்மையிலேயே எமக்குத் தரமான பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை. இங்கு சில கவிஞர்கள் பாடல்கள் எழுதுகிறார்கள். அந்தப் பாடல்கள் எம் தாயகத்திலிருந்து வெளிவரும் பாடல்வரிகளைத் தொடமுடியாமற் போனதே காரணம். இங்குள்ள கவிஞர்களைத் தவறாக விமர்சிக்கின்றோம் எனத் தவறாக எண்ண வேண்டாம். அவர்களின் புலம்பெயர்ந்த சூழலும், போராட்ட சூழலிலே தூர இருந்து பார்ப்பதும் தான் காரணம்.*

*தற்போது நாம் இம் முயற்சியில் இறங்கியிருப்பதன் காரணம் களத்திலே ஒரு போராளியாக நிற்கும் **விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளரும், தமிழீழத்தின் ஆஸ்தான கவிஞருமாகிய திரு.புதுவை.இரத்தினதுரை அண்ணாவின்** பாடல்கள் **'வானம்பாடிகள்'** இசைக்குழுவினருக்குக் கிடைத்துள்ளது. அப்பாடல் இசைத் தட்டினை நாம் வெளியிடுவதையிட்டு பெருமைகொள்கிறோம்.*

*புதுவை அண்ணன் அவர்கள் எழுதி தமிழீழத்திலே வெளியிட்ட பாடல்களை இங்கு நடைபெறும் மேடை நிகழ்ச்சிகளிலே பாடும் **'வானம்பாடிகள்'** இசைக்குழுவினருக்கு எமது தாயகத்துக் கவிஞரின் பாடலுக்கு இசையமைக்கும் வாய்ப்புக் கிடைத்தது எமது இசைக்குழுவிற்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்றே கூறவேண்டும்.*

*அதேவேளை **'வானம்பாடிகள்'** வெளியிடவிருக்கும் முதலாவது பாடல் இசைத் தட்டினை தமிழீழத்திலே வெளியிட இருப்பது எமது இசைக்குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கலைஞர்களின் இயக்கப் பணிக்குக் கிடைத்த வெற்றியென்றே கூறவேண்டும்.*

**? விரைவில் கனடாவில் வாழும் கலைஞர்களிணைந்து 'வானம்பாடிகள்' புதிய பாடல் இசைத் தட்டு வெளியிடப்போவதாக அறிந்தோம். இது பற்றி........**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**? கலைஞர்களை ஒன்றிணைத்து உயரங்களை உரசுவது கடினமான பணி. இப்பணியை வெற்றிகரமாக செய்து வரும் தாங்கள் கனடாவில் அதிகமான இசை நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளீர்கள். இதில் கலைஞர்களினதும், சுவைஞர்களினது கூட்டிணைவு எப்படியிருக்கிறது ?**

புலம் பெயர்ந்த நாட்டின் இயந்திர வாழ்வு, இயந்திரங்களுடனான வாழ்வு, பணந்தேடல் என்பதன் அவசியம் பற்றி நிச்சயம் தாயகம் வாழ் எம்முறவுகளுக்குத் தெரியும். இரவைப் பகலாகவும், பகலை இரவாகவும் மாற்றி மணித்தியால முட்களுடன் போட்டி போட்டுக் கொண்டு, கொட்டும் பனியில் கால் புதைய நடந்தும், குற்றும் குளிருக்குள்ளும் உடலைச் சுருக்கி, கொழுத்தும்



**“இவற்றினுள்ளும் தாயக விடியலைத் தம் மனதிற் சுமந்து மாவீரர் புகழ்பாடும் பணியை எமது தேசியக் கடமையாகவே கருதுகின்றோம். இவ்வுணர்வு எமது கலைஞர்களிடம் மிகுதியாய் இருப்பதை நான் உணர்கிறேன். இவ்வொற்றுமையால் எமக்குள் எழும் பல சிக்கல்களைக் கூட புறம்தள்ளிவிட்டு, எல்லோரும் இணைந்து பணியாற்றுவது எமக்குள்ளே அதிகம் புரிந்துணர்வை வளர்க்கின்றது”**

வெய்யிலினுள் வெதுங்கி எம்முறவுகளுக்காய் வாழும் சுகம் ஒரு அலாதியான அனுபவம். இது எனக்கு மட்டுமல்ல, என்னுடன் கூட்டிணைந்து பணியாற்றும் அனைத்துக் கலைஞர்களுக்கும் பொருந்தும்.

இவற்றினுள்ளும் தாயக விடியலைத் தம் மனதிற் சுமந்து மாவீரர் புகழ்பாடும் பணியை எமது தேசியக் கடமையாகவே கருதுகின்றோம். இவ்வுணர்வு எமது கலைஞர்களிடம் மிகுதியாய் இருப்பதை நான் உணர்கிறேன். இவ்வொற்றுமையால் எமக்குள் எழும் பல சிக்கல்களைக் கூட புறம்தள்ளிவிட்டு, எல்லோரும் இணைந்து பணியாற்றுவது எமக்குள்ளே அதிகம் புரிந்துணர்வை வளர்க்கின்றது. சிலவேளைகளில் தடங்கல் வருவதும் தவிர்க்கமுடியாதாகிறது. இதில் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியது என்னவென்றால் எமது இசைக்குழுவில் அங்கம்வகிக்கும் கலைஞர்களது மனைவி, பிள்ளைகளின் பூரண ஒத்துழைப்பும், இளம் கலைஞர்களினது பெற்றோர்களின் தாயகமீதிலான பற்றும் குறிப்பிட்டு சொல்லவேண்டியதாகும். சுவைஞர்கள் பார்வையில் கூறப்போனால் அவர்கள் இங்கு இயங்கிக்கொண்டிருக்கும் மற்றைய இசைக்குழுக்களை விட எம்மை தம் பார்வையில் உயர்வான இடத்தில் வைத்திருக்கிறார்கள். சாதாரண கலைஞர்கள் போல எம்மை விழிக்காது நாம் ஓர் இயக்கப் போராளிகள் என்ற உணர்வைத் தருகிறார்கள். நிகழ்ச்சி முடிவடைந்து நாம் வரும் போது அவர்கள் எம்மோடு பரிமாறிக் கொள்ளும் ஒவ்வொரு வார்த்தைகளும் அதற்குச் சான்று பகரும்.

கிட்டத்தட்ட 20 வருடங்களின் பின்னர் எனது

**? அண்மையில் தாயகம் வந்து ஊரின் காற்றைச் சுவாசித்து சென்றவர் என்ற ரீதியில் ஊர் முற்றத்திற்கு வந்ததும் உங்களின் உயர்வுத் தளம் எப்படியிருந்தது ?**

குடும்பத்துடன் 2003 சித்திரை மாதம் நான் தாயகம் வந்தேன். யாழ் மண்ணில் நான் கால் பதித்த போது உண்மையிலே நான் 20 வருடங்களுக்குப் பிறகு எனது தாயின் சுதந்திரக் காற்றில் பறந்து திரிவதைப் போல் உணர்ந்தேன். யாழ் வந்தவுடன் உடனடியாகப் 'பொற்பதி வீதி'யில் உள்ள எமது அரசியற் பணிமனைக்கு துவிச்சக்கர வண்டியில் ஓடோடிச் சென்றேன். அந்தப் பணிமனைக்கு முன்னால் எமது தேசியச் சின்னத்துடன் நாட்டப்பட்டிருந்த தமிழீழ அரசியற் பணிமனையின் முகப்புப் பலகையைப் பார்த்து விட்டு உண்மையிலேயே துள்ளிக் குதித்தேன். எனது கையை நானே நுள்ளிப் பார்த்தேன். நான் காண்பது கனவா? நனவா என்னையே என்னால் நம்பமுடியவில்லை.

பின்னர் உள்ளே சென்றேன். நான் கனடாவிலிருந்து வரும் போது சந்திக்க வேண்டும் என நினைத்து வந்த தமிழீழ

www.tamilarangam.net



விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு.புதுவை அண்ணன் அவர்கள், அங்கே ஒரு மரத்துக்குக் கீழே சிலருடன் அளவளாவிக் கொண்டிருந்தார். அங்கே தமிழீழத்தின் ஆஸ்தானப் பாடகர் திரு.எஸ்.ஜி.சாந்தன் அவர்கள் ஒரு குவளையில் நீர் அருந்திக் கொண்டிருந்தார். அவரை அணுகி நான் என்னை அறிமுகம் செய்து கொண்டேன். பின்னர் அவர் என்னை புதுவை அண்ணனுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவருடன் கதைத்தபின் தன்னை வன்னியில் வந்து பார்க்குமாறு கூறினார்.

பின்னர் நல்லூரில் நடைபெற்ற அன்னை பூபதியின் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு தான் முதன்முறையாக எமது போராளிகளைப் பார்த்தேன். பின்னர் தமிழீழ இசைக்குழுவின் இன்னிசை மழையில் நனைந்தேன். குறிப்பாக சாந்தன் பாடிய **'எங்கள் தலைவன் பிரபாகரன்'** என்று ஆரம்பிக்க அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளம் கரகோசம் செய்த போது உண்மையிலே அந்த உணர்வை என்னால் வர்ணிக்க வார்த்தைகளில்லை.

பின்னர் எனது குடும்பத்தாருடன் வன்னி சென்றேன். வன்னியிலே வீதியிலே உள்ள மலைகளில் ஏறியிறங்கி கிளிநொச்சியிலுள்ள நந்தவனம் சென்றடைந்தேன். பின்னர் அவர்கள் மூலமாக **காஸ்ரோ அண்ணனைச்** சந்தித்தேன். அவருடன் கதைக்கும் போதே புதுவை அண்ணவைச் சந்திக்க வேண்டும் என்ற என் ஆவலைத் தெரிவித்தேன். அவர் என்னை ஒரு வீட்டில் தங்கவைத்து, 'மறுநாள் காலை 7மணிக்கு ஒருவர் வருவார்..., அவர் புதுவை அண்ணனிடம் கூட்டிச் செல்வார்' என்று கூறினார்.

மறுநாள் காலை **சரியாக** 6.55 ற்கு ஒரு மோட்டார் சைக்கிளில் ஒருவர் நான் இருந்த வீட்டிற்கு வந்தார். ஒரு நிமிடம் நான் பிரமித்துப் போனேன். கனடா நாட்டில் எவ்வளவு வசதியிருந்தும் நாம் எந்த ஒரு காரியத்தையும் சொன்ன நேரத்தில் செய்வதில்லை. அப்போது தான் ஒரு உண்மையைப் புரிந்து கொண்டேன். நிர்வாகக் கட்டமைப்பு, ஒழுங்குமுறை என்பது தமிழீழத்திலேதான் என்பதே அது. புதுவை அண்ணன் வீட்டிற்கு சென்று சில கலைஞர்களையும், சில இடங்களையும் பார்க்க வேண்டும் என்ற விருப்பங்களைக் கூறினேன். மூன்று நாட்களின் பின் திரும்பி வந்து தன்னைச் சந்திக்கச் சொன்னார். என்னைக் கூட்டி வந்திருந்த போராளி காயப்பட்டுள்ள போராளிகளைப் பார்ப்பதற்காக கூட்டிச் சென்றார். முதலில் பெண் போராளிகளைப் பார்த்தேன். அவர்களுடன் அளவளாவிய போது அப்படிக் காயப்பட்ட ஒரு நிலையிலும் கூட அவர்கள் என்னிடம் சில கேள்விகளைக் கேட்டார்கள்.



**'கனடாவில் எமது போராட்ட நிகழ்வுகள் மக்களுக்குத் தெரியுமா?** ......

நான் கூறினேன் **'கனடாவில் உலகத் தமிழர் இயக்கம் பொங்கல் விழா, முத்தமிழ் விழா, கரும்புலிகள் நாள், தியாக தீபம் திலீபன் விழா, மாவீரர்நாள்...., எனப் பல நிகழ்வுகள் நடாத்துகிறார்கள். அவ்விழா மூலம் எமது போராட்ட நிகழ்வுகளை புலம் பெயர்ந்த மக்களுக்கு உணர்த்துகிறார்கள்'** என்றேன்.

2000ம் ஆண்டு நடைபெற்ற மாவீரர் நாளிலே எமது வானம்பாடிகள் இசைக்குழு 30,000 மக்கள் மத்தியில் இசை நிகழ்ச்சியை நடாத்தியது என்று கூறியபோது அவர்கள் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தொடர்ந்து கதைத்த போது நான் **'தியாக தீபம் திலீபனுடன்'** உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையில் ஆண்டு 1லிருந்து ஆண்டு 5 வரை கல்வி பயின்றேன் என்று கூறிய போது.. அங்கு நின்ற ஒரு போராளி என்னிடம் கேட்டார்

**'அப்ப அண்ணா நீங்கள் ஏன் இயக்கத்தில சேரேல்ல'**

ஒரு நிமிடம் நான் எதுவுமே பேசவில்லை.......என்னால் எதுவுமே பேசமுடியவில்லை...அந்தப் போராளி என்னிடம் கேட்ட கேள்வி இன்னும் எனது மனதை உறுத்துகிறது. பாதித்தது என்று கூறுவதை விட என்னைச் சிந்திக்க வைத்தது. உண்மையிலே சொல்லப் போனால் இங்கு வந்து இயக்கப் பணியை மேலும் தொடரத் தூண்டியது என்றே கூறவேண்டும்.

பின்னர் ஆண் போராளிகளைப் பார்க்கச் சென்றேன். அங்கே 11 போராளிகள் காயப்பட்டு இருப்பதாக அந்த இடத்திற்குப் பொறுப்பான பொறுப்பாளர் சொன்னார். படுத்த படுக்கையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கும் அவர்கள் என்னிடம் கேட்ட முதற் கேள்வி

**'எப்படி கனடாவில் மக்கள் போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்கிறார்களா'**

கதைத்துக் கொண்டிருக்கும் போது எமது இசைக் குழுவைப் பற்றி விசாரித்து விட்டு என்னைப் பாடச் சொல்லிக் கேட்டார்கள். நான் மூன்று எழுச்சிப் பாடல்களைப் பாடிவிட்டு அவர்களிடம் கூறினேன் **'கனடாவில் எத்தனையோ நிகழ்ச்சியில் பாடியிருந்தாலும், இன்று நான் நேரடியாக எமது போராளிகள் மத்தியில் பாடுவதையிட்டு பெருமை கொள்கிறேன்'** என்றேன். அவர்களுடன் இருந்து மதிய உணவை முடித்து விட்டு வீடு சென்றேன்.

மூன்று நாட்கள் களித்து புதுவை அண்ணனின் வீட்டிற்குச் சென்றேன். அங்கு அவர் என்னை வரவேற்ற விதத்தினைப் பார்த்து நெகிழ்ந்து போய்விட்டேன். அவருடன் கிட்டத்தட்ட 5 நாட்கள் நின்றிருப்பேன். நான் குளிக்கவேண்டும் என்றால் அவரது மகன் சோபிதன் மூலம் தான் கிணற்றில் நீர் இறைத்துத் தந்தார். அவர்களின் எத்தனையோ வேலைப் பழுவிற்கு மத்தியிலும் கூட ஒரு நாளேனும் என்னைக் கிணற்றில் நீர் இறைத்துக் குளிக்க விடவில்லை. பின்னர் இரவு நேரத்திலும், மற்றும் தனக்கு நேரம் கிடைக்கும் நேரங்களில் எல்லாம் கனடாவில் நாம் எப்படி இயங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதைக் கேட்டறிந்து கொண்டார்.

பின்னர் நான் தமிழீழ இசைக்குழுவினரைச் சந்திக்க விரும்பியதை அவரிடம் கூறினேன். ஒவ்வொருவராக தனது வீட்டிற்கு அழைத்து என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். நான் சுகுமார், நிரோஜன், சாந்தன், குட்டிக்கண்ணன் போன்றவர்களை நேரில் பார்த்த போது எனது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கனடாவிலே நடக்கும் இசை நிகழ்ச்சிகளில் அவர்கள் பாடலைப் பாடிய எமக்கு அவர்களை நேரில் கண்டால் எப்படியிருக்கும்? அதனை வார்த்தைகளால் என்னால் கூறமுடியாது. அத்தோடு தமிழீழ இசைக்குழுவின் பொறுப்பாளர் திரு.**S.P அண்ணன்** அவர்களையும் புதுவை அண்ணா அறிமுகம் செய்து வைத்தார் அவருடன் எமது தமிழ்ச்சோலை வானொலிக்காக தமிழீழ இசைக்குழுவின் ஆரம்பம், வளர்ச்சி என்பவற்றைப் பற்றிய ஒரு நேர்காணலைப் பதிவு செய்தேன்.

பின்னர் மாவீரர் துயிலும் இல்லங் களுக்குப் பொறுப்பாளராக இருக்கின்ற **திரு.பொன் தியாகம் அப்பா** அவர்களையும் நேர்காணல் செய்தேன். அவரது மூன்று பிள்ளைகள் எமது மண்ணின் விடிவுக்காக தமிழீழ மண்ணிலே விதையாகிய பின்னரும் கூட பொன் தியாகம் அப்பாவின் மனவுறுதியும், எமது தலைவர் மீது அவர் கொண்டுள்ள பற்றையும், மதிப்பையும் பார்த்துப் பிரமித்துப் போனேன். எல்லா ஒழுங்குகளையும் புதுவை அண்ணன் அவர்கள் தனது இயக்கப்பணி என்று அடிக்கடி சொல்லும் போதெல்லாம் நான் உண்மையிலேயே எமது அமைப்பிற்கு வேலை செய்வதையிட்டு பெருமையடைகிறேன். போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக எனது மகன்கள் இருவரையும், மனைவியையும், எனது தாயாரையும் முழங்காவிலிலே விட்டு விட்டுத்தான் புதுவை அண்ணனிடம் சென்றேன். அவர்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டேன் என்று பின்னர் தான் கவலைப்பட்டேன். எனது தாயகப்பயணத்தில் நான் கனடாவிலே கண்ட கனவுகள் அனைத்தும் தமிழீழத்திலே நனவாகியது என்றே கூறவேண்டும்.

தென்னிந்தியச் சினிமாவின் தாக்கம் புலம் பெயர்ந்த மக்களிடையே குறிம்பிடும் படியான தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது என்று துணிந்து கூறலாம். தமிழகத்தில் பகல்பூராகவும் தன்னைப் பிளிந்து உழைப்பவனுக்கு சினிமாவும் மதுவும்தான் ஆறுதல் தருகிறதாகப் பலர் கூறக்கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் கனடாவைப் பொறுத்தவரையில் பொதுவாக இளைஞர், யுவதிகள் மத்தியில் இந்த மோகம் அதிகப்படியாகவே உள்ளது. வீட்டில் தங்கியிருக்கும் முதியவர்களையும், பெண்களையும் தற்போது நடைமுறையில் உள்ள 'மெகாத்'

**? தமிழக மூன்றாம்தரகலைஞர்களி னதும், தென்னிந்திய கனவுத்தொழிற் சாலையான சினிமாவினதும் மோகம் புலம்பெயர்ந்த நாடுகளில்பெருகி வருகிறதா? அருகி வருகிறதா? விரி வாக அறிந்து கொள்ள விளக்கமாகக் கூறுங்கள்.**

www.tamilarangam.net



தொடர்கள் ஆட்கொண்டுள்ளது என்பதும் மறுப்பதற்கில்லை. அதனை விடவும் குளிர்காலம் முடிந்து வசந்தகாலம் ஆரம்பிக்கத் தொடங்கியதும் தென்னிந்திய சினிமா பிரபலங்களுக்காக அதிகளவில் முதலீடுகள் செய்பவன் ஈழத் தமிழன் என்பதனை என்னால் சீரணிக்கவே முடியவில்லை. தாயக மண் அவலப்பட்ட வேளையில் கூட ஈழத்தமிழன் இப்பிரபலங்களுக்கு பணம் கட்டி ஏமாந்த அவலம் கனடியத் தமிழன் பதிவேட்டில் உள்ளது.

எமது உறவுகளின் ஒருவேளை உணவுக்காக இங்கு வசிக்கும் உலகத் தமிழர் இயக்கத் தொண்டர்கள் படிகளேறி பலர் கதவுகளைத் தட்டிய வேளையில் கூட தென்னிந்தியப் பிரபலங்களுக்காக பணம் கட்டியவரையும், பின்னர் 'குத்துவிளக்கில்' **கணக்குப்** பார்த்தவரையும் நாம் தரிசித்துள்ளோம். அதிலும் சில வட இந்தியக் கலைஞர்களுக்குக் கூட ஈழத் தமிழனை நம்பியே நிகழ்ச்சி நடத்தினார்கள் என்பதும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஓயாத அலைகள் தந்த தொடர் வெற்றியின் பின்னர், தமிழீழத் திரை வடிவங்கள் இங்கு திரையிடப்படும் வேளைகளில் அவை வெற்றியீட்டித் தந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**? பல கலை இலக்கிய அமைப்புக்கள் கனடாவில் இயங்கிவருவதாக அறிகின்றோம்.அவைகளின் பணி பற்றிச் சொல்லுங்கள்.**

இங்கு உலகத் தமிழர் இயக்கத்தின் பல்வேறு உப அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. அவை நடாத்தும் அனைத்து விழாவும் தமிழீழ மக்களின் போராட்டம், புனர்வாழ்வு, மருத்துவம், மற்றும் அத்தியாவசியப் பணிகளை முன்நிறுத்தியே நடாத்தி வருகிறார்கள். அதைவிட பல்வேறு ஊர்ச்சங்கங்கள், கல்லூரிகளின் பழையமாணவர் சங்கம் போன்றவை தத்தமது ஊர்களின், கிராமங்களின், உறவுகளின் மேம்பாட்டிற்காகவும், கல்லூரிகளின் வளர்ச்சிக்காகவும் இயங்கி வருகின்றன. மேற்படி அமைப்புக்களின் விழாக்கள், ஒன்றுகூடல்களின் போது தங்கள் பிள்ளைகளிடையே தமிழ் மொழித் திறன் போட்டி, திருக்குறள் ஓதுதல், மற்றும் சமயம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளையும், நாடகம், நடனம், கலந்துரையாடல் போன்ற நிகழ்வுகளில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய கனத்த அறிவுத்தன்மை வாய்ந்த நிகழ்வுகளை நடாத்துவதுண்டு. மறுபுறத்தே சில சங்கங்கள் என்ற பெயரில் நிகழ்ச்சிகளை நடாத்துகின்றார்கள். அதில் தம்மை தலைவர், செயலாளர், பொருளாளர் என்ற பதவிகளில் பதிய வைத்து தமக்குத் தாமே பட்டம் சூடுவதும், பத்திரிகைளில் தம்படங்களைப் பிரசுரித்து தாமே மகிழ்வதும், தமக்குத் தாமே சிலர் தம் பணத்திலும், சிலர் பொது பணத்திலும் விருதுகள், கேடயங்கள், மலர்மாலைகள் சூடிக் கொள்வதும் இங்கு அடிக்கடி நிகழ்வதுண்டு. அதிலும் சிரிப்பிற்கிடமானது என்னவென்றால் இந்தப் பிரபலங்கள் விடுதலை பேசிக் கை தட்டு வாங்குவதும், விடுதலைக்கென ஒரு சதமேனும் கொடுப்பதில்லை என்பதுமாகும். அடிக்கடி சிறுகதை வெளியீடுகள், குறுந்தட்டுகள், குறுந்திரைப்படங்கள் வெளிவருகின்றன. அவற்றில் விடுதலையின் கருத்தை தமிழீழத்தின் யதார்த்தங்களைக் குறிப்பிடத் தவறுகின்றன என்பதும் வேதனைக்குரியது



தமிழ்த் தேசிய ஆவண

www.tamilarangam.net



**? விடுதலை மீதும் தாயக விடியலின் மீதும் தங்களுக்கு பெரிய பிடிமானம் உண்டென்று நாமறிவோம். இந்த உணர்வு தாயகத்தைப் பிரிந்த பின்பும் வியாபகம் கொண்டதுக்கு என்ன காரணம் ?**

நாம் சிங்கள அடக்குமுறையாளரின் ஆதிக்கத்தில் வாழ்ந்த காலத்திலும், புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் நாம் அனுபவித்த அடிமைத்தனமும் எம்மைச் சிந்திக்கத்தூண்டிய வேளையில் எம் தாயகத்தில் வீறுகொண்டெழுந்த விடுதலைப் போராட்டமும் அதன் உறுதித்தன்மையும் மேலும் கூறப்போனால் உலகமே வியக்கும் வண்ணம் எம் தலைவன் பாதையில் வீறுகொண்டெழுந்த எம் விடுதலை வேங்கைகளின் வெற்றிகளுமே எம்மை தாயக விடுதலைப் போராட்டம் நோக்கி வேகமாக நகர்த்தியது.



**<u>தென்னிந்தியச் சினிமாவின் தாக்கம் புலம் பெயர்ந்த மக்களிடையே குறிப்பிடும் படியான தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது என்று துணிந்து கூறலாம். ஆனால் கனடாவைப் பொறுத்தவரையில் பொதுவாக இளைஞர், யுவதிகள் மத்தியில் இந்த மோகம் அதிகப்படியாகவே உள்ளது. வீட்டில் தங்கியிருக்கும் முதியவர்களையும், பெண்களையும் தற்போது நடைமுறையில் உள்ள மெகாத்' தொடர்கள் ஆட்கொண்டுள்ளது என்பதும் மறுப்பதற்கில்லை.</u>**

**? எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு கனடாவில் எந்தளவு பக்க பலம் உண்டு**

எமது விடுதலைப் போராட்டத்திற்கு இங்கு வாழும் மக்களிடையேயிருந்து பலமான ஆதரவுண்டு என்பது மறுப்பதற்கில்லை. ஆனாலும் சில விடயங்களைச் சுட்டிக் காட்டுதல் பொருத்தமாக அமையும் என நினைக்கின்றேன். எமது விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் காலகட்டத்தில் பலர் ஐரோப்பிய நாடுகளுக்கே புலம் பெயர்ந்தார்கள். ஐரோப்பிய நாடுகளில் அப்போது நிலவி வந்த அகதிகள் அனுகுமுறையினால் அகதி உரிமை கோரியவர்களுக்கு பல சிரமங்கள் இருந்ததை நீங்கள் அறிவீர்கள். தற்போதும் இந்நிலை அங்கு உண்டு. அங்கு நிரந்தர வதிவிடவுரிமை என்பது முயற்கொம்பு போன்றது. அதனால் தாம் என்றோ ஒரு நாள் எங்கள் தாய் மண் திரும்பியே ஆகவேண்டும் என்ற நினைப்பு எப்போதும் அவர்கள் மனதில் பதிந்திருந்தது. அதனை விட அங்கு அவர்கள் அனுபவித்த சில விடயங்களால் எவ்வளவு விரைவில் தமிழீழம் திரும்புவோமோ அவ்வளவு விரைவில் திரும்பவேண்டும் என்ற உந்துதல் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து இருந்தது. அதனால் ஐரோப்பிய நாடுகளில் வாழும் எம்முறவுகள் விடுதலைக்குக் கொடுத்த பங்களிப்பு எம் நாடறியும். ஆனால் கனடாவில் அப்படியல்ல. இங்கு வந்து அகதியாகப் பதிவு செய்த நாள் தொடக்கம் சமூக நலன் உதவி, முதற்கொண்டு வேலை செய்து பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு, வதிவிடவுரிமை, நிரந்தரவதிவிடவுரிமை, விருப்பமான துறையில் படிக்கவோ, தொழிலாற்றும் வாய்ப்பு, வர்த்தக முதலீடுகள், வீடு வாங்குதல் போன்ற பல அனுகூலங்களால் இங்கு வந்தோர் தம்முறவுகளைக் கனடாவிற்கு அழைப்பதிலும், தம்மைப் பலப்படுத்திக் கொள்வதிலும் அதீத கவனம் செலுத்தினார்கள். கனடாவில் கிடைத்த குடியுரிமையைப் பயன்படுத்தி ஈழவிடுதலைப் போராட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள் அதனால் விடுதலைப் போராட்டத்தை ஐரோப்பா வாழும் எம்முறவுகளைப் போலல்லாது இவர்கள் இரண்டாம் நிலையிலேயே வைத்துச் சிந்தித்தார்கள் என்பது உண்மை. ஆனால் இங்கு எங்கள் தலைவரையும், தாயகக் கடமைகளையும் மனதிற் சுமந்து பணியாற்றும் உலகத் தமிழர் இயக்கத் தொண்டர்களின் செயற்பாடுகளினாலும், உப அமைப்புக்களின் தொழிற்பாடுகளாலும் மக்கள் மனங்களின் எம் தாயகத்தின் பிடிமானம் நிலைநிறுத்தி வைக்கப்படுகிறது. ஆனாலும் தமது முழுக் குடும்பங்களுடன் இங்கு காலூன்றியிருப்பவர்களின் பங்களிப்பு என்பது குறைவு என்பதும் மறுப்பதற்கில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**? எமது தேசியத் தலைவர் பற்றி அதிக மான பாடல்களைப் பாடிவருகிறீர்கள். அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டினால் அந்த நேரம் உங்களுக்கு எப்படியிருக்கும் ?**

*ஒரு சொல்லில் கூறினால்... **'அந்தப் பெருமகனைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டினால்...'** 'என் பிறவிப் பயனை நான் வாழும் காலத்தில் கிடைத்த பலனடைந்தவனாவேன்' இதனை விட ஒரு பதிலை என்னால் .. **'வல்வையிலே பிறந்தான் எங்கள் அண்ணன் இங்கு இவனை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்' அண்ணன்***

**? வெளிச்சம ' ஊடாக தாயக மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

*புலம் பெயர்ந்து வாழும் நாங்கள் வெளிச்சம் பத்திரிகையினூடாக எம்முறவுகளுடன் பகிர்ந்து கொள்ள விரும்புவது என்னவென்றால் நீங்கள் பட்ட போர்க்காயங்களில், அவலங்களில், துடிப்புக்களில் நாம் பங்குகேற்காது தப்பிவிட்டோம் என்ற ஒரு கீறல் எம் மனதில் உறுத்திக்கொண்டேயிருக்கிறது. என்றோ ஒரு நாள் எம் தலைவன் மீட்டுத் தரும் தாயக மண்ணில் எமது உறவுகளுடன் கலந்து கொள்வோம் என்ற உறுதி மட்டும் எம் மனதில் ஆழப்பதிந்துள்ளது. உங்களின் தொடர்ச்சியான பங்களிப்பின் மூலம் மலரும் ஈழத்தில் உங்களுக்கு மட்டுமில்லை எமக்குமாக உருவாகும் அந்நிலத்தில் உங்களோடு இணையும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.*

***'கொண்ட கொள்கை குன்றிடாது எங்கள் தலைவனின் பாதையிலே நின்று கொண்டொரு போர்க்கொடி தூக்குவோம். நிச்சயம் தமிழீழம் காண்போம்'***

*நன்றி , வணக்கம்.*

## ◆ தரும வதனன் கவிதைகள்

### பொம [illegible]

காலம் கழுவி விடும் என்று
எத்தனை தடவை சொன்னேன்
கேட்டார்களா?

கடும் மழைக்கும்
கரையாதென்று
அப்பிக் கொண்டார்கள்
காற்று திசை மாறும்வரை
என்னை
பரிகாசம் பண்ணினார்கள்

இப்போது
காலமேகம் முலாமைக்கழுவ
கோரமுகத்தோடு
தெருவில்

இனி
எந்த முக்தோடு
ஊருக்குள் போவார்கள்?

### எரியும் வா[illegible]

விழிகளில் விளையும்
முத்துக்களை
கொட்டியபடி
காத்திருக்கிறோம்
இம்மட்டும் அவை
விலைபடுவதாயில்லை

### பேரினவாத [illegible]

கொழுத்து செழித்த
குருவிச்சை சொன்னது
வேரும் கிளையும்
தனதே என்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# களப்பிரசவங்கள்

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி, சாவகச்சேரி, மட்டுவில் பகுதிகள் எறிகணை வீச்சில் சிதைந்து கொண்டிருக்கின்றது. போரின் அவலங்களை தவிர்க்க முடியாமல் தாங்கிக் கொள்கின்றது. வாழ்விற்கான வளங்கள் அனைத்தையும்இழந்த குடும்பங்கள் ஒரு சில நிமிடங்களில் நாதியற்றவையாகின. பழங்களுக்குப் பெயர் பெற்ற பிரதேசம் பாழடைகின்றது. இந்த மக்களைத்தான் பயங்கரவாதிகளிடம் இருந்து பாதுகாக்கின்றோம் என இராணுவம் பிரச்சாரம் செய்து வந்தது. அந்த மக்கள் மீதே எறிகணை வீச்சினால் இப்போது சிதை மூட்டுகின்றது. ஓயாத அலை - 03ன் தொடர் தோல்விகளால் அருண்டுபோன இராணுவம் தன் வழமையான பாணியில் வகைதொகையின்றி அவர்களைக் கொன்றுகுவிக்கின்றது. நிமிடத்திற்கு நிமிடம் உயிர்கள் பறிபோயின. தலைமுறைச் சேமிப்பால் உருவான வீடுவாசல்கள் எல்லாம் கற்குவியல்களாகின்றன. போராளிகள் உதவிபெற்று, சாவயல்களைக் கடந்து, பூநகரி நீரேரி தாண்டி, வன்னிப்பெருநிலம் செல்வதா? இல்லை தன்தலைக்குமேல் மட்டும் குண்டுவீசா இயல்புடைய பகைவன் ஆக்கிரமிப்பிற்குட்பட்ட பிரதேசங்களினுள் ஒதுங்குவதா? இல்லை நடப்பது நடக்கட்டும். எல்லாம் ஊழ்வினைப் பயன் என இங்கேயே தங்கிவிடுவதா? முடிவெடுக்க முடியாமல் மக்கள் தடுமாறுகின்றார்கள்.

வெளிகளை அண்மிய பிரதேசங்களில், மரநிழல்களில் ஆங்காங்கே மக்கள் கூட்டம் கூட்டமாக திரண்டிருக்கின்றார்கள். மாட்டுவண்டிகள், உழவியந்திரங்கள் போன்ற வாகனங்களைச் சுற்றிவர தங்கள் மூட்டை முடிச்சுக்களை அடுக்கி வைத்துள்ளனர். எறிகணைகள் விழும் வேளை அவற்றை அரண்களாகப் பாவித்துப் பதுங்கியும் கொள்கின்றார்கள். காயமடைந்த கால்நடைகள் கூட தாங்கள் வளர்த்த வீட்டிற்கு வந்தே தங்கள் இறுதி மூச்சை விடுகின்றன. இறந்து ஊதிப்பெருத்து வெடித்துப் புழுத்த விலங்குகளால் அப்பகுதியெங்கும் துர்நாற்றம் பரவிக்கிடக்கின்றது. அவசர அவசரமாக அங்குவந்த போராளிகள் கள மருத்துவமனையொன்றை அமைப்பதில் மும்முரமாக ஈடுபடுகின்றார்கள். அருகில் ஒரு குடும்பம் இருப்பதை அவதானித்து அவர்களிடம் சென்று நிலைமையை விளங்குகின்றார்கள்.தங்கள் மருத்துவமனையை எதிரி எப்படியும் மோப்பம் பிடித்துவிடுவான். அதன்பின் தொடரான செறிவான எறிகணைவீச்சை மேற்கொள்வான். ஆதலால் பாதுகாப்புக் காரணங்களுக்காக இங்கிருந்து வெளியேறுங்கள் எனக் கூறுகின்றார்கள். அதற்கு அவர்கள் 'தம்பிமாரே! நீங்கள் இருக்கிறியள் தானே! நாங்களும் இருப்பம்' எனக்கூறி மறுத்துவிட்டார்கள். அகதிகளாகி தங்கள் கௌரவத்தை அவர்கள் இழக்க விரும்பவில்லை என்பதைப் புரிய முடிகின்றது. விளைவு எதிர்பார்த்தபடியே விபரீதமாக நடந்தே விட்டது. மறுநாள் நடைபெற்ற எறிகணை வீச்சில் குடும்பத் தலைவி அவ்விடத்திலேயே மரணமடைந்து விட்டாள்.



தூயவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவன் சிதைந்திருந்த தன் செல்ல மகளை நெஞ்சோடு அணைத்த வண்ணம் மறுகையால் காயமடைந்திருந்த மற்ற மகனை இழுத்தபடியே, காயங்களுடன் இரத்தம் சொட்டச் சொட்ட இவர்களிடம் வந்து சேர்ந்தார் தந்தை. அக்கோரக் காட்சியைக் கண்டவர்கள் உறைநிலையிலிருந்து மீள சில நிமிடங்கள் எடுத்தது. வேகமாக உயிர்காப்பிற்கான அவசர சிகிச்சைகளை மேற்கொள்கின்றனர். காயமடைந்திருந்த ஏனைய போராளிகளுடன் மேலதிக சிகிச்சைக்காக அவர்களையும் வன்னித்தளம் அனுப்பிவைக்கின்றனர். இடையில் கிடைத்த சிறு ஓய்வின்போது இறந்த தாயின் உடலை அருகில் இருந்த பதுங்குகுழியொன்றினுள் போட்டு மூடிவிடுகின்றனர். அவ்விடம் இப்போது இராணுவ சூனிய பிரதேசத்தினுள் காணப்படுகின்றது.

'காயம்' ஏற்றிவந்த போராளிச் சாரதியொருவன் கூறுகின்றான் "அண்ணா! முன்னுக்கு ஒரு குடும்பம் மாட்டுப்பட்டிருக்கு ஒரு அம்மா பிள்ளை பெறப்போறா. இந்தச் செல்லடிக்குள்ள அங்கால இங்கால நகர ஏலாது என்று பயப்பிடுதுகள். நீங்கள் ஒருக்காப் போய்ப் பாருங்கள்." உடனேயே இருவர் அவ்விடம் செல்கின்றார்கள். சிறிது நேரத்திற்கு முன் அவ்வீட்டில் எறிகணை வீழ்ந்து வெடித்துள்ளது. வீட்டின் முன்பகுதி சிதைந்து காணப்படுகின்றது. வெடிமருந்தின் நெடி பலமாக வீசுகின்றது. முறிந்து வீழ்ந்திருக்கும் வேப்பமரத்தைத் தாண்டி வீட்டினுள் செல்கின்றார்கள். 'ஏடாகூடமாக ஏதாவது நடந்திருக்குமோ' எனும் அச்சம் துளிர்விடுகின்றது. பிரசவவலியால் துடிக்கும் அப்பெண் கட்டிலின் கீழே கிடத்தப்பட்டுள்ளார். ஏனையவர்கள் ஆங்காங்கே பதுங்கியுள்ளனர். இவர்கள் அப்பெண்ணின் மருத்துவப் பதிவேட்டை வேண்டிப்பார்க்கிறார்கள். உடனே கூறுகின்றார்கள் "அம்மா எங்களுக்கு மகப்பேறு சம்மந்தமான வைத்தியத்தில் போதிய அனுபவம் இல்லை. உங்கட பிரிவு இரத்தமும் அவசரத்திற்கு இங்கு எடுக்க இயலாது. நாங்கள் வேகமாக ஒழுங்கு செய்யிறம் நீங்கள் வன்னிக்குப் போங்கள்." கூறியவர்கள் அவர்களின் அனுமதிக்கு நிற்காமலேயே 'பிக்கப்' வாகனமொன்றை அவ்விடத்திற்கு வரவழைத்து அவர்களைப் பின்னுக்கு அனுப்பிவைக்கின்றார்கள். பூநகரி நீரேரியினுள் பரவலாக எறிகணைகள் விழுந்து வெடிக்கின்றன. அதனால் ஐம்பதடி உயரம் வரை நீர்த்திவலைகள் எழுந்து வானவேடிக்கை காட்டுகின்றது. எதனையும் நிதானித்து அவதானிக்காமல் வாகனத்தில் இருந்தவர்களை வேகமாக விசைப்படகிற்கு மாற்றி நீரேரியைக் கிழித்துச் செல்கின்றார்கள். இக்கரை கொண்டுவந்து சேர்க்கவும் மழலை வணங்கா மண்ணை எட்டிப்பார்க்கவும் சரியாக இருந்தது. தாயையும் சேயையும் 'அம்புலன்ஸ் வாகனத்தில் ஏற்றி மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

சமர் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கிறது. காயமடைந்த போராளிகளினதும் பொதுமக்களினதும் எண்ணிக்கை மூன்றாம் இலக்கைத் தொட்டுவிட்டது. வாகன விசைப்படகுகளின் விரைவான விநியோகங்கள் தடைப்பட்டு விட்டன. அப்பொழுது சில மக்கள் தடுமாற்றமும் நம்பிக்கையீனமும் நிறைந்த முகங்களுடன் இவர்களிடம் வருகின்றார்கள். அவர்கள் கேட்ட உதவி இயக்க மருத்துவரைத் தடுமாற வைத்துவிட்டது. சற்றுத் தொலைவில் இரவு பிள்ளைபெற்ற தாயொருத்தி பதுங்குகுழியொன்றினுள் படுத்துள்ளார். அவரின் நச்சுக்கொடி (சூல்வித்தகம்) இன்னும் வெளிவரவில்லை. இரத்தப் பெருக்கும் அதிகமாக இருக்கு. அவரைக் காப்பாற்ற வேண்டும் என்பதே அவர்கள் கேட்டது. அப்பகுதியைச் சேர்ந்த மருத்துவ மாதிடமும் மருத்துவர் ஒருவரிடமும் உதவிகேட்டு அது கிடைக்கவில்லை என்பதையும், சாவகச்சேரி பொது மருத்துவமனை ஆளரவமற்று சிதைந்து கிடக்கிறது என்பதையும் சேர்த்தே சொன்னார்கள்.

போர்க் கடமையில் ஈடுபட்டிருக்கும் களமருத்துவர்கள் கைபிசைந்து நிற்கின்றார்கள். மகப்பேற்றியல் மருத்துவத்தில் போதிய அனுபவம் பெறத்தவறியமையையிட்டு மனம் வருந்துகின்றனர். என்ன முடிவெடுக்கலாம் என களமருத்துவப் பொறுப்பாளரைப் பார்க்கின்றனர். அவர் சொல்கின்றார். "இதனைக் கையாளக்கூடிய பெண் மருத்துவரை அனுப்பச்சொல்லி இருக்கிறன். ஆனால் ஆள்வந்து சேர இரண்டு மூன்று நாள் எடுக்கும்.." சிறிது நிதானித்தவர் தொடர்கின்றார். "நீங்கள் முயற்சித்துப் பாருங்கள். நடக்கிறதுக்கு நான் பொறுப்பெடுக்கிறன். இவர் பொறுப்பெடுப்பதாகக் குறிப்பிட்டது, குறித்த தாயின் உயிர்ப்பிழைப்பையோ அல்லது உயிரிழப்பையோ மட்டுமல்ல. அதிகமாக காயங்கள் வரும் நேரம் இருமருத்துவரின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தனித்திருந்தவள், நீண்ட காலங்களுக்குப்பின் தன்னைத் தேடிவந்த சேய்களின் சூழலின் தாய்மை சுரக்க மெய்மறந்திருந்தாள். கோயிலின் சுற்றுப் பிரகாரங்கள் வெளிவீதியில் வரிசையாகப் பொங்கலிட்டதென அடுப்புகள் எரியும் ஒளியில் தகதகத்தாயமாக மின்னிக் கொண்டிருந்தாள். ஆனால் வாசனை தான் அவள் மூக்கைச் சுளிக்கச் செய்து கொண்டிருந்தது. அவளின் தீர்த்தக்கிணற்று நீரை யார் யாரோவெல்லாம் எதற்கெதற்கோவெல்லாம் தமது விருப்பப்படி விரும்பிய பாத்திரங்களினால் அள்ளிக் கொண்டிருந்தார்கள். கோயிலின் உள்வீதி - பிரகாரம் கூட பாய்விரிப்புகளால் குடியிருப்புகளாக அடையாளமிட்டு 'குஞ்சம் குளுவான்' களால் நிறைந்திருந்தது. வெளிவீதியின் வடக்கே அவளுக்குக் காவலென ஓங்கி வளர்ந்திருந்த அரசமரத்தினடியில் வைரவசூலம் கொண்ட சிறு பீடமமைந்த, சிறு கோயில், சீமெந்தினால் எப்போதோ பூசப்பட்ட தரை. இடுப்பளவு உயரம்வரை உயர்ந்திருந்து இன்று குட்டிச்சுவராய்ப்போன சுவர்.. அச்சுவரின் ஒரு பாகம் என அடிபெருத்து உயர்ந்திருந்தது அந்த அரசமரம்... அதன் வெளிப்பாகத்தில் பின்புறத்தில் ஒரு காலப் பாம்புப் புற்றுக்களோ... கறையான் புற்றுக்களோ என இனம் பிரித்தறியா நிலையில் மழையில் நனைந்தும், கரைந்தும், உருக்குலைந்தும், வெயிலில் காய்ந்தும், இறுகியும் மெருகூட்டப்பட்டும், பலதுளைகளிடப்பட்ட மண்மேடு சுற்றுச்சுவரின் பெரும் பகுதியை ஆக்கிரமித்து இருந்தன. நாலைந்து ஏக்கர் பகுதியினைக் கொண்டிருந்த கோயிலுக்குச் சுற்றுமதில்களோ எல்லைகளோ இல்லை. ஆயினும் எல்லா தறைகளிலும் ஆங்காங்கு இத்தகைய புற்றுக்கள் சின்னதும், பெரியதுமாக காணப்பட்டாலும் அவற்றிடையே ஏதோவொரு நேர் ஒழுங்கு இருப்பது போன்று புற்றுக்கள் காணப்பட்டன. சமீபகாலமாக, சுற்றுப்புறங்களைச் சூழ்ந்து துர்நாற்றம் பரவிக் கொண்டிருந்தது. அயலில் வயிற்றோட்ட நோய் மக்களிடம் மெல்ல மெல்ல உறவு கொள்ள ஆரம்பித்தது.

காலையிலேயே அடிவளவுக்குச் சென்றுவிட்டு, கிணற்றில் வாளியை விட்ட கிழவருக்கு, வாளி பட்டைக் கிடங்கில் "டங்" என்று இடித்தபோது புண்ணிலே புளிப்பத்தினது போல் எரிச்சல் மூளையைத் தாக்கிற்று.

நீர் கிணற்றினடியில் கிடந்தது.
நீர் எங்கே போயிற்று?

தலை நிமிர்ந்தார் அவரது வளவும் நாலைந்து ஏக்கருக்குக் குறையாது. உறுதியில் இருப்பது என்னமோ மூன்று ஏக்கர் தான். எப்படி நிலம் வளர்ந்தது என்பது புரியாமல் எழுத்துக்கு மேலாக நிலத்தை வளர்த்திருந்தார். பனங்காணியளை ஆர்வந்து அடிக்கடி பார்க்கப் போகிறார்கள்? அளக்கப்போகிறார்கள்? ஆனால் அவர் மட்டும் ஆண்டுக்காண்டு வளவைத் துப்புரவு செய்து எல்லை வேலிகளுக்குப் புதிய 'கதியால்' நட்டு, பட்டுவிழுந்த கதியால்களை கறையான் நீக்கி வீட்டுக்கு விறகாக்கி கம்பிகளைக் கழட்டிப் புதிய கதியால்களில் அடித்து வேலியை ஒழுங்காக்கி மீளும்போது காற்பரப்புத்தறையாவது கூடியிருக்கும். அந்தப் பகுதிகளில் மாங்கன்றுகளையோ, தென்னங்கன்றுகளைச் சற்றுப் பெரிதாகப் பார்த்துக் கொண்டு வந்து நட்டுவிடுவார். இனி ஆராவது கேட்டால் 'எவ்வளவு காலத்திய மரம்.. என்ர அப்பன் பூட்டன் நட்டது... இப்ப உங்கட நிலமென்று சொல்லுறியளோ' என்று குரல் மேலெழும்ப அயல் சனமும் செவி பொத்தி, வாய் பொத்தி நின்று விடுவர். அவரும் நீண்ட காலம் அரச உத்தியோகத்தராக தெற்கே கனகாலம் வேலை பார்த்ததில் சட்டத்தின் அறிவு நெளிவு நன்கு புரிந்தவர்.

இவை ஒரு கண்டறியாத போராட்டம் நடத்துகினம்... இப்ப என்ன குறை எங்களுக்கு. சொத்து சுகமெண்டு ஏராளம் எனக்கு இருக்கு... இதுகளையெல்லாம். நிம்மதியாக.. ஆறுதலாக நிண்டனுபவிக்க விடுறாங்களே.. இப்ப பாரன்... பென்சன் காலத்தில நிம்மதியா இருப்பம் எண்டு இங்க வந்து வீட்டைத் திருத்தி.. கிணத்தைக்கிண்டி... நாலு பச்சைப் பயிர்களை நட்டு சீவிக்கலாம் எண்டால் விட்டுவைக்கிறாங்களே.. உவையின்ர திமிரில என்னென்னமோ நடத்திச்சினம்.. இப்ப பாரன் உள்ளதையும் இழந்து இடுப்பில துண்டைக்காணம்.. துணியைக்காணம் எண்டு ஓடி வருகினம்.. உவையளை இங்க ஆர் வரச்சொன்னது? நாங்களே சண்டை பிடிக்கச் சொன்னனாங்கள்? இப்ப இங்க ஏன் ஓடி வருகினம்? இவை வந்து எங்கட நிம்மதியையும் எல்ல போக்காட்டினம்..? நாளைக்கு இங்க வந்து அவன் குண்டு போட்டா.. ஆர் சீரழியப் போறது..? அவையளோ, நாங்களோ?.. அவருக்கு விஷம் தலைக்கேறும். ஒரு போதும் இறங்குவதில்லை. விஷம் விஷமாக மண்டை முழுதும் நிரம்பித் தளும்பிக் கொண்டிருக்கிறது.

'இஞ்சபார்! இதுகளைத் தண்ணி எடுக்க விட்டதால கிணத்தில கூட ஒரு சொட்டுத்தண்ணியில்ல.. இனி ஊறினாத்தான் தண்ணி..!'

மெல்லிய காலைத் தென்றல் வீசி அவர் மேனியைச் சிலிர்க்கச் செய்தது. அதனுடன் வந்த அந்தத் துர்நாற்றம்...?

'நாசகாலியள் வந்து நீரைக்கெடுத்து... நிலத்தைக் கெடுத்து...'

'இதுகள் வரத்தொடங்கினதிலயிருந்து எத்தினை கஷ்டங்கள் எங்களுக்கு..? சாமான் சக்கட்டெல்லாம் விலையேத்திப் போட்டினம்... காய்கறிக்கும் பஞ்சம்.. நாலாபக்கத்தாலயிருந்தும் முந்தி எவ்வளவு மீனை.. றாலை.. கணவாயை... நண்டெண்டு வந்து குவிஞ்சுது... எவ்வளவத்தைத் திண்டம்... இப்ப கடலுக்குப்போகப் பயப்படுகினம்... பக்கத்தில கடல்.. மீனின்ர விலையை நினைச்சுப் பார்க்க முடியாது... அண்டைக்கு மீன்பெட்டிக்காரன் எனக்குப் புதிசா மீன் காட்டுறான். எங்கையோ ஆரோ எறிஞ்ச பேத்தைக் குஞ்சுகளை கடக்கரையில கிடந்து அள்ளிக்கொண்டு வந்து விலை பேசுறான்.. என்னெண்டு கேட்டா.. விலை கிலோ இருநூறு ரூபா எண்டிறான்.. என்ன வால் பேத்தைக்கோ எண்டு கேட்க.. சிரிக்கிறான் 'ஐயா'.. இது பாரைப்பேத்தை கண்டியளோ!.. என்கிறான்.

'எல்லாம் கலி முத்திப் போச்சு'

'ஆமான கறி, புளி திண்டு எவ்வளவு காலமாப்போச்சு பெட்டிக்காரனும் ஏதும் நல்லதை நறியதைக் கொண்டுவாறானே? அதுவுமல்ல... இனி நாங்கதான் மீன்பிடிக்கப் போகவேணும்.. வேட்டைக்குப்போக வேணும்... அதுக்கு வெடிக்கு எங்கபோறது? இறைச்சி என்ன விலை விக்குது?...' மீண்டும் வீசிய காற்று அவர் பார்வையை திசைதிருப்பியது கோயில் சுற்றுப்புறங்களிலிருக்கும் மக்களின் இயற்கை உபாதைகளின் கழிவுகள் துர்நாற்றத்தைச் சுமந்து வந்தது.

இவற்றையெல்லாம் பார்க்கப் பார்க்க கிழவருக்குப் பற்றியெரிந்தது. 'ஆரைக்கேட்டு இவங்கள் இங்க வந்து இப்படி ஆசாரங்களை நாசம் செய்யிறாங்கள்... கோயிலெண்டாப்போல கண்டபடி நடக்கிறதே.. ஐயர் வந்து பூசை செய்யக்கூடியமாதிரியே எல்லாமிருக்கு.. கோயிலுக்கு வரலாம், போகலாம். இப்படி வந்து குடியிருக்கலாமே?.. அப்படி வந்து குடியேறுறதெண்டாலும் என்னட்டை ஒரு வார்த்தை கேட்க வேண்டாமே?.. இதாற்ற கோயில்..? எங்கட பரம்பரை பரம்பரையாக எங்கட குடும்பத்திற்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அடையாளம்

**த. அகிலன்**


ஓவியம் புகழேந்தி

நீ புதியவன்
உனது முகவரிகள்
எனக்கு பரிச்சயமற்றவை
ஆனாலும் - என்
தெருக்களில் நீ நடமாடினாய்
அப்போது உன்னை
விருந்தாளி என நினைத்தேன்
உனது
அடையாளம் பற்றியோ
பூர்வீகம் பற்றியோ எனக்கு
அக்கறையில்லை - ஏனெனில்
நான் நிரந்தரமானவன் - நீ
என் பூர்வீகம் பற்றியும்
அடையாளம் பற்றியும்
விசாரித்தபோது
அறிந்துகொள்ள என
அனுமதித்தேன் - நீ
அதையும்மீறி என்
கோவிலிற்குள்
சப்பாத்துக் கால்களுடன்
நடமாடியபோதும்
எனது தோட்டத்தில்
உனது இஷ்டத்திற்கு
பூப்பறித்தபோதும் எனது
வாழ்வை நீ தீர்மானிப்பதாய்
உணர்ந்தேன்
இனியும் எனது அடையாளங்களை
நீ நசிப்பதை என்னால்
அனுமதிக்க முடியாது
அதனால்தான் - உன்
அதிகார வேர்களை
என் அடையாளங்களின்
மீதிருந்து பிடுங்கி எறிந்தேன் - உன்னை
அழிப்பதுவல்ல என்நோக்கம் - என்
அடையாளங்களை பாதுகாப்பதே
ஆனால் இப்போதும்
வா மனிதா
வந்து உட்கார்
என்னோடு சரிசமமாய்
உனது செவிகளில்
எனது பாடல்கள்...
கீதா சாரமாய் தேவையில்லை.
ஆனாலும் உன்னோடு
ஒத்துப்போவதில் எனக்கு
துளியும் வருத்தமில்லை - நீ
என்சனங்களின்
அடையாளங்களினை
மதிப்பாய் எனின்
உன்னோடு ஒத்துப்போவதில்
எனக்கு துளியும் வருத்தமில்லை
ஏனெனில் - என்னோக்கம்
அடையாளங்களை
பாதுகாப்பதே...

www.tamilarangam.net



த. மலர்ச்செல்வன்

*கவிதைகள் இரண்டு*

துட்டகைமுனு
எழுந்தான்
எல்லாளன்
மைந்தர்களின்
ரெத்தத்தைப் புசித்து
நீண்டநாளாய்ப் போயிற்று
பல்லைக் கட்டியிறுக்கிக்
கடித்து
கையில் வாளை
எடுத்தான்.

வெஞ்சமரில்
முட்டிமோதிய கேடைய
ஓசை
காதோரமாய் ரீங்காரம்
மீண்டது
பயந்து நடுங்கினான்.

புரவியில் தாவியேறியவன்
இது எந்தன் நாடு!
புத்தனின் புனிதநாடு!
இங்கு
யாருக்குமிடமில்லை.

நட்டுவக்காலிகளுக்கு
நம் தேசத்திலிடமா?
இல்லை... இல்லை..

2

இது எங்களுக்குமான பூமி
நாகரும் அரக்கரும்
நலமுடன் வாழ்ந்த நாடு!

எல்லாளன் உயிர்த்தான்

யுத்தவிதியே தெரியாத
கெமுனுக்களுடன்
இன்னுமென்ன பேச்சு
கையில்
வாளையெடுத்தான்
புரவி காற்றைக் கிழித்துப்
பறந்தது.



www.tamilarangam.net



# யுத்தம் தொடங்கா முன் காலத்தில்

காலம் யுத்தத்தையே திறக்க
முயல்கிறது.
எந்தச் சலனமற்றும்
புயற் காற்றைக் கூட
அமைதியாகப் பார்த்து நிற்கும் நாம்.
வேண்டுமென்றே சீண்டிச்சீண்டி
எம்மை மீண்டும்
களத்திற்கு அனுப்பமுயல்கிறது.

நாம் ரெத்த வெறியர்களல்ல
எம் சுய இருப்பு வேள்விக்காய்
தீயில் இறங்கியவர்கள்
இன்று உங்கள் சோதனை ஒவ்வொன்றுக்கும்,
தலை குனிந்து
பல்லைக் கடித்துக் கொண்டு
நிராயுதபாணியாய் நிற்கவேண்டியுள்ளது

எத்தனை நாட்களுக்குத்தான்
இப்படி நிற்பேன்?

ஒரு எல்லையற்ற மேற்பரப்பில்
தொங்குகின்ற எனது வாள்

கடைசிக் காலத்தின் இறுதிவரை
மூச்சை உள்ளிழுத்து
எம்மீது பழியை அள்ளிவைத்து

உலகம் பூராக் கொக்கரிக்க
முடியாக் காலம் வரை

எனது தலை தொங்கிக் கொண்டு
எனது கைகள் கட்டப்பட்டு

எனது வாள் தொங்கிக் கொண்டேயிருக்க
நிராயுதபாணியாய்
காலத்தின் முன் நிற்பேன்.



விடுதலைப் புலிகளின் புகைப்படப்பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூடு

வெண்மையான பூக்களினால் போர்க்கப்பட்டிருந்த நித்தியகல்யாணி மரத்தில் எப்போதும் போலவே என் விழிகள் சிக்கிக்கிடக்கின்றன. ஒரு சிறு குழந்தையின் தொடுகைபோல இதமாக வந்து வருடிச் செல்லும் கடலலையின் மெல்லிய சலசலப்புக்கூட என் கவனத்துள் நுழையவில்லையென்றால், அந்தப் பூமரத்தில் அப்படி என்னதான் புதுமையிருக்கிறது?

பாரிசவாதம் வந்ததிலிருந்து என் வாழ்க்கையின் வரண்ட ஆறுவருடங்கள் இந்தச் சின்ன அறையினுள்ளேயே சிறைப்பட்டிருக்கின்றன. என்னைப்போலவே தள்ளாடும் சாய்மனைக் கதிரையும், சுவரோரமுள்ள அழுக்கேறிய மரக்கட்டிலுமே அறையிலுள்ள மற்றிரு சடங்கள். இடையிடையே என்னையுமறியாமல் கழியும் சிறுநீரின் மணம் எனக்கு மிகவும் பழகிவிட்டாலும், என்னுள்ளே அமுங்கியிருக்கும் உணர்வுகளைப்போல அதுவும் இங்கேயே உறைந்து கிடக்கிறது. வெளியுலகச் சலனங்களுக்கும் எனக்குமிடையே வேலிபோல எழுந்து நிற்பது இந்த யன்னல் ஒன்றுதான்.

இந்த யன்னலினூடான என் மனத்தொடர்புகளுள் முக்கிய இடம் வகிப்பது, இப்போது என்னுடைய பார்வை வீச்சினுள் அகப்பட்டிருக்கும் அந்தத் தேன்கூடு மட்டுமே. அது இப்போது மிகத்தெளிவாகத் தெரிகிறது.

கருமணிகள் பலவற்றை ஒன்றுசேர்த்து இழைத்தது போல இலேசான மினுமினுப்புடன் காணப்படுகின்றது. ஆழக்கடலின் அமைதியும், சாம்பலிலுள்ள தணலின் 'அமுக்கமும்' அதிலே தெரிகிறது. நித்தியகல்யாணி மரம் காலைவெயிலில் குளிப்பது முதல், இருட்டில் பனியில் நனைவதுவரை யன்னலினூடாக விழிகளை எறிந்து கொண்டிருக்கும் எனக்கு இந்தத் தேன்கூட்டின் கதை தெரிந்தவொன்று.

அன்றொருநாள் ஒற்றைத் தேனீயாக அது வந்தமர்ந்தபோது அதன் ஒவ்வொரு அசைவையும் நுணுகி அவதானிக்க முடிந்தது. தனது சிறகுகளை வேகமாக அடித்து உலர்த்தி, முன்னங்கால்களால் முகத்தைத் தேய்த்துக் கொண்டது. பின்னர், மெல்லக்கிளம்பி அங்குமிங்கும் பறந்துவிட்டு எங்கோ தொலைந்தது.

சற்றுநேரங்கழித்து இரண்டு தேனீக்கள் அதே கிளையில் வந்து அமர்ந்தன. அவற்றிலொன்று முன்னர் வந்ததாக இருக்கலாம். பார்த்துக்கொண்டிருக்கவே அந்த அதிசயம் என் கண்முன் நிகழ்ந்தது. அடுத்தடுத்து ஒன்றன்பின் ஒன்றாக வந்துசேர்ந்த தேனீக்கள் ஒன்றைப்பற்றி இன்னொன்றாகத் தொங்கின. வர வர அவற்றின் எண்ணிக்கை அதிகரித்தது. பத்து நூறாகி... நூறு ஆயிரமாகி...!

□□□


எனக்கு அவனுடைய முகம் நன்றாக நினைவிலிருக்கிறது. அவனைக் கண்டு நீண்ட காலமாகிவிட்டாலுங் கூட அவனைப் பற்றிய நினைவுப் படிவுகள் என்னைவிட்டு அகலவில்லை. சிற்சில சம்பவங்களால் அவை இடையிடையே கிளறப்படும்போது அவ்வுணர்வுகள் அடங்க வெகுநேரமாகும். அவனுக்கு ஆறேழு வயதாயிருக்கும் காலத்தில் அடிக்கடி என் வீட்டுக்கு வருவான். அவனுடைய தந்தை என்னுடன் ஆசிரியராகக் கடமையாற்றியவர். அத்துடன், அவன் எனக்குத் தூரத்து உறவுங்கூட.

ஓடி வருபவனின் விழிகள் இயல்பாகவே என் மனைவியைத் தேடும். 'புண்ணாக்கு' என்றால் அவனுக்கு வெகு பிரியம் என்பது என்னுடைய மனைவிக்குத் தெரியும். அவனுக்காகவே விசேடமாக இடித்துச் சாடியிலிட்டு வைப்பாள்.

கிணற்றடியில் மதாளித்த கப்பல் வாழையின் கனிந்த பழங்களும் அவனுக்காகவே காத்திருக்கும்.

அவனுடைய வளர்ச்சி எனக்குள் ஒருவித பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தது. வயதுக்கு மீறிய சிந்தனைகள் அவனை ஆக்கிரமித்திருந்தன. அச்சிந்தனைகளின் வெளிப்பாடுகளாக அவனுடைய செயல்கள் சிலசமயம் தீவிரத்தன்மை கொண்டதாக அமையும். ஐம்பத்தெட்டுக் கலவரத்தின் பாதிப்புக்கள் அவனில் மிகுதியாகத் தொற்றியிருந்தன.

தனிமையினுள் அமிழ்ந்து கிடக்கும் பொழுதுகளையே பெரும்பாலும் அவன் விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும், சிலகாலம் கழிய அவனுடன் இன்னொரு இளைஞனையும் காணமுடிந்தது. பின்னர் வேறொருவனும் இணைந்து கொண்டான்.



www.tamilarangam.net



இப்படி ஒரு சிறு குழுவாகவே வீதிகளில் திரிந்தார்கள்.

பிந்திய காலங்களில் அவன் என் வீட்டுக்கு வருவதேயில்லை. வெகு அபூர்வமாக வீதியில் காணும்போது உரமேறிய உடலுடனும், பரபரப்புத் தோற்றிய கூர்மையான விழிகளுடனும் சிறு தலையசைப்பினை மட்டுமே உதிர்த்துவிட்டுச் செல்வான்.

பிறிதோருநாள் முழுநிலாக்கால முன்னிரவில் அவன் கரைந்தே போனான். அவன் தேடப்படுகிறான் என்பதை அப்போதுதான் அறிந்து கொண்டேன்.

அதற்குப்பின்னர் அவன் என்னுடைய விழிகளில் தட்டுப்படவேயில்லை.

□□□


தேனீக்கள் தாக்குந் திறன் கொண்டவை. தாங்கள் கட்டிய கூட்டுக்கு எதனாலாவது அபாயம் ஏற்படும்போது அவை விரைந்து சென்று கொட்டிவிடும். குறித்த எல்லைவரை துரத்தித் தாக்கும். சிலவேளைகளில் தங்கள் உயிரைக்கூட இழக்கும்.

இத்தகைய ஆபத்துக்கள் பற்றிய அறிவையும், அவற்றை எதிர்க்கும் உத்வேக உணர்வையும் தேனீக்கள் ஒன்றிலிருந்தே மற்றொன்று கற்றுக்கொள்ளும். இப்போது பெரியனவாகவுள்ள தேனீக்களெல்லாம் ஆரம்பத்தில் அந்த ஒற்றைத் தேனீயிடமிருந்தே அவ்வுணர்வைப் பெற்றிருக்கலாம்.

தேனீக்களின் முக்கியமான இலக்கு பூக்களிலும், பழங்களிலும் பொறுக்கியெடுக்கும் தேன் ஒன்றுதான். ஆனாலும் அவை பாடும் பறந்து ஆடும். ஒன்றாகிக் குதூகலிக்கும்.

தேன் சேகரித்தல் என்பது பல்கிப் பெருகிய அவற்றுக்கான தேவை என்பதற்கு மறுதலையாக, தேன்சேகரிப்பதற்காகவே எண்ணிக்கையில் விருத்தி ஏற்படுகிறதோ எனவும் நான் நினைப்பதுண்டு. கொஞ்சநாட்காளகவே இந்தத் தேன்கூடு அமைதியாகக் கிடக்கிறது. அசையுங்காற்றுக்கூட ஏதோவொரு சிந்தனையில் ஆரவாரமிழந்திருக்கிறது. ஆர்ப்பரிக்கும் அலைகளும் அடக்கி வாசிக்கின்றன. இவ்வாறான புறநெருக்கீடுகள் இல்லாததால் தேனீக்கள் இப்போது உக்கிரங் கொள்வதில்லை. ஆனாலும், அவை தங்களுடைய வழமையான பணிகளில் ஈடுபட்டுக்கொண்டுதானிருக்கின்றன.

நீண்ட தொடர்ச்சியான அவதானிப்பின் இடைநிலைகளில் ஒன்றிற்கூட அந்த ஒற்றைத் தேனீயின் உருவத்தை வேறு பிரித்து இனங்காண என்னால் இயலவில்லை.



ஆனாலும், அங்குள்ள ஒவ்வொரு தேனீயிலும் அது ஒளிந்திருக்கிறது. அவை ஒவ்வொன்றையும் அது ஆத்மார்த்தமாக இயக்குகிறது... அவனைப் போலவே..!

அவனும் இப்போது அமைதியாகத் தானிருக்கிறான் என்று கேள்விப்பட்டேன்.

□□□

'டொக்' என்ற ஓசை, காட்சிப்புலத்திலிருந்து விடுபட்டு என்னுள்ளே கட்டவிழ்த்துப் பாய்ந்த எண்ணக் குதிரையை இழுத்துப்பிடிக்கிறது.

திரும்பிப் பார்க்கிறேன்.

என்னுடைய மகள் தேநீரை வைத்துவிட்டுப் போகிறாள். பெருமூச்சு விட்டுக்கொண்டே அதை எடுக்கிறேன். தேநீர் அளித்த உற்சாகத்துடன் பக்கத்திலே கிடந்த தடியை எடுத்து ஊன்றிக்கொண்டு எழுகிறேன். யன்னலோரமுள்ள மரக்கட்டிலில் சற்றுநேரம் சரியும் உத்தேசம் எனக்கு. கட்டிலில் அமர்ந்த என்னை வெளியே கேட்ட கூச்சல் திரும்ப வைக்கிறது.

எட்டிப்பார்க்கிறேன்.

என்னுடைய பேரனும், அவனையொத்த நான்கைந்து 'வட்டுக்களும்' ஆரவாரமாக ஓடித்திரிகிறார்கள்.

அவர்கள் அவனுடைய வகுப்புத் தோழர்கள் போலும், கட்டிலில் அமர்ந்தபடி அவர்களின் விளையாட்டை ரசிக்கிறேன்.

கண்ணுக்கெட்டிய தூரத்தில் நீலக்கடல் முறிந்த தென்னைகளுக்கூடாகத் தெரிகிறது. கரையோரம் இடிந்து கிடக்கும் வீடுகளின் நடுவே முருகைக்கற்களில் முளைத்த காவலரண்களில் ஓரிரு உருவங்கள் அசைவதும் மங்கலாகத் தெரிகிறது. வெகுதொலைவில் கடலின் விளிம்பில் டோறாப் படகொன்று கிழக்காக விரைகிறது.

புகையிலைக் காரத்துடன் தொண்டைக்குள்ளே கரகரத்த சளியை வெறுப்புடன் காறித்துப்புகின்றேன்.

அந்தச் சிறுவர்களில் ஒருவன் திடீரென்று கத்தியபடி துள்ளிக் குதிக்கிறான்.

உடுவில் அரவிந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"டேய்! அங்க பாரடா!"

அவனுடைய சின்ன விரலின் வழியே திரும்பிய எனக்குப் பகீரென்றது. அந்தத் தேன்கூட்டிலேயெ அவர்கள் அத்தனைபேருடைய விழிகளும் ஆவலாய் மொய்த்துக்கிடக்கின்றன.

மறுகணம், விர்ரென்று கற்கள் பறக்கின்றன.

"வேண்டாம்! வேண்டாம்!"

என்னுடைய குரல் குழறலாகத் தேய்கிறது.

கற்கள் படும் ஒவ்வொரு தடவையும் தேனீக்கள் கலைந்து மறுபடியும் அடங்குகின்றன. அவர்கள் திரும்பத் திரும்ப எறிகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் கூட்டிலிருந்து ஒரு துண்டு பெயர்ந்து விழுகிறது.

தொடர்ந்து நிகழ்ந்த பயங்கரத்தைக் காணச்சகியாமல் கண்களை இறுக மூடிக்கொள்கிறேன்.

அவர்கள் ஓடி மறைந்த பின்னருங்கூட அந்த அவலக்குரல்கள் ஒலித்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை எனக்கு.


கண்களை மெல்லத் திறந்து பார்க்கிறேன்.

தேனீக்கள் இன்னமும் ஓயவில்லை. அங்குமிங்கும் பறந்தபடியிருக்கின்றன. அவற்றுட் பல நித்தியகல்யாணியின் இலைகளிலும், அருகிலுள்ள தென்னோலைகளிலும், வேலிப்பூவரசின் பசிய இலைகளிலும் அமர்ந்திருந்து தங்கள் அமைதியைக் குலைத்தவர்களை ஆத்திரத்துடன் தேடுகின்றன.

சுற்றியுள்ளவற்றையெல்லாம் இருள் விழுங்கிக்கொண்ட பின்னரும் என்னுள்ளே அலைபோலப் புரண்டெழும் உணர்வுகளிலிருந்து மீளமுடியாமல் தவிக்கிறேன்.

காற்றுடன் போரிடும் கடலின் பேரிரைச்சல் இருட்திரையைக் கிழித்துக் கொண்டுவந்து என் செவிப்பறையைச் சிதறடிக்கிறது. தேனீக்களின் சிறகசைப்பும், ரீங்காரமும் இப்போதும் கேட்டுக்கொண்டு தானிருக்கின்றன.

இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் நுணுகியறியக்கூடிய நீண்ட அனுபவமுள்ள எனக்குப் புரிகிறது, அவனுடைய பொறுமை கொஞ்சமாக அழிக்கப்பட்டு வருகிறதென்று.



## அன்றும் இன்றும்

அன்று.........

அந்தப்பாதையினிடை
ஆள் நடமாட்டமேயில்லை
அங்கொன்றும்
இங்கொன்றுமாய்
நாய்கள் கூட்டம் மட்டும்
நடமாடித் திரியும்.

இன்று........

அதே பாதைதான்
ஆனால் நாய்களங்கில்லை
நாலான மனிதர் கூட்டம்
நசுங்கி போகுதடி

அன்று..........

அச்சம்
அதுமட்டுந்தான்
மிச்சமாக எம்மிடத்தில்
இருந்த வீட்டையும்
எல்லா உறவையும்விட்டு
எங்கோ ஓர் முகாமில்
ஏக்கத்துடன் வாழ்ந்தாலும்

இன்று...............

அச்சம் பனியாய் உருக
மனதில் உச்சம் கண்டமகிழ்ச்சி
முகாம் வாழ்வுக்கு - ஓர்
முற்றுப் புள்ளி
மிச்சமாய் இருந்த வீட்டில்
மீளக் குடியேறினோம்

அன்று...........

பக்கத்து வீட்டுக்கு
பந்து யார் போனாலும்
பைக்குள்ளே
காட் இல்லை என்றால்
கடையில் சாமான் இல்லை
காசு இருந்தாலும்
கடையில் சாமான் இருந்தாலும்
பாஸ் இல்லை என்றால்
பச்சத் தண்ணியுமில்லை

இன்று.........

அடையாள அட்டைகள்
அடிப் பெட்டிக்குள்ளே
காட்- எதற்குத் தேவை
பாஸ்- என்றால் என்ன?
வேண்டிய பொருட்களை
விருப்பப்படி வாங்கலாம்
தடை என்று ஏதுமில்லை
எல்லாம் தாராளம்

அன்று.............

செக் பொயின்டில்
எம்மை நிறுத்திவைத்து
தடவி தடவிப் பார்த்து
தமிழனா நீயென்று
தட்டி உறுட்டிடுவர்

இன்று...............

புரிந்துணர்வு வந்து
பொயின்டில் இறங்கவில்லை
போய் வரவும் தடையில்லை
தமிழரோடு சிங்களவர்
அவர்களோடு முஸ்லீமும்
முக்காலி போல் வாழும்
முடிவொன்று வந்தாச்சாம்!
நீ நம்புகிறாயா?

**மாணிக்கன் இளங்கோ**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆபிரிக்க – அமெரிக்கக் கவிதை

# என் மக்களுக்காக



எங்கெங்கும்

திரும்பத் திரும்ப அடிமைப் பாடல்களும்
ஒப்பாரியும் கும்மியும் தெம்மாங்கும் பாடும்
என் மக்களுக்காக
கண்காணா சக்திக்குமுன் முழந்தாளிடும்
அறியாத கடவுளை இரவிரவாக வழிபடும்
என் மக்களுக்காக!

போய்த்தொலைந்த ஆண்டுகளுக்கும்
நிகழும் ஆண்டுகளுக்கும்
வரப்போகும் ஆண்டுகளுக்கு வலுச்சேர்த்து
துணி துவைத்தும் கழுவியும் சமைத்தும்
திருத்தியும் தைத்தும்
கொத்தியும் உழுதும்
கிண்டியும் விதைத்தும்
வெட்டியும் ஒட்டியும்
பயன் காணாது
அறுவடை செய்யாது
ஏதும் அறியாது
ஏதும் புரியாது
காலங்கழிக்கும் என் மக்களுக்காக!

அலபாமாவின் மணலிலும் புழுதியிலும் புரண்டு
திருமுழுக்காட்டியும் போதித்தும் விளையாடும்
என் விளையாட்டுத் தோழர்களுக்காக,
மருத்துவர், சிறையதிகாரி, போர்வீரர், ஆசிரியர்
சமையலாள், நடிகர், வணிகர், செல்வி கூம்பி
முதலியோருக்காக

காரணம் என்ன?
ஆள்கள் யாவர்?
இடம் எங்கே?
எந்நாள்?
என்ற கேள்விகளுக்கு விடைகாண
நாங்கள் பள்ளிக்கூடம் சென்று முடங்கிய
ஆண்டுகள்
நாங்கள் கறுப்பர், நாங்கள் ஏழைகள்,
நாங்கள் சிறியோர், நாங்கள் வேறானவர்கள்,
என நாங்கள் உணர்ந்த
அக்கசப்பான பொழுதுகளில்
யாரும் ஏன்' என்று கேட்கவில்லை
யாரும் புரிந்து கொள்ளவில்லை

இவற்றுக்கப்பால் போய்
மனுஷனாய் மனுஷியாய் மலர்ந்து
சிரிக்கவும், ஆடவும், பாடவும்
விளையாடவும் உவைன் பருகவும்
சமயம் அனுஷ்டிக்கவும், வெற்றியடையவும்
திருமணம் புரியவும் பிள்ளை பெறவும்
காச நோயாலோ சோகை பிடித்தோ
இனக்கொலைக்காளாகியோ
சாகவும் நேர்ந்த
பையன்களுக்கும் பெண்களுக்குமாக.

சிக்காகோவின் 47ஆம் தெருவிலும்
நியூயோர்க்கின் லெனொக்ஸ் ஒழுங்கையிலும்
நியூ ஓர்லியன்ஸின் றம்பாட் தெருவிலும்
கூடும் எல்லாம் இழந்த என் மக்களுக்காக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காபரேக்கள் தவறணைகளை நிறைக்கும்
பாணும் பாலும் சப்பாத்தும்
காணியும், பணமும்
அவற்றுக்கப்பால், தமக்கென ஏதோ ஒன்றும்
தமக்கென்றே வேண்டும்
மகிழ்ச்சிகரமான மக்களுக்காக.

குருட்டாம் போக்கில் நடந்துகொண்டு
ஆனந்தத்தைப் பரப்பும்
சோம்பியிருப்பதில் காலங்கழிக்கும்
பசித்தால் உறங்கி
சுமைகூடினால் சத்தமிட்டு
நம்பிக்கையிழக்கையில் குடித்து
தம்மை நசுக்கி நகைக்கும்
கண்காணாப் பிராணிகளால்
கட்டுண்டு, விலங்கிடப்பட்டு
தமக்குள்ளேயே சிக்குப்படும்
என் மக்களுக்காக.

குழப்பத்திலிருந்தும்
ஆசாட பூதித்தனத்திலிருந்தும்
தப்பபிப்பிராயத்திலிருந்தும்
நல்லதொரு வழியைக் காணும் முயற்சியில்
வெறித்த பார்வையோடு நிற்கும்
எல்லா மக்களையும் எல்லா முகங்களையும்
எல்லா ஆதாம்களையும் எல்லா ஏவாள்களையும்
அவர்களின் எண்ணிறந்த தலைமுறைகளையும்
உள்வாங்கக் கூடிய
ஒருலகத்தை உருவாக்க முயலும்
என் மக்களுக்காக.

புதியதொரு பூமி எழுக
இன்னோர் உலகம் பிறக்கட்டும்
குருதிதோய்ந்த சமாதானம் வானத்தில்
எழுதப்படுக!

றை





தேவாலயங்கள், பாடசாலைகள்,
கிளப்புகள், சங்கங்கள், மன்றங்கள்,
சபைகள், குழுக்கள், மாநாடுகள்
இவற்றின் இருளில்
தடுமாறி, தடவி, தவறும்
என் மக்களுக்காக.

பணப்பேய் பிடித்த புகழ் ஆசை பிடித்த
அட்டைகளால் துன்புறுத்தப்பட்டு
குழப்பப்பட்டு ஏமாற்றப்பட்டு
அரச அதிகாரத்துக்கும்
பொய்த்தீர்க்க தரிசிக்கும்
பரிசுத்த விசுவாசிக்கும் இரையாகும்
என் மக்களுக்காக.

தோன்றுக
விடுதலையை அவாவும் மக்கள் வளர்க
எங்கள் குருதியிலும் எங்கள்
ஆத்மாவிலும்
இறுதியானதோர் உறுதி துடித்து அழகு
சேர்வதாக
ஒப்பாரிகள் அடங்கி, பரணிகள்
இயற்றப்படுக
மனிதரைக் கொண்ட ஓர் இனம் எழுந்து
உலகை நடத்துக.

மூலம்: மார்கறெற் உவாக்கர்
தமிழில்: சோ. பத்மநாதன்.

www.tamilarangam.net


# உங்கள் தேவைகள் என்ன?

வாழ்த்துமடல்கள் வடிவமைப்பா,
அழைப்பிதழ்கள் வடிவமைப்பா,
புத்தகங்கள் வடிவமைப்பா,
எந்தத் தேவையாயினும் நாடுங்கள்.

# நிலாபதிப்பகம்

பிரதான சாலை கிளிநொச்சி

அதி நவீன
கணினி
அச்சுமைப்பில்
விரைவாகவும்,
நேர்த்தியாகவும்,
அழகாகவும்
செய்து
பெற்றுக்கொள்ள்

# நிலா பதிப்பகம்

www.tamilarangam.net

# வெளிச்சம்

கலை, இலக்கிய சமூக இதழ்

திருமலையில்
2003 ஏப்ரல் 8. 9. 10. 11. 12 ல்
கலை, பண்பாட்டுக் கழகம்
நடாத்திய
மானுடத்தின் தமிழ்கூடல் II ன்
நிகழ்வுப் பதிவுகள் இவை.









